தினமணி வெளியீடு : 39

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

3274

# ஸங்கீத நவமணிகள்

எஸ். நீலம்,

உதவி ஆசிரியர் : "சுதேசமித்திரன்" சென்னை.

Y. M. C. ASSOCIATION PAGANERI.



PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்ட் ரோடு
சென்னை
1946

காபிரைட்]

[விலை ரூ. 1/-

கர்நாடக ஸங்கீதத்தில் நிறைந்த
ஞானஸ்தராக விளங்குபவரும், அக்
கலை திறம்பட வளரவேண்டுமென்ற
தீவிர சிரத்தை கொண்டவரும்.
“ ஹிந்து ”—பத்திரிகையின் நிர்வாக
ஆசிரியருமான

**ஸ்ரீ. கே. ஸ்ரீனிவாசன், பி.ஏ.,**

அவர்களுக்கு

# ஸமர்ப்பணம்

# பொருள் அடக்கம்


1. ஸ்ரீ. 'அரியக்குடி' ... 9
2. ஸ்ரீ. மகாராஜபுரம் விச்வநாதையர் ... 24
3. மழவராயனேந்தல் ஸ்ரீ. சுப்பராம பாகவதர் ... 33
4. சித்தூர் ஸ்ரீ. சுப்பிரமண்ய பிள்ளை ... 37
5. செம்மங்குடி ஸ்ரீ. ஸ்ரீனிவாஸய்யர் ... 45
6. முசிரி ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர் ... 62
7. ஸ்ரீ. ஜி. என். பாலசுப்பிரமணியன் ... 70
8. மதுரை ஸ்ரீ. மணி ஐயர் ... 84
9. பாலக்காடு ஸ்ரீ. மணி ஐயர் ... 94

# பதிப்புரை

இன்றைய தமிழக மறுமலர்ச்சியில் சங்கீதத்திற்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. சங்கீத அபிருசியாவது, இந்த ஜனநாயக யுகத்தில் பொது ஜனங்களுக்கிடையே முன்னிலும் அதிகமாய்ப் பரவி வருகிறது. நாடகங்களும் ஸினிமாக்களும் கர்நாடக சங்கீதத்தைப் பாதித்து வருகின்றன. தமிழிசை இயக்கமும் பொது ஜனங்களைப் பாதிப்பதோடு, சம்பிரதாயத்தை ஒட்டிக் கர்நாடக சங்கீதத்தைக் 'கண்ணினைக் காக்கின்ற இமைப்'போல் காத்து வரும் வித்வான்களுக்கும் ரஸிகர்களுக்கும் இடையிலும் ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

இந்நிலையில், எனது நண்பரும், ரஸமான ஸங்கீதக் குறிப்புக்களைப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வருபவருமான 'நீலம்' இயற்றிய இப்புஸ்தகம், சுத்தமான ஸங்கீதத்தை உள்ளபடி அனுபவிக்க விரும்பும் தமிழர்களுக்கெல்லாம் ஒரு நல்விருந்தாகும். வெறுப்பு விருப்புகளை இயன்ற வரையில் ஒதுக்கிவிட்டு, இவர் நேர்மையான நெறியிலேசென்று கர்நாடக ஸங்கீத உலகின் இன்றைய நவரத்தினங்களை நன்கு மதிப்பிட்டுக் காட்டுகிறார். இத்தகைய ஸங்கீதத் திறவுகோல் இதற்கு முன் வெளிவந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இத்துறையில் "நீலம்" செய்திருக்கும் இந்நன் முயற்சி இன்னும் பலருக்கும் நல்ல தூண்டுகோலாகும் என்று எண்ணுகிறேன். இவர் இத்துறையில் இன்னும் சில நூல்களை எழுதி, மற்றச் சங்கீதவித்வான்களையும் தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தி வைப்பார் என்று நம்புகிறேன்.

**பி. ஸ்ரீ.**
பதிப்பாசிரியர்.

# முகவுரை

கர்நாடக ஸங்கீதம் உன்னத நிலை அடைந்திருந்த காலம் சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன் என்று சொல்லலாம். ஆனால் ஸங்கீதத்தில் பொது ஜனங்களுக்கு அதிக உணர்ச்சி ஏற்பட்ட காலம் சுமார் இருபது வருஷங்களாகத்தான். எனக்குத் தெரிந்து இருபது, இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடந்த கச்சேரிகளில் கேட்பவர்களில் சில பேர்கள்தான் ஸங்கீத ஞானமுள்ளவர்களாயிருப்பார்கள். கச்சேரி கேட்க வரும் பல பிரபுக்கள் ஸங்கீத வித்வான் என்ன ராகம் பாடுகிறார் என்று பக்கத்தி லிருப்பவர்களைக் கேட்பது சகஜம். தற்காலத்தில் ஸங்கீதம் தெரியாதவர்கள் கச்சேரிக்கு வருகிறவர்கள் சிறுபான்மை யோர் என்றுதான் சொல்லலாம்.

கர்நாடக ஸங்கீதத்தை அனுபவிப்பவர்கள் ஜன சங்கி யையில் அதிகமாகப் பெருகியிருந்தும், அதற்குக் காரண பூதமாகவிருக்கும் ஸங்கீத வித்வான்களைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு விசேஷமாக ஒன்றும் தெரியாது. இக்காலத்தில் சில ஸங்கீத வித்வான்களுக்குக் கியாதி அதிக மாயிருக்கலாம். அவர்கள் கச்சேரி நடக்கும் இடத்தில் வரும் ஜனங்களும் அதிகமாக இருக்கலாம். அவர்களுக்குக் கொடுக்கும் தொகையும் பெரிதாயிருக்கலாம். ஆனால் இவையெல்லாம் 'அந்த வித்வானோ, வித்வான்களோ ஸங்கீதத்தில் மகா நிபுணர்கள்; அந்தத் தொழிலில் அவர் களைவிடப் பெரியவர்கள் யாருமில்லை' என்று சொல்வதற்கு ஓர் அத்தாட்சியாகாது. பொது ஜனங்களின் போற்றலும், ஸங்கீதத்தில் வல்லமையும் ஒன்றுகூடியிருப்பதில்லை. இதன் காரணம் என்னவென்று நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், நிச்சயமான காரணத்தைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம்.

ஸங்கீதானுபவம் என்பது மனிதனுக்குப் பிரத்தியேக மானது. ஒவ்வொருவன் ஒவ்வொரு சம்பிரதாயத்தில் ஸாரமும் ரஸமும் காண்கிறான். சிலருக்குச் சில கீர்த்தனைகள் தான் பிடிக்கும். சிலருக்குச் சில ராகங்கள் ருசிப்பதில்லை. பொதுவாகக் கச்சேரிகளில், 'இந்தப் பாட்டைப் பாட

வேணும்; அந்த உருப்படி பாடவேணும்' என்கிறார்களே அதற்குக் காரணமும் இதுதான். இதிலும், சில வித்வான் களின் கச்சேரிகள் சிலருக்குப் பிடித்திருக்கும்; சில வித்வான் களின் கச்சேரி சிலருக்குப் பிடிக்காது. அந்தமாதிரி வித்வான் பிடித்திருப்பதற்கும், பிடிக்கா திருப்பதற்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாது. பொதுஜன மனப்பான்மை இந்த மாதிரி யிருப்பதால், எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி யாகத் தற்காலம் பாடிக்கொண்டிருக்கும் வித்வான்களைப் பற்றியும், அவர்கள் பாட்டிலிருக்கும் விசேஷத்தைப்பற்றி யும் எழுதுவது கஷ்டம். இந்தக் கஷ்டமான காரியத்தைத் தான் ஸ்ரீ. நீலமேகம் கையாள முன்வந்திருக்கிறார்.

இவர் இப்புத்தகத்தில் எட்டுப் பாடகர்களைப் பற்றியும் ஒரு மிருதங்க வித்வானைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இவர்கள் எல்லோரும் தற்காலத்தில் ஜீவித்திருப்பவர்கள். ஸ்ரீ நீலமேகம், அவர்களிடமெல்லாம் பரிச்சயம் உள்ளவர். ஓரளவு சிநேகத்தையும் பெற்றவர். பின்வரும் பக்கங்களில் ஸ்ரீ. நீலமேகம், பொதுவாக இந்த ஒன்பது வித்வான்க ளுடைய விசேஷ அம்சங்கள் பற்றியே விஸ்தரித்துச் சொல்லி யிருக்கிறார். அந்த வித்வான்களிடத்தில் குறைகள் இருக்க லாம்; ஆனால் குறைகளை எடுத்துக்காட்டும் 'க்ரிடிக்' (Critic) என்று இவ்வாசிரியர் முன்வராததால், பொதுஜனங்கள் இந்த வித்வான்களிடம் எந்தெந்த அம்சங்களைக் கண்டு இவர்கள் பெரிய ஸங்கீத வித்வான்கள் என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை மாத்திரம் தெளிவாக வாசகர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்தமாதிரி ஸங்கீத வித்வான்களைப் பற்றித் தமிழில் இதற்கு முன் யாரும் எழுதினதில்லை.

சாதாரணமாக, ஜனங்களுக்கு அவரவர்கள் பிரத்தியேக மாகப் போற்றும் ஸங்கீத வித்வான்களைப் பற்றிக்கூட அதிக மாக தெரியாது. அவர்களுடைய பாட்டைப் பற்றியும், ஸங்கீத ஞானத்தை பற்றியும் பொதுஜனங்கள் அறிந்திருக் கலாம். ஆனால் அவர்கள் வரலாறுபற்றிப் பலருக்குத் தெரிந் திருக்காது. இந்தக் காலத்தில் ஸங்கீதத்திற்குச் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது. ஸங்கீத வித்வான்களுக்கும் செலா வணி அதிகம். பழையகாலத்தைப் போல, ஸங்கீத அபிமானி

களான சில பிரபுக்களை நாடி வெகு தூரத்திலிருந்து ஸங்கீத வித்வான்கள் கூழைக் கும்பிடு போடும் காலம் அல்ல இது. ஸங்கீத வித்வான்களுக்குப் பிரத்தியேகமாக அந்தஸ்து ஏற்பட்டிருக்கிறது. அவர்களை நாடிச்செல்பவர் பலர்; அவர்கள் சிநேகத்தைத் தேடிச் செல்பவர்கள் வெகுபேர்கள். இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் ஸங்கீதத் துறையில் முன்னணியிலிருக்கும் ஒன்பது வித்வான்களைப் பற்றி எழுதியிருக்கும் இந்தப் புத்தகத்துக்குப் பொது ஜனங்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

ஸ்ரீ. நீலமேகம் இப்புத்தகத்தில் ஸ்ரீ அரியக்குடி ராமானுஜையங்காருக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறார். இதற்கு யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஏனெனில், தற்காலத்தில் ஸங்கீத வித்வான்களிலும் சரி, பொதுமக்களிலும் சரி, அந்த ஸ்தானத்துக்கு அருகதையுள்ளவர் வேறு யாரும் இருப்பதாகச் சொல்ல முடியாது. பட்சபாதமில்லாமல் ஸங்கீதம் கேட்கும் அப்பியாஸமுள்ளவர்கள் எல்லாரும், ஸ்ரீ. ராமானுஜையங்கார் பாடும்போது, அனுபவிக்காமல் இருக்கமாட்டார்கள். அவருடைய கச்சேரி விசேஷமாயிருப்பதற்குக் காரணங்கள் பல. அவற்றையெல்லாம் ஸ்ரீ. நீலமேகம் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். தற்கால நிலையில், ஸ்ரீ ராமானுஜையங்காருக்குப் பின் அந்த ஸ்தானத்திலிருக்க வேறு யாரும் இருப்பதாக தோன்றக் காணோம்.

ஸ்ரீ மஹாராஜபுரம் விச்வநாதையரைப் பற்றி ஸ்ரீ நீலமேகம் வெகு அழகாக எழுதியிருக்கிறார். "1944-ம் வருஷத் தொடக்கத்தில் ஸ்ரீமான் விச்வநாதையர் தமது மாஜிஸ்வரூபத்தைக் காட்டிவிட்டார்" என்று உறுத்திச் சொல்லியிருக்கிறார். மற்றும் ஸ்ரீ விச்வநாதையர் கச்சேரிகளில் எந்தெந்த அங்கங்கள் விசேஷம் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். இவ்விஷயங்களெல்லாம் பொதுவாக ஸங்கீத அபிமானிகளுக்குத் தெரிந்திராது.

ஸ்ரீ மழவராயனேந்தல் சுப்பராமய்யர் பற்றி எழுதியுள்ள சிற்றுரை வெகு அழகாயிருக்கிறது. ஸங்கீதத் துறையில் முன் அணியில் இல்லாத மாணிக்கம் இவர்.

மியூஸிக் அகாடமி அதிகாரிகள் ஸங்கீத வித்வத் சபையின் ஓர் ஆண்டு விழாவில் இவரைத் தேடிப் பிடித்துத் தலைமை வகிக்கச் செய்யாமல் இருந்திருப்பார்களானால், ஸங்கீத அபிமானிகள் இவரைப்பற்றி அறிந்திருக்கமாட்டார்கள்.

சித்தூர் ஸ்ரீ சுப்பிரமண்யப் பிள்ளையைப் பற்றி ஸ்ரீ நீல மேகம் எழுதியிருப்பது, பொதுவாக ஸங்கீத அபிமானிகளுக்குத்தெரியாத சில அம்சங்களை வெளியாக்குகிறது. ஸங்கீத ஸம்பிரதாயத் துறையில் ஸ்ரீ சித்தூர்ப் பிள்ளைக்குப் பிரத்தி யேகமான ஒரு ஸ்தானம் உண்டு. அதற்குக் காரணம் அவரது குரு ஸ்ரீ நாயினப் பிள்ளை அவர்களது ஸங்கீதத் துறை யில் உழைத்துக், கஷ்டப்பட்டுத் தமக்கு ஒரு ஸ்தானத்தை உண்டாக்கிக் கொண்டார் என்பதுதான்.

ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாஸையரைப் பற்றி எழுதி யிருக் கும் சிற்றுரையை மற்ற எல்லா வித்வான்களைப் பற்றிய குறிப் புக்களையும்விடஅதிகவிரிவாய் ஸ்ரீநீலமேகம்எழுதியிருக்கிறார். அந்த மாதிரியாக எழுதுவதற்கு ஸ்ரீ செம்மங்குடிக்கு யோக் கியதை உண்டு. ஸங்கீத வித்வான்களில் ஸ்ரீ செம்மங்குடி யைப்போல் தம்முடைய ஆயுட்காலத்தை ஸங்கீதத்திற்காக அர்ப்பணம் செய்தவர்கள் சிலரேயாகும். மகா வைத்தியநா தையரைத் தெரிந்தவர்கள், அந்த மஹானுக்கு அதுதான் விசேஷ குணம் என்று சொல்வார்கள். அதனால் ஸங்கித அபிமானிகளில் அறிவாளிகளாக இருப்பவர்களுக்கெல்லாம் ஸ்ரீ செம்மங்குடியிடம் பிரத்தியேகமான ஒரு பிரீதி. ஸ்ரீ செம் மங்குடி ஸ்வரப்படுத்தியிருக்கும் உருப்படிகளுக்கும் அல்லது 'ஐயர்வாள்' கீர்த்தனைகள் போலப் பிரசாரத்திலிருக்கும் கீர்த்தனைகளுக்கும் அவர் இட்டிருக்கும் மெருகு ஸ்ரீ செம்மங் குடிக்குள்ள விசேஷ சக்தியை எடுத்துக் காட்டுகின்றது. அவர் பாடும் உருப்படிகளுக்கெல்லாம் ஒருவிசேஷமான தாது (Tempo) இருப்பது பற்றியும், அவர் ஸங்கீதத்தி லுள்ள இதர விசேஷங்களைப் பற்றியும் ஸ்ரீ நீலமேகம் அழகாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்.

ஸ்ரீ செம்மங்குடியின் ஸங்கீதத்திலுள்ள விசேஷ அம் சங்கள் பற்றியும், அவர் இந்த நிலையை அடையுமுன் யார்

யார் இடத்திலிருந்து என்னென்ன கிரகித்துக் கொண்டார் என்பது பற்றியும், அவர் ஸங்கீதத்தை ரஸிப்பவர்களுக்கு ஓரளவுதான் தெரிந்திருக்கும்.

ஸ்ரீ முசிரி சுப்பிரமண்ய ஐயரைப் பற்றி ஸ்ரீ நீலமேகம் எடுத்துக்காட்டியிருக்கும் பல நல்ல குணங்களில் ஒன்றுமுன் நிற்கிறது. அவர் மிக்க சுலபர்; சிநேகத்துக்குப் பாத்திரர்; கர்வமோ, அகங்காரமோ இல்லாதவர். அந்தக்குணங்களெல்லாம் அவருடைய ஸங்கீதத்திலும் ததும்புகின்றன என்பதை இந்தச்சிற்றுரை வெளியாக்குகிறது.

ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமண்யமும், மதுரை ஸ்ரீ மணி ஐயரும் வயதில் சிறியவர்களாயினும், ஸங்கீத உலகில் வெகு பிரக்யாதி அடைந்திருக்கின்றனர். பொதுவாக ஸ்ரீ பாலசுப்பிரமண்யத்தைப்பற்றி ஸங்கீத அபிமானிகளுக்கு விசேஷமாகச் சொல்லவேண்டியதில்லை. அவருடைய கச்சேரிக்கு யாராவது சென்றிருந்து அங்கு சேரும் திரளான ஜனங்களைப் பார்த்திருந்தால், அதுவே ஸ்ரீ பாலசுப்பிரமண்யத்துக்கு ஸங்கித உலகிலுள்ள செல்வாக்குக்குப் போதிய அத்தாட்சி என்பதை அறிவார்கள்.

மதுரை ஸ்ரீ மணி ஐயரின் ஸங்கீதத்திலுள்ள விசேஷம் அவரது ராக ஞானமும், ஸ்வர கற்பனையும்தான். அவற்றிலுள்ள விசேஷ அம்சங்களை ஸ்ரீ நீலமேகம் வற்புறுத்திச் சொல்லி யிருக்கிறார்.

ஸங்கீத வித்வான்களைப் பற்றி நினைக்கும்போது பாலக்காடு ஸ்ரீ மணியைப் பற்றி நினைக்காதிருக்க முடியாது. ஸ்ரீ மணி மிருதங்கம் ஒரு கச்சேரிக்கு அமைக்கப்பட்டிருக்கிறதென்றால், அதுவே அநேகம் ஸங்கீத ரஸிகர்களை ஆகர்ஷிக்கும் என்பதை நாம் அறிவோம். இவருடைய வரலாறு பற்றி அநேகருக்குத் தெரியாது. அன்றியும், வித்வான்கள்-உலகில் ஸ்ரீ மணிக்கு ஒரு இடம் உண்டு என்பதற்காக வாவது இப்புத்தகத்தில் ஓர் சிற்றுரை சேர்க்கவேண்டியது அவசியம்தான்.

ஸ்ரீ நீலமேகம் எடுத்துக்கொண்ட காரியம் ஒரு புது வழியைச் சேர்ந்தது. கஷ்டமான காரியம். ஸங்கீத வித்

வான்களைப் பற்றி, அவர்கள் பாடும் ஸங்கீதத்திலுள்ள எல்லா அம்சங்களையும் எடுத்துச்சொல்ல முடியாது. ஆனால், ஒரு வித்வான் சுருதியோடு சேர்ந்து பாடுகிறார் என்று வற்புறுத்திச் சொல்லவேண்டியிருக்கிறதே என்று வருந்த வேண்டியிருக்கிறது. ஏனெனில் சுருதியில்லாமல் ஸங்கீதம் இருப்பதற்கே யில்லை. அதை விட்டு விட்டு, வித்வான்கள் வெகுநேரம் பாடுகிறார்கள் என்றால், பிற்காலத்தில் ஸங்கீதம் எந்தநிலையிலிருக்குமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. ஆனால் ஸ்ரீ நீலமேகம் யார் சுருதியை விட்டுப் பாடுவார்கள் என்று சொல்லவில்லை. சொல்வதும் பொருத்தமாகாது. இத்தகைய குறைகளை எடுத்துக்காட்டாததால் "ஸங்கீத நவமணி"களைப் பற்றிய கட்டுரைகளில் குறை இருப்பதாக நான் நினைக்கவில்லை. அதுவும் கச்சேரிகளின் சம்பிரதாயத்துக்கு அனுகுணமானதே. எப்படியெனில், ஒரு கச்சேரிக்குச் செல்லும்போது, எந்த ராகம் பிடிக்கிறதோ, எந்த உருப்படி பிடிக்கிறதோ அதைக் கேட்டு ஆனந்திப்பதுதான் சகஜம்; அதுதான் தர்மம். கேட்பவர் காதுக்கு எதெது நன்றாக இல்லையோ, அதுபற்றி கச்சேரி முடிந்தபிறகு நினைப்பதில்லை. ஸங்கீதக் கச்சேரிகளில் உள்ள உயர்வான அம்சங்கள் மற்ற குறைவான அம்சங்களை மனத்திலிருந்தும் காதிலிருந்தும் விலக்கிவிடுகின்றன. இந்த ரகஸ்யத்துக்கு அனுசரணையாக ஸ்ரீ நீலமேகம் ஒன்பது வித்வான்களைப் பற்றியும் விசேஷமான அம்சங்களை மாத்திரம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இந்த ஒன்பது மணிகள் தவிர மற்ற ஸங்கீத வித்வான்களைப் பற்றியும், வித்வாம்ஸனிகளைப் பற்றியும் எழுதச் சீக்கிரம் ஸ்ரீ நீலமேகம் முன் வருவார் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ நீலமேகம் இத்துறையில் மறுபடியும் பிரவேசிப்பதற்கு ஸங்கீத அபிமானிகளும், பொது ஜனங்களும் இவருக்குப்போதிய ஆதரவையும், உத்ஸாகத்தையும் அளிப்பார்களென்றும் நம்புகிறேன்.

'சாந்தி',
கதீட்ரல் ரோடு,
சென்னை.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

# முன்னுரை

ஸங்கீததேவியின் அருளால் நாதோபாஸனைசெய்து நல்வழிப்பட்ட ஸங்கீத வித்வான்கள் ஒவ்வொருவரும், மணி போலவும், மாணிக்கம் போலவும் ஒளி வீசி மதிப்போடு வாழ்ந்து இருக்கிறார்கள். அத்தகைய ஒளியுடன் பிரகாசிப்பவர்கள் இன்றும் நம்மிடையே பலர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரது வாழ்க்கை வரலாறும், அவர்களது ஜீவிய காலத்திலேயே அச்சில் வெளிவருவது ரஸிகர்கள் சுவைக்கு ஏற்றதாகவிருக்கும். இவ்வெண்ணத்தின் விளைவுதான் "ஸங்கீத நவமணிகள்" என்ற இச்சிறு புத்தகம். இதில் இடம் பெற்றிருக்கும் "மணிகள்" தவிர இன்று நம்மிடை மற்றும் பல வித்வான்கள் நவமணிகள் போல திகழ்கின்றனர். உதாரணமாக ஸங்கீத கலாநிதி டைகர் ஸ்ரீமான் வரதாச்சாரியார், இன்று நம்மிடையே வாழ்ந்திருப்பது பெரும்பாக்கியம். அவர் வித்வான்களில் வித்வான்; வித்வான்களுக்கு குரு. அத்தகைய ஸ்தானம் வகிக்கும் ஞானமணியைப் பற்றி எழுத முற்படுவது மகத்தான பொறுப்பை ஏற்பதாகவிருக்கும். எனவே அவருடைய வாழ்க்கையை வித்வத் விசேஷங்களுடன் சேர்த்துக் குறிப்பிடும் பொறுப்பை வித்வான்களுக்கு விட்டு விடுவதுதான் நேர்மை. இது முதற்காரணம். இரண்டாவதாக கர்நாடக ஸங்கீதத்தில் ஸ்ரீமான் டைகரையும் அவரைப் போலுள்ள ஸங்கீத விற்பன்னர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களது ஜீவிய சரிதங்களை வெளியிடவேண்டும் என்பது தான் என் ஆசை. ஆனால், என் ஆசையின் அளவிற்கேற்றாற் போல் இச்சிறு புத்தகத்திலுள்ள ஏடுகள் விரிந்துகொடுக்கவில்லை! குறிப்பிட்ட பக்கங்களுக்குள் இதில் உள்ள ஒன்பது வித்வான்களும் அடங்கி வந்திருக்கின்றனர்! இது விரிவாகவும் பூர்ணமாகவும் செய்து முடித்த காரியம் என்று கொள்ள முடியாதாயினும், அத்துறையில் செய்த ஒரு சிறு முயற்சி என்று கருதலாம்.

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் வித்வான்கள் ஒவ்வொருவருடனும் நெருங்கிப் பழகும் பேரதிர்ஷ்டம் எனக்கு வாய்த்திருக்கிறது. அதன் பயனாகக் கிடைத்த அரிய தகவல்களை இவ் வெளியீட்டின் மூலமாக மலரச் செய்யும் பாக்கியத்தையும் பெற்றேன்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் நான் எழுதிய ஓரிரு வித்வான்களின் ஜீவிய சரிதைகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்ததற்கும், இப்புத்தகம் சிறப்புற வெளிவருவதற்கு மற்றும் பல உதவிகளைச் செய்ததற்கும் எனது ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் பி.ஏ. அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஸங்கீதத்தில் முதிர்ந்த ஞானஸ்தராகவும் முதல்தரமான ரஸிகராகவும் உள்ள ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இப்புத்தகத்திற்கு முகவுரை எழுதிக் கொடுத்ததற்கு என் மனப்பூர்வமான வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்முயற்சிக்கு மூலபலமாகவிருந்தவர் நண்பர் ஸ்ரீமான் பி. ஸ்ரீ. அவர்கள். இதிலுள்ள மணிகளை மாலையாகத் தொடுக்கும் வேலையில் என்னை ஈடுபடுத்தியவரும் அவரே.

அவருடைய ரஸானுபவ உணர்ச்சியையும், இலக்கிய மறுமலர்ச்சியில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் தமிழகம் நன்கறியும். எனவே அவரது யோசனையை ஏற்றுக்கொண்டு என்மனதிற்கு நிரம்பப் பிடித்த இத்தொண்டில் ஈடுபட்டேன்.

**எஸ். நீலம்.**

# ஸங்கீத நவமணிகள்

—:o:—

## ஸ்ரீ. 'அரியக்குடி'

கர்நாடக ஸங்கீதம் ஒரு பெரிய கடல் என்றால், இன்று அதன் கலங்கரை விளக்கமாகத் திகழ்வது ஸ்ரீ அரியக்குடி ராமானுஜையங்காரின் ஸங்கீத நடை. பரம்பரைச் சம்பிரதாயத்தை அஸ்திவாரமாகக் கொண்டமைந்த விளக்கு அது. இக்கடலில் இறங்கி அரிய முத்துக்களை அரித்தெடுக்க ஆசை உள்ளவர்கள் அநேகர். அவர்களெல்லாம் கலைக்கடலில் பிரவேசித்துப் பேரலைகளால் மோதுண்டு சங்கடங்களில் சிக்காமல், பத்திரமான மார்க்கத்திற்கு வழி காட்டும் ஸங்கீதம் இன்று ஸ்ரீமான் ராமானுஜையங்காருடையது தான்.

முத்துக் குளிப்பதற்காகக் கடலில் பிரவேசிப்பவர்களுக்குச் சில நியமங்களை விதித்திருக்கிறார்கள். அதே போல ஸங்கீதக் கடலில் இறங்குவோருக்கும் சில முக்கிய நியமங்கள் உண்டு. தாங்களாகச் சந்தர்ப்பத்துக்கும் வசதிக்கும் ஏற்றாற்போல் செய்து வைத்த நியமங்கள் அல்ல அவை. வரப் பிரசாதிகளும் பழுத்த அனுபவ சாலிகளும் ஆக்கி வைத்த விதிகள் அவை. ஸங்கீதக் கடலில் அபாயமின்றி நீந்திக் கரைசேர வேண்டுமாயின் அவற்றைப் பின்பற்றியே ஆக வேண்டும். கலைவளம் க்ஷீணிக்காமல் தழைக்கவும் அவை பயன்படும். இதை உணர்ந்த அனுபவசாலிகளில் இன்று ஸ்ரீ அரியக்குடி ராமானுஜையங்காருக்கு முதல் இடம் தருவது தகும். சென்ற 30-ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீ அரியக்குடி ஸங்கீதத் துறையில் நிறைந்த புகழோடு நிலையாக நிற்பதற்குப் பெரும் பக்க பலமாக இருப்பது, அவர் பின்பற்றிவரும் தூய பாரம்பர்ய சம்பிரதாயமே யாகும்.

அவரது 30-வருஷ அனுபவமும் இதைத்தான் உணர்த்துகிறது. எனவே, அனுபவத்தில் முதிர்ந்த அவருடைய வாழ்க்கை வரலாறு இன்றும், என்றும், பயன்தரக் கூடியதுதான்.

ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜையங்கார் 1890-ம் வருஷம், மே மாதம் 19-ந் தேதி காரைக்குடிக்கு அடுத்த அரியக்குடியில் தோன்றினார். இவரது தந்தையான ஸ்ரீமான் திருவேங்கடாச்சாரியார் ஸங்கீதத்தில் சிறந்த ஞானவிருத்தர்; ஜோதிஷத்தில் நிபுணர். ஸ்ரீமான் அப்புஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ ராமானுஜையங்காரின் மூத்த தமையனார். ஸ்ரீமான்கள் கிருஷ்ண ஐயங்கார், ராகவ ஐயங்கார் ஆகிய இரண்டு சகோதரர்களும் உண்டு. சகோதரிகள் இருவர். ஸ்ரீமான் அப்புஸ்வாமி ஐயங்காருக்குப் புத்திர பாக்கியமில்லாததால் "ஜேஷ்டப்பிராதா பிதுர்சமான" என்ற வாக்கின்படி, ஸ்ரீ ராமானுஜையங்கார் தமது 5-வயதிலேயே ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப் பெற்றார்.

ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்குச் சிறு பிராயம் முதற்கொண்டே ஸங்கீதத்தில் தனி பக்தி; தன் வயதுள்ள சகபாடிகளோடு தெருவில் கோலி அடித்துக் கொண்டிருக்கையிலும், கடைக்கண்ணிக்குப் போகையிலும் வாய் ஓயாமல் பாடிக் கொண்டேதான் இருப்பது வழக்கம். எப்போதும் ராகம் இழுத்துக்கொண்டும் பாடிக் கொண்டும் இருப்பதைக்கண்ட இவரது தந்தை தமது குமாரனின் பிற்கால வாழ்வு எப்படியிருக்கும் என்பதை நிதானிக்க ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தார். ஸங்கீதத்தில் ஸ்ரீ ராமானுஜையங்காருக்கு இணையற்ற பேரும் புகழும் வந்தடையப் போவதை அவர் முன்கூட்டி நிர்ணயம் செய்துவிட்டார். அப்போது ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்கு வயது 11. தேவகோட்டைத் தமிழ்ப் பாடசாலையில் பயின்று கொண்டிருந்தார். மிளகனூர் ஸ்ரீமான் கிருஷ்ண சாஸ்திரிகள் அக் காலத்தில் பிரபல்யமாக இருந்தவர். அவரிடம் ரகுவம்சம், மாகம், நைடதம் முதலிய

வற்றில் இவர் பயிற்சிபெற்றார். ஸங்கீத அப்பியாசத்தையும் கூடவே நடத்தி வந்தார். புதுக்கோட்டையில் புகழோடு விளங்கிய ஸ்ரீமான் மலையப்ப ஐயரிடம்தான் ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்கு முதன் முதலாகக் குருகுலவாஸம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் மலையப்ப ஐயர் ஸங்கீதத்தில் விசேஷ தேர்ச்சி கொண்டவர். அவர் வித்தியார்த்திகளுக்கு ஸங்கீதம் போதித்து வந்தார். ஸ்ரீமான் மலையப்ப ஐயரும், அவரது தர்மபத்தினியாரும் ஸ்ரீராமானுஜையங்காரை மிக்க அன்போடு நடத்தி வந்தார்கள். சுமார் 3 வருஷ காலம் வரை ஸ்ரீ ஐயங்கார் அங்கே பயிற்சி பெற்றார். 16-வது வயதில், பிரபல வித்வான் நாமக்கல் ஸ்ரீமான் நரஸிம்மையங்காரிடம் குருகுலவாஸத்தை ஏற்றுக் கொண்டார். ஸ்ரீ நரஸிம்மையங்காரிடம் வந்த சமயத்தில், ஸ்ரீ ராமானுஜையங்காருக்கு ஸங்கீத சாஸ்திரத்தின் அடிப்படை - அம்சங்கள் நன்கு புலப்பட்டு விட்டன. கீர்த்தனைகள், கற்பனாஸ்வரங்கள் இவற்றைச் சுயேச்சையான மனோதிடத்துடன் பாடும் சக்தி பிறந்துவிட்டது.

பூர்வாங்கமான அம்சங்களைக் கிரகித்துக் கொண்டிருந்த ஸ்ரீ ராமானுஜையங்காருக்கு மேற்கொண்டு பயிற்சி அளிப்பது ஸ்ரீ நரஸிம்மையங்காருக்குச் சுலபமாகவே இருந்தது. ஸ்ரீமான் நரஸிம்மையங்காரிடம் இருந்த காலத்தில் ஸ்ரீமான் ஐயங்கார் ராகம் பாடுவதையே பிரதான லட்சியமாகக் கொண்டிருந்தார். அதியற்புதமாக ராகஞானம் ஏற்பட்டுவிட்டது. பஜனைகள், ஏகாதசி தின வைபவங்கள், கோயில் உத்ஸவங்கள் முதலியவற்றில் எல்லாம் அக்காலத்தில் ஸ்ரீ அரியக்குடி கலந்து கொள்ளாமல் இருந்ததே கிடையாது.

அந்த நாளில் 'பூச்சி' என்று செல்லமாக அழைக்கப்பெற்ற ராமநாதபுரம் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்கார் ராமநாதபுரம் சமஸ்தான வித்வானாகப் பதவி வகித்திருந்தார். ஸ்ரீமான் பூச்சி ஐயங்காரின் ஸங்கீத ஞானம், அவருடைய பாணியின் பெருமை, ஸ்ரீ அரியக்

குடி ஐயங்காரை வெகுவர்கக் கவர்ந்தன. எனவே தமது 18-வது வயதில் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் சிஷ்யராகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். ஸ்ரீமான் ராமானுஜையங்காரின் ஸங்கீதம் சிரஞ்சீவியாகப் பரிமளிக்கும் வண்ணம் பக்குவமான பயிற்சி அளித்தவர்களில் பூச்சி ஐயங்கருக்கு முதன்மை ஸ்தானம் உண்டு. ஸ்ரீமான் அரியக்குடியின் குருகுல வாஸத்தில் மிகவும் நீடித்த கட்டம் இவர் ஸ்ரீ பூச்சி ஐயங்காருடன் இருந்த காலமேயாகும். அதாவது தொடர்ந்தாற்போல் 5 வருஷ காலம்வரையில் பூச்சி ஐயங்காரிடம் இவர் பயிற்சியடைந்தார். கச்சேரிகளின் நிமித்தம் தமது குரு சென்ற இடங்களுக்கெல்லாம் ஸ்ரீமான் ராமானுஜையங்கார் இடைவிடாமல் சென்று கொண்டிருந்தார். தமது 20 வயதிலிருந்து கச்சேரியில் குருவோடு சேர்ந்துபாடும் பயிற்சியைப் பெற்றார். ஸ்ரீ ஐயங்காருக்கிருந்த ஸங்கீத ஆர்வம், ஸங்கீத நுட்பங்களை ஒரே மூச்சில் கிரகித்துக் கொள்ளும் சக்தி, பாடம் செய்வதில் இருந்த சுறுசுறுப்பு முதலிய அம்சங்களையெல்லாம் கவனித்த பூச்சி ஐயங்கார், ஸ்ரீ அரியக்குடியிடம் பிரத்தியேக அபிமானம் கொண்டிருந்தார்.

ஸ்ரீ ராமானுஜையங்காரின் கர்நாடக ஸங்கீத விளக்கு ஜோதிமயமாகப் பிரகாசிப்பதற்குப் பெரிய தூண்டுகோலாக இருந்தவர் பூச்சி ஐயங்கார் என்பது பிரசித்தம். ஆயினும், முக்கியமாகப் பூச்சி ஐயங்கார் தமது சிஷ்யரைக் கௌரவித்த முதலாவது சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுவது அவசியம்.

தேவகோட்டையில் பிரபல பாங்கராக விளங்கிய ஸ்ரீ ஏ. ஆர். ஏ. ஆர். எஸ்.எம். சோமசுந்தரம் செட்டியார் வீட்டில், கண்டனூரில் உயர்ந்த முறையில் ஒரு விவாகம் நடைபெற்றது. அங்கு பூச்சி ஐயங்காரின் கச்சேரி. ஸ்ரீமான் ராமானுஜையங்காரும் வழக்கம் போலத் தம் குருவோடு போயிருந்தார். அந்தக் கல்யாணத்துக்கென்று கோனேரிராஜபுரம் ஸ்ரீமான் வைத்தியநாதையர், பிடில் வித்வான் திருக்கோடிகாவல் கிருஷ்ண ஐயர்,

கும்பகோணம் மிருதங்க வித்வான் ஸ்ரீ அழகநம்பிப் பிள்ளை, கடம் ஸ்ரீமான் கிருஷ்ண ஐயர், புதுக்கோட்டை தட்சிணா மூர்த்திப்பிள்ளை முதலிய தலைசிறந்த வித்வான்கள் விஜயஞ் செய்திருந்தனர். கல்யாணத்தை நடத்திய ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியார் பூச்சி ஐயங்காரை அணுகி, "இன்று நம் ஸ்ரீ ராமானுஜையங்காரைப் பாட அனுமதிக்க வேண்டுமே!" என்று பிரார்த்தித்துக் கொண்டார். உடனே பூச்சி ஐயங்கார் சம்மதம் தெரிவித்தார். மேலே குறிப்பிட்ட ஞானஸ்தர்கள் நிரம்பிய சபையில் ஸ்ரீ அரியக்குடி ஐயங்காரின் கச்சேரி நடைபெற்றது. மங்களகரமான இவ் வைபவத்தில் நடந்த கச்சேரியை ஸ்ரீ ராமானுஜையங்காரின் முதல் மேடைக் கச்சேரி எனச் சொல்லவேண்டும். தமது சிஷ்யரின் திறமை கண்டு உள்ளம் பூரித்தார் பூச்சி ஐயங்கார். நிறைந்த மனத்தோடு, "இனி நீ சுயேச்சையாகப் பாடலாம். உனக்கு ஸர்வ மங்களமும் உண்டாகட்டும்" என்று அவர் ஆசிகூறினார். குருவின் ஆசிக்கு ஏற்றாற்போல் அடுத்தபடியாக ஸ்ரீ ராமானுஜையங்கார் தியாகப் பிரம்மத்தின் உத்ஸவத்துக்காகத் திருவையாற்றில் நடக்கும் விழாவில் கச்சேரி செய்தார். அதுமுதல் தான் ஸ்ரீ ராமானுஜையங்காருடைய ஸங்கீதம் கியாதியோடு பரிமளிக்கத் துவங்கியது. இது 24-வது வயது முதல் ஆரம்பமாயிற்று.

ஸ்ரீமான் ராமானுஜையங்கார் ஸ்ரீ மலையப்ப ஐயரிடம் குருகுலவாஸம் செய்த முதல் 3 வருஷங்களிலும் தமது உழைப்பைப் பரிபூர்ணமாக ஸாதகத் துறையில் திருப்பினார். தினசரி விடியற்காலம் 4-முதல் காலை 7-மணி வரையில் ஸாதகம் செய்வார், மாலை நேரங்களில் அதே மாதிரி 5-மணி முதல் 7-மணி வரையில் ஸங்கீத அப்பியாசம் நடக்கும். நாமக்கல் ஸ்ரீ நரஸிம்மையங்காரிடம் பயிற்சி பெற்ற நாட்களிலும், இந்த உழைப்பு தொடர்ந்தது. அப்போது ஸ்ரீ நரஸிம்மையங்கார் ஸ்ரீரங்கத்தில் இருந்தார். அங்கு ஸ்ரீமான் ராமானுஜையங்கார் தினசரி காலையிலும் மாலையிலும் ஆயிரக்கால்

மண்டபத்துக்குப் பேர்ப் பிரமாதமாக ஸாதகம் செய்ய ஆரம்பித்தார். ஸாதக வேளைகளில் மட்டும்தான் சங்கீத அப்பியாசம் என்பதில்லாமல், எந்த அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்த போதிலும், பாடிக்கொண்டே தான் இருப்பது வழக்கம். இன்றும் அவ்விசேஷத்தை ஸ்ரீ அரியக்குடியிடம் நாம் காணமுடியும். ஸ்ரீமான் பூச்சி ஐயங்காரிடம் குருகுலவாஸத்துக்குப் புகுந்த போதும் சாதகம் செய்வதைக் கைவிடவில்லை. வெளியூர்க் கச்சேரிகளுக்குத் தமது குருவோடு சென்றுவரும் சந்தர்ப்பங்கள் நீங்கலாக மற்ற நேரங்களில் ஸ்ரீ அரியக்குடி அப்பியாசத்திலேயே கண்ணுகை இருந்தார். பூச்சி ஐயங்காரிடம் குரு குலவாஸம் துவங்கிய சந்தர்ப்பத்தை ஸ்ரீ அரியக்குடியின் மங்களகரமான வாழ்க்கையின் ஆரம்பம் என்று கூறவேண்டும். அதற்கேற்றாற்போல் 19-வது வயதிலே தான் ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்குத் திருமணமும் நடந்தேறிற்று. குருகுலவாஸம் முடிந்த பின்னரே கிரகஸ்த ஆச்ரமம் ஆரம்பமாயிற்று.

ஸ்ரீமான் ராமானுஜையங்கார் முன்னணி வரிசையில் நின்று புகழ்பெற ஆரம்பித்த காலத்தில், இவரது தாயார் ஸ்ரீமதி செல்லம்மாள் ஜீவதசையிலிருந்தார். பிரபல ஸாஹித்ய கர்த்தர்வான ஸ்ரீமான் பூச்சி ஐயங்காரிடம் பயிற்சி பெற்ற பாக்கியத்தால், ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்குத் தமது குரு இயற்றிய அநேகம் அருமையான உருப்படிகளைப் பாடஞ் செய்ய வசதி ஏற்பட்டது. இவரது பாடனம் எவ்வளவு அதிகமாயிருந்ததோ அதே அளவுக்குக் கேள்வி ஞானமும் வெகு விரிவாகத்தான் இருந்தது. ஸ்ரீமான்கள் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர், வேணுகானம் சரப சாஸ்திரிகள், தஞ்சை கிருஷ்ண பாகவதர், தலைநாயர் சோமு பாகவதர், உமையாள்புரம் வித்வான்கள் முதலியவர்களது ஸங்கீத நடையின் நளினமான அம்சங்களை நன்கு தேர்ந்தறிந்து ஸ்வீகரித்துக் கொண்டவர் ஸ்ரீமான் ராமானுஜையங்கார். பிராசீனமான ஸங்கீத சம்பிரதாய வித்வான்களின் கானாமிர்தத்தைப் பருகும் பிராப்தமும் இவருக்குக் கிட்டியது.

இன்றைய ஸங்கீத உலகத்தில் ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்குள்ள ஸ்தானம் இணையற்றது. ஞான விசேஷத்திலும் சரி, பழுத்த அனுபவத்திலும் சரி, இவரது ஸங்கீதம் தனி உயர்வோடு பிரகாசிப்பது பிரத்தியட்சம். சரீரத்தை எடுத்துக் கொள்வோமாயின் அதை மகோன்னதமான தென்றோ, உதாரணத்துக்கு ஒரு பிரமாணம் என்றோ சொல்வதற்கில்லை. ஆனால் இவரது சரீரத்தில் உள்ள ஜீவன் உவமையற்றதென்பதில் யாருக்கும் சந்தேகமே கிடையாது. இயற்கையாகச் சுகபாவம் தோய்ந்து எதிரொலித்துக்கொண்டு வெகு சரளமாகச் சஞ்சரிக்கக் கூடிய இயல்பு கொண்ட சாரீரம். கமக விசேஷம் நிறைந்த இவரது பாட்டின் நடை யாரையும் எளிதில் வசீகரித்துவிடும் சக்திகொண்டது. அழுத்தம், உதவுபடிகள், திறந்த மனோதர்மம், இவற்றையெல்லாம் சிறக்கச் செய்யும் மெருகு-முதலிய அனைத்தும் இவருடைய ஸங்கீதத்தில் பூர்ணமாக இடம் பெற்றிருக்கின்றன. 'அ'கார அடுக்குகளெல்லாம் காலப்பிரமாணத்துக்கு ஏற்றபடி பளிச்சென்று பேசும். அவ்வளவு கச்சிதமாகத் தமக்கென்று ஒரு தனி நடையை ஏற்படுத்திக் கொண்டார் ஸ்ரீராமானுஜையங்கார். கட்டுப்பாடும், காயிதாவும், கம்பீரமும் நிறைந்த தோரணையில் தாம் பாடவேண்டியவற்றை அமைத்துக்கொள்வார். ஸ்ரீமான் ஐயங்காரின் ஸங்கீதம் வாலிப முறுக்கோடு தளர்ச்சியடையாமல் நிலையாக இருப்பதற்கு இவர் பின்பற்றும் பாட்டையே காரணம். எந்தக் கீர்த்தனைகளானாலும் சரி, அவற்றின் அமைப்பு விசேஷங்களைத் தீவிரமாக ஆராய்ந்து உருக்கொடுத்துச் சிறிதுகாலம் உள்ளடக்கி வைத்திருப்பார். உள்ளடக்கிய கீர்த்தனைகள் பொலிவு பெற அவற்றிற்கு அற்புதமாக மெருகு தீட்டுவார். சோபையோடு அக்கீர்த்தனைகளை அரங்கேற்றுவார். அவ்வளவுதான் தாமதம். அக்கீர்த்தனைகளுக்கு 'மவுஸ்' பிறந்துவிடும். ஊரெங்கும் அவ்வுருப்படிகள் உலாவத் தொடங்கும். அத்தகைய முறையில் ஸ்ரீமான் ராமானுஜையங்கார் பிரபல்யமாக்கிய உருப்படிகள் அநேகம். இன்றைக்கும் ஸ்ரீமான் ஐயங்கார் ஸ்ரீ தியாகப்ரம்மத்தின்

பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பாடுவது தனி அழகு கொண்டதென்பதை அனைவரும் ஒருங்கே ஏற்றுக்கொள் வர்கள். ஸங்கீத சாஸ்திர ஆராய்ச்சியை விசேஷமாக ஊன்றிக் கவனித்தவராதலின், பிரபல வாக்கேயகாரர்கள் இயற்றிய கீர்த்தனைகளின் தரத்தையும், அவற்றின் ஸங் கீத நுணுக்கங்களையும் ஸ்ரீராமானுஜையங்கார் தெள் ளெனத் தெரிந்துகொண்டது இயற்கை. பயிற்சியினால் சாரீரத்தைப் பழமாக்கிக்கொண்டார்; பாடாந்தரத்தி னாலும், நிறைந்த கேள்வியினாலும் ஞானத்தை வளர்த்துக்கொண்டார். விரசங்களேற்படாமல் பார்த்து, கச்சேரியில் உண்மையான ஆர்வமும் சுவையும் ஏற் படுத்தித் தந்தார். இவரது கச்சேரியில் காலம் போவது தெரிவதில்லையென்றால், அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. கீர்த்தனைகளையும் ராகங்களையும் இவர் பாகு பாடுசெய்துகொள்ளும் விதம், ஸ்வரப் பிரஸ்தாரத்துக்கு அளிக்கும் இடம் முதலிய அம்சங்கள், இன்று பிரபலமாக முன்னணிக்கு வந்திருக்கும் வித்வான்கள் தவிர எதிர் காலத்தில் தோன்றக்கூடியவர்களுக்கும் சிறந்த உதா ரணமாக இருக்கின்றன. ஸ்ரீமான் ராமானுஜையங்கார் ஸங்கீதத்தில் 'மத்திம காலம்' ஜீவநாடி. அதன் விசேஷம் இன்று பலரைக் கவர்ந்திருப்பது கண்கூடு. ஸ்ரீமான் ராமானுஜையங்கார் பாட்டு என்றும்போல் ஒரே மாதிரியாக இருக்கிறது என்ற அபிப்பிராயம் கொண்ட ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் இதுவே இவரது பாட்டின் உயர்வுக்குப் போதிய பாராட்டாகும்! தோடி, கல்யாணி, சங்கராபரணம், காம்போதி, பைரவி, வராளி முதலிய ராகங்களையும் கீர்த்தனைகளையும் இவர் ஆரம்ப நாட்களில் எப்படிப் பாடினாரோ, அதே மாதிரிதான் இன்றைக்கும் பாடுகிறார் என்று சொன்னால், அதற்கு ஒரே பதில்தான் கூறமுடியும். காம்போஜி ராகம் காம் போஜியாகத்தான் இருக்கிறது. அதை அந்த ராகத்தின் லட்சணப்படியேதான் பாடவேண்டும். வராளி, தோடி, சங்கராபரணம், கல்யாணி முதலிய ராகங்களையும் அப் படியேதான் பாடுகிறார். ஒரு ராகத்தை அந்த ராகப் படியே பாடுவது பிசகென்று சொல்வது சரியென்றால்,

ஸங்கீதசாஸ்திரத்தின் நன்மையை முன்னிட்டு அத்தவறு மேலும் நீடிக்கும்படி அனுமதிப்பது நல்லதுதான்!

தேன் என்றும் ஒரே ருசி உள்ளதுதான். அன்று வேருகவும், இன்று வேருகவும் அது ருசிக்கவில்லை. அத்தகையதுதான் ஸ்ரீ ஐயங்கார் - ஸங்கீதம். சூரிய ரச்மிகளில் பல வர்ண ஜாலங்களைக் காண்கிருேம். ஆனல் சூரியனையே நேராக நிமிர்ந்து பார்க்கையில் ஒரே ஒளிக் கோளம்தான் கண்ணுக்குப் படுகிறது. ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் அரிய விஷயங்கள் புலப்படுகின்றன. எனவே புலமைக் கண்ணேடு பார்ப்போர் அனைவருக்கும் ஸ்ரீ ஐயங்கார் பாட்டிலுள்ள புதுமைகள் புலப்படும்.

காம்போஜியில் தீக்ஷிதர் கிருதியான "ஸ்ரீசுப்ரமண்யாய நமஸ்தே "கீர்த்தனையையும், அனுபல்லவியில் நிரவல் செய்து ஸ்வரம் பாடும் வழக்கத்தையும் அநேகம் கச்சேரிகளில் கேட்டானந்தித்தவர்கள், இன்னும் அதைப் புத்தம் புதிதாகக் கேட்பது போன்றுதான் அனுபவிக்கிருர்கள். தோடியில் 'தாசாதே' கீர்த்தனையை இவர் ஆளும் முறை பிரத்தியேகம். இம்மாதிரி பல ராகங்களை இவர் படிப்படியாக வளர்த்து பாவத்துக்கு முதலிடம் தந்து குழப்பத்துக்கே இடமில்லாமல் மூர்ச்சை காட்டுவது கர்நாடக ஸங்கீத சம்பிரதாயத்தையொட்டியது. ஸ்வரப் பிரஸ்தார காலத்தில் திட்டமும் தெளிவும் அளவும் பிடிப்பும் நிறைந்து நிற்கும். காலவரை யறையின்றி ஸ்வரம் பாடி அயர்ச்சி ஏற்படும் நிலைமையை உண்டு பண்ணுது கச்சேரி மேன்மேலும் விறு விறுப்போடு உச்சத்தை அடையச் செய்வதிலேயே கவனத்தை யெல்லாம் திருப்பி விடுவார்.

ஸ்ரீமான் ராமானுஜையங்கார் பாரம்பர்ய ஸம்பிரதாயத்தை அனுசரித்து ஸங்கீதத்தை ஸ்வீகாரம் செய்து கொண்ட வராதலின், குணக்குறைவென்று ஒன்றையும் கூற இடம் வைக்கமாட்டார். பார்க்கப் போனல், ஸங்கீதக் கச்சேரி என்ருல் அது எப்படியிருக்கவேண்

டும் என்ற பத்ததியை அமைத்துக் கொடுத்தவர் இவர் தான். தொடர்ந்தாற்போல் அலுப்புச் சலிப்பில்லாமல் துவக்கத்திலுள்ள புத்துணர்வைக் கச்சேரியின் கடைசிவரையில் சிறிதளவு கூடக் குன்றாமல் சுவைபெறச் செய்த தொண்டில், இவருக்கு முக்கியமான பங்கு உண்டு. கச்சேரிகளைக் கட்டுவதற்கும், சாரீர அடைப்புகள் நீங்கிச் சுருதிவசமாகிப் பாடுவதற்கும் முதன் முதலில் ஒரு வர்ணத்தைப் பாடுவது சிறந்ததென்பது ஸ்ரீமான் ராமனுஜையங்காரின் முடிபு. குருகுலவாஸம் முதற் கொண்டு அனுபவத்தில் கண்ட அம்முறையை இவர் இன்றளவும் பின்பற்றித்தான் வருகிறார். சபையோரின் கவனத்தை முற்றிலும் கவர்ந்துகொண்டு கீர்த்தனைகளையோ, ராகங்களையோ பாட முற்படுவது இவரது வழக்கம். கச்சேரியில் பல விதமான ரஸங்களும் பாய்ந்து பரவிப் பிரதிபலிக்கவேண்டுமென்பதற்காக இவர் தெரிந்தெடுக்கும் கீர்த்தனைகள், ராகங்கள் இவை ஒவ்வொன்றும் பிரதானமாக விளங்குவதும் தெளிவு. சாரீர இயல்பு குறிப்பிட்ட தினத்தன்று எப்படியிருக்கிறதென்பதை முதலெடுப்பிலேயே நிச்சயப் படுத்திக் கொள்வதில் கைதேர்ந்தவர். பக்குவமான நிலையில் சாரீரம் இருக்கும் சந்தர்ப்பங்களில் கச்சேரி எப்படி அமைகிறதோ, அதே போன்று ஓரளவு சாரீர சௌகர்யம் குறைந்திருக்கும் சமயங்களில் நேரும் கச்சேரிகளையும் மணக்கச் செய்துவிடுவார். இதை இவர் தமது விவேகத் திறமையாலும் சூக்ஷ்ம புத்தியாலும் சமாளிப்பதிலுள்ள விசேஷம், வசதியில்லாத சாரீர நிலைமையால் அன்று இவர் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உருப்படிகள், கனராகம் முதலியவை வேறாக இருப்பினும் சுகபாவத்தில் கொஞ்சம்கூடக் குறைவே இராது. ஸ்ரீமான் ராமானுஜையங்காரின் ஸங்கீதம் நாபியிலிருந்து எழுந்து பூர்ணஸ்வரூபத்துடன் வெளிப் படுவதால் அது கலைஞர்களையும் கலாரஸிகர்களையும் ஒருங்கே கவர்ந்து நிற்கிறது. ஸ்ரீமான் ராமானுஜையங்கார் ஆதாரசுருதியைத் 'தக்'காக (குறைவாக) வைத்துக்கொண்ட போதிலும், சபையின் கடைசியில் உட்கார்ந்திருப்பவருக்குக்கூட இவரது மந்தர ஸ்தாயி ஸஞ்சா

ரத்தை கேட்டானந்திக்கக் கூடும். இது இவருடைய சாரீர கார்த்திரத்தின் தன்மை. ஆனால் கார்த்திரமான சாரீரம் என்பதற்காக அதைக் கண்டபடியெல்லம் துர்விநி யோகம் செய்வதும் கிடையாது. சங்கதிகளை இவர் சிறிதாகவும் பெரிதாகவும் சுக பாவத்துக்கிசைந்த மாதிரி யில் உருக்கொடுத்து உபயோகிப்பது பின்பற்றுபவர் களுக்கும் சிறந்த உதாரணம்.

பைரவியிலுள்ள 'விரிபோணி' வர்ணத்திலும், இன் னும் அதே மாதிரியான இதர வர்ணங்களிலும், க்ருதிகளி லும், மந்திரஸ்தாயி ஸஞ்சாரங்கள் இருக்கின்றன. சாரீர அப்பியாசக் குறைவாலோ, அல்லது வேறு காரணங் களாலோ விச்ராந்தி இல்லாமல் பாட்டு சுகமின்றிப் போய் விடுகிறது. விளம்ப காலத்திலும், மத்திம காலத்திலும் தெளிவுபட இயங்கக் கூடிய சாரீரமே லட்சியமாயின், அதற்கு ஸ்ரீமான் ராமானுஜையங்காரின் சாரீரத்தை உதாரணமாகக் கொள்ளலாம்.

விச்ராந்தி இல்லாமல், வேகமான காலத்தில் பாடு வதால் கமகங்கள் நலிந்து ஸ்வரங்கள் ஜீவனில்லாமல் உருமாறிப்போய்விடுகின்றன. இத்தகைய விகாரம் ஏதும் ஸ்ரீமான் ராமானுஜையங்கார்பாட்டில் தென்படாததுடன் மூடியோ, முடக்கியோ சங்கீதப் போக்கை ஒடுக்காமல் நன்கு வாய்விட்டு "அ" கார பூர்வமாக ராகத்தை ஜோடிக்கும் முறை நன்கு புலப்படுகிறது. அகாரங்களில் சுகம் தோய்ந்த அசைவுகளையும் நய பாவங்களையும் மெரு கோடு ஒன்றிப் பிணைக்கும் திறமை இவருக்குண்டு. இத் துடன் ஒரு முக்கியமான அம்சம் இவரது சாரீரத்தில் அமைந்திருக்கிறது. ஜிலு ஜிலுப்பும் பூரிப்பும் உள்ள ஒரு விதக் கம்மல் சாரீரத்தின் பின்னணியில் தயாராக எப் போதும் நின்று கொண்டிருக்கும்.மேல்ஸ்தாயி ஸஞ்சாரத் தில் நீண்ட கார்வைகள் பிரயோகமாகும் காலங்களில் ஜீவனோடு அக் கம்மல் சுருதியைக் கௌவிக் கொள் கிறது. அதற்கு நிகர் அதுவேதான்.

மத்திம காலத்தில் ஸங்கீத நடையமைந்த ஸ்ரீ ஐயங்காரின் பாட்டு பல்லவி பாடுகையில் அடையும் விசேஷம் வெளிப்படை.

பல்லவிக்காக எடுத்துக் கொள்ளும் கனராகத்தை இவர் கூறிட்டு ஸ்தாயி வாரியாகத் தனித் தனியாக விஸ்தாரம் செய்யும் விதரணையே அலாதி. எடுத்த எடுப்பில் ராகத்தின் ஜீவகளை நன்கு புலப்படும் வண்ணம், அதன் உருவை ரஸிகர் முன் பூர்ணமாகச் சித்திரித்துக் காட்டுவார். அதன் பின்னர் தானம் தொடரும். அதிகமென்றோ, குறைவென்றோ தோஷம் கூறுவதற்கு அதில் சற்றும் இடம்கொடாமல் அப்பழுக்கில்லாமல் அ-ன-ந்-த-ம் என்ற ஒலியோடு மீண்டும் பாடிய ராகத்தின் சுவட்டைப் போய் அடைவார். பல்லவியிலேயே ஸ்வரங்களை ராகமாலிகையாகப் பாடும் சந்தர்ப்பங்களிலும், கட்டுப்பாடும் அளவும் உண்டு. சில்லறை உருப்படிகள் விஷயத்திலும் கவர்ச்சிக்குத்தான் இவர் கச்சேரியில் முதலிடம். ஸாஹித்தியங்களைத் தெரிந்தெடுப்பதிலும், அவற்றை வினியோகிக்கும் நேர்மையிலும் ஸ்ரீ ஐயங்காருக்குக்குள்ள திறமை மிகவும் அபாரம். பதங்கள், ஜாவளிகள், தில்லானக்கள், ராகமாலிகைக்கான சுலோகங்கள், பாசுரங்கள், விருத்தங்கள் இவற்றைக் கச்சேரி மேடையில் களை சொட்டச் செய்யலாம் என்ற ஏற்பாடு வலுவடைந்ததற்கும் ஸ்ரீமான் ராமானுஜையங்காரின் கச்சேரி அமைப்பு முறையே காரணம். சுருங்கக் கூறவேண்டுமானால், கர்நாடக ஸங்கீதத்தை அதில் பாண்டித்திய முள்ளவர்கள் தவிர, சாமானியருசி உள்ளவர்களும் நிறைந்த உத்ஸாகத்தோடு ரஸிக்கச் செய்யமுடியும் என்பதை நிரூபித்தவர் ஸ்ரீராமானுஜையங்கார். தற்காலக் கச்சேரிகளின் மறுமலர்ச்சிக்கு ஸ்ரீ ஐயங்காருடைய பத்ததியே அடிப்படையாக இருப்பது கண் கூடு.

ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்கு ஷஷ்டிஅப்தபூர்த்தி நடக்க இன்னும் 3 ஆண்டுகள்தான் பாக்கி. சாதாரணமாக 57-வது வயதில் தாராளமாக எழுந்து நட

பாடுவதும் சிரமம் என்று பலவீன உணர்ச்சி வெளியிடப்படும் இந் நாளிலே, 57-வது வயதிலும் வாலிப முறுக்கிலிருந்தது போலவே ஸ்ரீ ஐயங்கார் பாடுகிறார் என்றால், அதிசயிக்கும்படிதானே இருக்கும்?

வயதின் முதிர்ச்சியால் உள்ள மாறுதல் ஸ்ரீ ஐயங்காரின் சரீரத்தில் தான் காணமுடிகிறது; இவரது சாரீரத்திலோ, அல்லது பக்குவமாகப் பழுத்த இவரது பாட்டின் நடையிலோ மாறுதல் காணவில்லை. பார்க்கப் போனால் மேற்படி இரண்டும் வளர்ந்து செழித்துத்தான் இருக்கின்றன. இவரது பாட்டு சிரஞ்சீவியாக இருப்பதற்கு இவரது சங்கீதமே இவருக்கு ஔஷதமாயிருக்கிறது என்றால் பொருந்தும்.

கர்நாடக ஸங்கீதத்தில் அமோகமான பாண்டித்தியமும், அதை வெளிப்படுத்துவதில் நிகரற்ற திறமையும் கொண்ட ஸ்ரீமான் ராமானுஜையங்காருக்கு வேலூரில் 1932-ல் "ஸங்கீத ரத்னாகர" என்ற பட்டம் கீர்த்தனாசார்ய ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸையங்கார் முன்பாக வழங்கப்பட்டது. 1938-ம் வருஷம் நடைபெற்ற சென்னை ஸங்கீத வித்வத் ஸபையின் 10-வது மகாநாட்டுக்கு ஸ்ரீமான் ராமானுஜையங்கார் தலைமை வகித்தார். எனவே "ஸங்கீத கலாநிதி" என்ற பட்டமும் இவரது பெயருக்கு மணமூட்டியது. 1944-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் சரஸ்வதி பூஜையன்று ஸ்ரீமான் ராமானுஜையங்கார் மைசூர் ஆஸ்தான வித்வானாக் நியமனம் பெற்றார்.

ஸ்ரீ ஐயங்காரின் ஸங்கீத வாழ்க்கைக்கும், சாதாரண வாழ்க்கைக்கும் வேறுபாடு காண முடியாது. எப்போதும் ஸங்கீதத்தைப் பற்றியேதான் பேச்சு. இப்பேச்சுக்கள் இவரது ஸங்கீதம் எவ்வளவு சுவையாயிருக்கிறதோ, அதேமாதிரிதான் இருக்கும். விலாவெடிக்கும்படி சிரிக்கச் செய்யும் ஹாஸ்ய ரஸம் இவரிடம் எப்போதும் ததும்பிக்கொண்டிருக்கும். சாதுரியமாகப் பேசுவார்; பேசவந்தவர் உபயோகிக்கும் சொற்களையே வைத்துக்கொண்டு ஹாஸ்ய வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்வார்.

ஆங்கிலத்திலுள்ள சொற்களைக்கொண்டு கிண்டல்செய்து பேசுவதும், அவற்றின் உச்சரிப்பைக்கொண்டு வேறு அர்த்தம் தொனிக்கும்படி வியாக்கியானங்கள் செய்வதும் வெகுவிநோதம். உதாரணமாக "Engaged" என்ற உச்சரிப்புள்ள பதத்துக்கு அதே உச்சரிப்புள்ள "Young aged" என்ற ஆங்கிலப் பதத்துக்குள்ள அர்த்தத்தைத் தமிழில் சொல்லுவார்! இரண்டாவது மஹாயுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலத்திலே ஏ. ஆர். பி. வேலைகள் தீவிரமாகச் சென்னை நகரிலும் இதர இடங்களிலும் நடந்துவந்தன அல்லவா? அப்போது தமிழ்ப் பத்திரிகையொன்றில் "A. R. P. க்கு ஆதாவு" என்ற தலைப்போடு ஒருசெய்தி வெளியாகியிருந்தது. அந்தத் தலைப்பை ஸ்ரீராமனுஜையங்கார் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஹாஸ்யகரமாக விளக்கிய முறை இது: A-என்ற ஆங்கில எழுத்து 'அரியக்குடி' என்ற ஊருக்காக வரம். "R" என்ற எழுத்து 'ராமானுஜையங்கார்' என்றபெயரைக் குறிப்பதாம். 'P' என்பது பாட்டுக்குப் பதிலாகச் சுருக்கமாய்ப் போட்ட எழுத்தாம். இதென்ன இப்படிக் குதர்க்கமாக இருக்கிறதே விஷயம் என்றால், "நான்தான் பி.ஏ. வரையில் இங்கிலீஷில் 'பெயில்' ஆயிற்றே!" என்று முத்தாய்ப்பு வைப்பார்! கூட இருப்பவர்கள் குடல் தெறிக்கச் சிரிக்காமல் வேறென்ன செய்வது? இதுபோல இன்னும் எத்தனையோ விஷயங்களில் ஹாஸ்ய ரஸத்தைப் புகுத்தி விடுவார். அவற்றையெல்லாம் விவரிப்பதானால் அதற்கே ஒரு தனிப்புஸ்தகம் தயாரிக்கவேண்டும்! கேட்கக் கேட்கத் தெவிட்டாதபடி எப்படி ஸங்கீதத்தை வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அதே மாதிரி பேச்சையும் இவர் வைத்துக்கொண்டிருக்கிறார்.

லட்சியமான ஒருகலைஞனுக்கு எப்போதும் மனம் உல்லாஸமான நிலைமையில் இருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் நிர்விசாரமான மனத்தில் நிறைந்த கற்பனைகள் உதிக்கும் என்றும் கூறுகின்றனர். அந்த நிலை ஸ்ரீ ஐயங்காரின் அன்றாட வாழ்க்கையில் இயற்கையாக அமைந்திருக்கிறது. எப்போதும் சிரித்த முகம்; சிரிப்பு,

விளையாட்டு குறும்பு இவ்வளவும் கலந்தபேச்சு; இடையிடையே பாட்டு. தொழில் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை இதே முறையில்தான் இவரது வாழ்க்கைச் சகடம் சுழன்று கொண்டிருக்கிறது. ஊஞ்சல்-பலகையில் உட்கார்ந்து உதைந்தாடுவதில் இவருக்குள்ள உவகை கொஞ்சநஞ்சமில்லை. எந்தநேரத்திலும் ஊஞ்சலில்தான் உட்கார்ந்திருப்பார். சிநேக பாவத்தில் தீவிர சிரத்தை கொண்டவர்; பரிசயங்களை நட்பாக்கிக்கொள்ளும் காந்த சக்தி இவரிடம் உண்டு. ஞாபகசக்தி ரொம்ப அதிகம். கொள்கைகள் விஷயத்தில் இவருக்குள்ள பக்தியும் பிடிப்பும் மிக்வும் உறுதிவாய்ந்தன. மனப்பூர்வமாகத் தாம் செய்யும் முடிவை மாற்ற இணங்கமாட்டார்; எந்த விதமான சக்தியும் இவரது முடிவை மாற்றிவிட முடியாது. கொடுத்த வாக்கை நிறைவேற்றிவைப்பதிலும் அப்படியேதான்.

ஸ்ரீமான் ராமானுஜையங்கார் குருபக்தி மிக்கவர். ஸ்ரீ தியாகப் பிரம்மத்திடம் இவருக்குள்ள பக்தி ஈடற்றது. குருவின் ஆக்ஞைப்படி இன்றளவும் அவரது கிருதி ஒன்றையேனும் கச்சேரியில் பாடத் தவறினார் என்பது கிடையாது. ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் ஸாஹித்தியங்கள் எல்லாவற்றிற்கும் ஸ்ரீ ராமானுஜையங்கார்தான் கஜானா! தமது குருகுல வாஸத்தின்போதே தமது குரு செய்த ஜாவளிகள், தில்லானாக்கள், கீர்த்தனைகள் முதலியவற்றை ஜீர்ணித்துக்கொண்டு விட்டார்.


தமிழில் ஸ்ரீ ஐயங்காருக்குப் பக்தி அதிகம். ஆனால் ஸங்கீதம் முக்கியமா, பாஷை முக்கியமா என்ற பிரச்னையில் இவருக்குத் திட்டமான அபிப்பிராயம் உண்டு. பாஷைக்குப் பணயமாக ஸங்கீதக் கலையை வைத்து விகாரமான விவாதங்களில் ஈடுபடுவதில் இவருக்கு விருப்பம் கிடையாது என்பது பிரசித்தம். இதனால் தமிழில் இவருக்குச் சிரத்தை குறைவு என்று எண்ண இடமே இல்லை. கர்நாடக ராகங்களின் அழகு தமிழ் ஸாஹித்தியங்களில் ஏறிப்படிந்து மிளிரவேண்டுமென்ற

ஆதுரமிகுதியினால்தான் ஸ்ரீ அருணாசலக் கவிராயர் இயற்றிய ராமநாடகக் கீர்த்தனைகள் பலவற்றிற்கு அற்புதமாக வர்ணமெட்டுக்கள் அமைத்தார்; அவற்றை இன்றைய கச்சேரிகளில் பாடுகிறார்; அவை எங்கும் பரவியும் விட்டன. உதாரணமாகப் பைரவியில் உள்ள "யாரோ? இவர் யாரோ?"—கீர்த்தனை புகுந்து புறப்படாத ரஸிகர் வாய் ஏதேனும் உண்டா என்பது சந்தேகம். அதே மாதிரியே திருவாய்மொழியிலிருந்து "திருப்பாவை"ப் பாசுரங்கள் 30-க்கும் மிக உயர்வான ராகங்களில் மெட்டு அமைத்துப் பாடுகிறார். பேருக்கும் புகழுக்கும் பேராசைப் பட்டுக்கொண்டு செயலில் ஈடுபடுவதைக் காட்டிலும் தூய உள்ளத்தோடு உருவாகத் தொண்டுசெய்ய வேண்டுமென்பதுதான் ஸ்ரீ ராமானுஜையங்காருடைய விருப்பம். அவ்விருப்பம் பூர்த்தி பெறுவதற்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த திடகாத்திரத்தையும் அளிக்க ஆண்டவன் துணை புரியவேண்டுமென்பதே ரஸிகர்களின் பிரார்த்தனையாக இருக்கவேண்டும்.

# ஸ்ரீ மஹாராஜபுரம் விச்வநாதையர்

"புகை நடுவினில் தீயிருந்ததைப்
பூமியில் கண்டோமே—நன்னெஞ்சே!"

சாதாரண உண்மை இது. ஆனால், ஆழ்ந்த கருத்துக்களையும், வேதாந்த தத்துவத்தையும் உணர்த்துவதற்குத் தமிழ்நாட்டுத் தேசீய கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் இந்த உண்மை செறிந்த வாக்கியத்தைப் "பகைவனுக் கருள்வாய்" என்ற பாட்டின் முதல் சரணத்தில் வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார். வெளியே தெரியா விட்டாலும் புகையின் நடுவில் தீ இருப்பதென்னவோ உண்மை. முதலில் அணைந்து விட்டதுபோல் தோன்றினாலும், புகையிருக்கும் வரையில் தீ இருப்பது நிச்சயமல்லவா? அது கனிந்து கொழுந்து விட்டெரியக் காலதாமதமாகலாம். காற்று முற்றினால் கடிதாக ஜ்வாலை



ஸ்ரீமான் மகாராஜபுரம்.

எழுந்துவிடும். இவ்வுண்மை செறிந்த அபிப்பிராயம் ஸங்கீத பூபதி ஸ்ரீமான் மஹாராஜபுரம் விச்வநாதைய ருடைய ஸங்கீத வாழ்க்கைக்கு எவ்வளவு பொருத்தமா யிருக்கிறது! கர்நாடக ஸங்கீத வித்வத் மண்டலத்தைத் தேஜோமயமாக ஒளிபெறச் செய்யும் பிரபல அனுப வஸ்தர்களின் வரிசையில் ஸ்ரீமான் விச்வநாதையருக்குத் தனி இடம் உண்டு.

ஸ்ரீமான் விச்வநாதையருடைய ஸங்கீதத்தின் நடையை ஒரு சிறந்த கலைச் சோலைக்கு ஒப்பிடலாம். கந்தம் கமழும் கானமலர்ச் செடிகளெல்லாம இவரது சோலையில் பயிராயிருக்கின்றன. இவை வளர்ந்து செழிக்க இவர் போடும் உரம் அதி உன்னதமான கற்பனை. இத்தகைய வர்ச மலரின் மணம் வானளவு எட்டி எங்கே பார்த்தாலும் ஒரே நறுமணமாக வீசுகிறது. ஆயினும் குறிப்பிட்ட ஒரு காலம் வரை, அம்மலர் வாடி யிருந்தது; ஆனால் கருகி விடவில்லை. வாடியிருந்த மலர் மீண்டும் மறுமலர்ச்சி கொண்டது. ஓரளவு பிறழ்ந்து சுழன்ற இவரது சங்கித வாழ்க்கைச் சகடம் திரும்பவும் அதன் சுவட்டுக்குத் திரும்பி, மிகவும் லாகவமாக ஓட ஆரம்பித்தது. ஸ்ரீ விச்வநாதையருடைய மேடைக் கச் சேரிப் புகழைப் புகைப்படலம் போல மறைத்துக்கொண் டிருந்த தடை, இவரிடம் மறுபடியும் துள்ளித்திரும்பி வந்த இசைச்சக்தி வெருட்டிவிட்டதென்று சொல்லலாம். ஸ்ரீ விச்வநாதையரின் ஸங்கீத தீபம் ஓரளவு மங்கி யிருந்தது உண்மைதான்; ஆயினும் அது ஒளி வீசத் தவறவில்லை. புகைப்படலத்தில் புதைந்துபோனது போலத் தோன்றிய இவரது ஸங்கிதம் புத்துருக் கொண்டு ஜோதிஸ்வரூபமாக வெளிப்பட்டிருக்கிறது.

ஞானபாவம், மனோதர்மம், கற்பனை, இவை ஒவ் வொன்றிற்கும் ஸ்ரீமான் விச்வநாதையருடைய ஸங்கீத நடை சுரங்கம்போலே. எனவே, என்றேனும் இவருடைய பழைய புகழ் உயிர்பெறும் என்று எதிர் காலத்தில் தள ராத நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு ரஸிகரும் இவர்

கச்சேரி செய்யும் இடம் ஒவ்வொன்றிலும் பிரசன்னமா யிருப்பர். கச்சேரி நன்கு அமைந்த சந்தர்ப்பங்களில் அத்தகைய ரஸிகர்களுடைய திருப்திக்கு அளவே இருந்ததில்லை. அதற்கு மாறாக, கச்சேரியின் தரம் வேறு மாதிரியாக இருந்தாலும் தங்களுக்கு அதிர்ஷ்டமில்லை என்ற எண்ணத்தோடு தான் திரும்பியிருக்கின்றனர். இந்த மாதிரியான நிச்சயமற்ற நிலைமைகளெல்லாம் இடைக்காலத்தில் தாற்காலிகமாக ஏற்பட்டவை. ஆனால் ஸ்ரீ விச்வநாதையரின் ஸங்கீதம் பழைய உருவில் நிச்சயம் வெளிவந்தே தீரும் என்று திடசித்தத்தோடு ஜோஸ்யத்தைச் செய்தவர்களின் முடிவு ரொம்ப நியாயம் என்பதை இவர் நிரூபிக்க அதிக காலம் ஆகிவிடவில்லை. 1944-ம் வருஷத் துவக்கத்தில் ஸ்ரீமான் விச்வநாதையர் தம்முடைய மாஜி ஸ்வரூபத்தைக் காட்டிவிட்டார்! பழைய வெள்ளம் புதிய வெள்ளமாகப் பெருக ஆரம்பித்த கட்டம் அது. ஸ்ரீ விச்வநாதையரிடம் பக்தியும் பாசமும் கொண்ட ரஸிகர்களின் தொகை அபாரம். புதையல் எடுத்த தனம் போல, இவரது ஸங்கீதத்தைச் சுவைக்கத் தலைப்பட்ட வர்கள் அநேகர். உண்மையில் அத்தகைய கலை உணர்ச்சியைத் தமது பாட்டில் மிதந்து பெருகச் செய்தவர் ஸ்ரீமான் விச்வநாதையர். இவ்வளவு பக்திக்கும் அன்புக்கும் பாத்திரமாக இருக்கும் மஹாராஜபுரம் விச்வநாதையர் எப்படிக் கவர்ச்சிகரமாக ஸங்கீதத்தைப் பக்குவமாக்கிக் கொண்டார்? அதற்கான காரணங்களை ஆரம்ப முதல் கவனித்துப் பார்க்கலாம்.

கர்நாடக ஸங்கீதத்தின் தாயகமெனக் கொண்டாடப் பெறும் தஞ்சை ஜில்லாவில் பிறந்தபெருமை ஸ்ரீமான் விச்வநாதையருக்கு உண்டு. திருக்கோடிகாவலைச் சேர்ந்த மஹாராஜபுரத்தில் ஸ்ரீ விச்வநாதையர் 1896-ம் வருஷம் ஸெப்டம்பர் 15-ந் தேதி யன்று பிறந்தார். இவருடைய தந்தையான ஸ்ரீமான் ராமையர் ஸங்கீதத்தில் லட்சிய ஞானம் உள்ளவர். கேட்பவர்கள் மனத்தை அள்ளிச் செல்லும் வண்ணம் கவர்ச்சிகரமாகப் பாடும் விஷய ஞானம் படைத்தவர். ஸ்ரீமான் ராமையர் ஸங்கீத பாண்

டித்திய முள்ளவரா யிருந்த போதிலும், அதை இவர் ஆத்மானந்தத்துக்காக வென்று கருதியிருந்தாரேயன்றி, தொழிலை உத்தேசித்துப் பயன்படுத்த விரும்பவில்லை. ஸ்ரீமான்கள் ராஜம் ஐயர், வைத்தியநாத சர்மா, மஹா லிங்க ஐயர், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் ஸ்ரீமான் விச்வநாதையரின் சகோதரர்கள். மூன்று சகோ தரிகளும் உண்டு. தந்தைக்கிருந்த ஸங்கித ஞானம் அவ ருடைய புத்திரர்களுக்கும் புத்திரிகளுக்கும் பிறப்பிலேயே பரவி, அதுவே ஒரு சொத்துப்போலானதில் வியப் பில்லை. ஸ்ரீமான் விச்வநாதையரும் இதில் விலக்கில்லை. ஸங்கித ருசி இவரை அதிகமாகப் பற்றிக்கொண்டது. ஸ்ரீமான் விச்வநாதையர் இயற்கையில் நல்ல சாரீர சம்பத் துள்ளவர். பிறப்பில் அமைந்த சாரீரம், ஞானம் இவை இரண்டும் ஒன்று கூடவே, சிரத்தை தானுக் அதிக மடைந்ததில் ஆச்சரியமில்லை. 13-வது வயது முதற் கொண்டே ஸ்ரீமான் விச்வநாதையர் ஸங்கீதத்துறையே தம்முடைய வாழ்க்கையின் வழி என்று நிச்சயித்து விட்டார்.

கர்நாடக ஸங்கீத பாரம்பரிய விசேஷத்துக்கு உமை யாள்புரம் வித்வான்கள் ஒரு பிரமாணம் போலே. எனவே ஸ்ரீமான் விச்வநாதையர் ஸங்கீத சாஸ்திரத்தில் எல்லை யில்லாத ஆற்றல் கொண்ட ஸ்ரீமான் ஸ்வாமிநாத ஐய ரிடம் முதன் முதலாகக் குருகுல வாஸம் செய்யப் புகுந் தார். மிகவும் சொற்ப வயதிலேயே சாஸ்திரப் பயிற்சியில் இறங்கிய ஸ்ரீ விச்வநாதையருக்குப் பிறவி ஞானத்தோடு, சாஸ்திர அறிஞரின் போதனையும் சேர்ந்தது பேருபகார மாக மாறியது. ஸ்ரீமான் ஸ்வாமிநாதையரிடம் ஸங்கீதத் தில் பூர்வாங்கமான விசேஷங்களை உணர்ந்து அதிலுள்ள பயனை ஸ்வீகரணம்செய்து கொண்டபின், ஸ்ரீ விச்வநா தையர் கட வாத்தியத்திலும் ஸங்கீதத்திலும் மிகச் சிறந்த நிபுணராக விளங்கிய தஞ்சை ஸ்ரீமான் ரங்கப் பையரிடம் குருகுலவாஸம் செய்யச் சென்றார். பயிற்சி ஆரம்பமாகி இரண்டு வருஷங்கள் பூர்த்தியடைந்தன. அதற்குள் ஸ்ரீமான் விச்வநாதையருக்கு மேடைக்

கச்சேரியில் பாடக்கூடிய தைரியமும் திறமையும் வந்து விட்டன. 15-வது வயது முதற்கொண்டே கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்டார். மிகுந்த இளம்பிராயத்தில் கச்சேரிகள் செய்வதற்கான யோக்கியதையைத் தேடிக்கொண்டவர்களின் ஜாபிதாவில் ஸ்ரீ விச்வநாதையருக்கு இடம் கொடுக்க வேண்டும். கும்பகோணத்துக்கு அடுத்த குடவாசல் என்ற ஊரில்தான் ஸ்ரீமான் விச்வநாதையர் முதன் முதலாகக் கச்சேரி செய்தார்.

ஸ்ரீமான் விச்வநாதையர் ஸங்கீதத்தை மாசுமறுவின்றிப் பிரகாசிக்கச்செய்த தலைசிறந்த அம்சங்களில் இவருடைய அழகான சாரீரம் ஒன்று. 'அவுட்டு'மாதிரி 'விர்' என்று மகத்தான வேகத்தில் மேலெழுந்து பல வர்ண ஜாலங்களைச் சித்திரிக்கும் தீப்பொறிகள் போல பிர்க்காக்களை உதிர்க்கும் தன்மை இவரது சாரீரத்தில் இயற்கையில் அமைந்திருக்கிறது. உதவு படிகள் நிறைந்து எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையும் அதற்கு உண்டு. பிர்க்கா சாரீரம் என்று ஒன்றை உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் அது ஸ்ரீமான் விச்வநாதையருடைய சாரீரமே தான். இந்த பிர்க்காக்களின் பொலிவை அடிக்கடி எடுத்துக்காட்டும் வகையில் இவருடைய கற்பனைகள் திடீர் திடீரென்று பீரிட்டுப் பெருக்கெடுக்கும். உன்னதமான மனோதர்மமும், இவரது நடையின் சோபையை அதிகமாக்கிக் காட்டுகிறது. மத்திம காலத்திலும், துரிதத்திலும் ஸ்ரீமான் விச்வநாதையர் பெரும்பாலும் கவனம் செலுத்துவார். இதனால் இவர் சவுக்க காலத்தில் சிரத்தையில்லாதவர் என்று சொல்வதற்கில்லை. சில அழகான பதங்களை இவர் பாட முற்படும் காலத்திலும், சில ராகங்களைப் பாடும் சந்தர்ப்பத்திலும், தமக்கு அவற்றிலும் சிறந்த தேர்ச்சி உண்டு என்பதைத் திட்டமாக நிரூபிப்பார். ஆனால் ரஸிகர்கள் அதிகம் சுவைத்த அம்சங்களை மட்டும் சொன்னால் போதுமல்லவா?

ஸ்ரீமான் விச்வநாதையர் ஆரம்ப நாட்களில் 4, 4½ கட்டை சுருதியில் பாடிக்கொண்டிருந்தார். வயது ஏற ஏறச் சாரீரத்தின் தெம்பும் திடமும் அதிகமான சுருதியில் சமாளித்து நிற்பதற்கு இசைந்த வண்ணம் இடம் கொடுப்பதில்லை. இதை அநேகர் விஷயத்தில் தெளிவாகக் காணமுடியும். எனவே இவர் ஆரம்பத்தில் பாடிய சுருதியின் அளவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. ஆனால் அதிகமான சுருதியில் பாடிக்கொண்டிருந்த போது எந்தெந்த அம்சங்களில் இவருடைய பாட்டு பரிமளத்ததோ, அதே அம்சங்கள் குறைந்த சுருதியில் இவர் இன்று பாடினால், அதிகமான அழகோடுதான் பிரகாசிக்கின்றன. சுகபாவத்துக்கும், குளிர்ச்சிக்கும் குறைவே இல்லை. பார்க்கப் போனால், அவை இரண்டும் கூடியிருக்கிறதென்றே சொல்லவேண்டும் ஸ்ரீ விச்வநாதையர் கர்நாடக ஸங்கீதத்தின் ஜீவன் போன்ற ராகத்தில் விசேஷமான பாண்டித்திய முள்ளவர். அதாவது, ராகம் பாடுவதில் இவருக்கு உள்ள திறமை ரொம்ப அபாரம். கோனேரிராஜபுரம் ஸ்ரீமான் வைத்திய நாதையர், மதுரை ஸ்ரீமான் புஷ்பவனம், ஸ்ரீமான் ராமநாதபுரம ஸ்ரீநிவாஸையங்கார் ஆகியவர்கள் பிராபல்யமாக விளங்கிய காலத்திலேயே ஸ்ரீமான் விச்வநாதையருடைய பாட்டு அரங்கேறி விட்டது; கச்சேரிகள் எங்கும் நடைபெறத் துவங்கின. அப்போதெல்லாம் இவருடைய சாரீரம் தெம்போடும் திடத்தோடும் இயங்கிக்கொண்டிருந்தது. ராக ஆலாபனையில் புதுப் புது விசேஷங்களைப் புகுத்திச் சிங்காரப் படுத்துவார். கீர்த்தனைகளுக்கும் இந்த அழகு முறையைப் பிரயோகம் செய்வார். ஆனால் ராக ஆலாபனையில் ஒரே மாதிரியாக இல்லாமல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு புதுமையை உண்டு பண்ணிச் சித்தரிக்கும் சிறப்பு ஸ்ரீமான் விச்வநாதையருக்குப் பிரத்தியேகமானதுதான்.

இவருடைய ஸங்கீத நடை ஜீவசக்தி கொண்டது. ஒரு சந்தர்ப்பத்தில் பாடியது போல இன்னொரு சந்தர்ப்பத்தில் பாட மாட்டார். அதாவது, தட-

வைக்குத் தட்வை இவரது பாட்டில் மின்னொளி வேகத்தில் நவ நவமான கற்பனைகள் எழுந்து, ரஸிகர்களைத் திகைக்க வைத்துவிடும். அதைப் போன்ற உயர்வை மனத்தினால்கூட சிந்திக்கவே முடியாமல் இருக்கும். காலப் பிரமாணம் எவ்வளவு வேகமாயிருந்தபோதிலும், இவர் பிரயோகிக்கும் பிர்க்காக்கள் எல்லாம் ஸ்வர ஸ்தானங்களை விட்டுக் கொஞ்சம்கூடப் பிறழாமல் ஆணி அடித்தது போன்று மாசில்லாமல் விளங்கும். இவருடைய பாட்டில் சுத்த ஸ்வரப்பிரயோகம் மிகவும் அதிகமாக இருக்கும். இத்தகைய நிச்சயமான நிலைமையை இவர் ஸாதக விசேஷத்தால் தேடிக் கொண்டிருக்கிறார். வட இந்திய, அதாவது ஹிந்துஸ்தானி ஸங்கீத நடையில் காணப்படும் விசேஷமான அம்சங்களை இன்று நாம் ஸ்ரீமான் விச்வநாதையருடைய பாட்டில் அதிகம் காண்கிறோம்: இதற்குக் காரணம் இவர் அம்முறையில் கொண்ட அபிமானமேயாகும். அந்த நடைக்கு அனுசரணையாக ஸ்ரீ விச்வநாதையர் தமது ஸாதகத்தைக் கையாண்டிருக்கிறார். சாரீரப் பயிற்சியின் உள்வண்ணத்தை உணர்ந்து உதவு படிகளை எப்படியெல்லாம் பிரயோகிக்கலாம் என்பதை இயற்கையிலேயே நிதானித்துக் கொள்ளும் சக்தி இவருக்கிருப்பது பிரத்தியட்சம். கொஞ்சம் கூட யாரும் எதிர் பார்த்திருக்க முடியாத நிலைமையில் இவருடைய மனோதர்மத்தில் ஊறிய கற்பனைகள் வெளிப்படுவதும் வெளிப்படை.

ராக ஆலாபனை, கீர்த்தனைகள், நிரவல் ஸ்வர விந்யாஸம், தானம் முதலிய ஒவ்வொன்றிலும் ஸ்ரீமான் விச்வநாதையர் தனியான முத்திரைகளைப் பதித்துக் கொண்டிருக்கிறார். ஸங்கீத சப்தத்தை இவர் நிலைமைக்கேற்றவாறு பெருக்குவதும், அடக்குவதும் மிகவும் சூட்சமமாகவே இருக்கும். இவருடைய மனநிலை நிம்மதியாகவும் உல்லாஸமாகவும் இருந்து விடுமாயின் அப்போது இவர் பாட்டு அடையும் உருவே அலாதியாக இருக்கும். ஸ்ரீவிச்வநாதையரின் ஸங்கீதத்தின் சுயஸ்வரூபத்தை அத்தகைய சந்தர்ப்பங்களில் நன்குகாணமுடியும்.

ஸ்ரீமான் விச்வநாதையர் பாட்டில் விற்பன்னர்களுக்கு வேண்டிய சரக்கும், ஸங்கீதத்தில் சாமான்யமான ருசி உள்ளவர்களுக்கு வேண்டிய சரக்கும் சம நிறையில் இடம் பெற்றிருக்கின்றன. ராகத்திலோ, கீர்த்தனையிலோ சுக பாவம் குறைந்ததது என்பதற்கு இடமேவைக்கமாட்டார். பாட்டில் எப்படிக் கவர்ச்சி இருக்கிறதோ, அதே மாதிரி தோற்றத்திலும் கவர்ச்சி கொண்டவர். ஒரு சமயத்தில் பாடியது போல இன்னொரு சமயம் பாடமாட்டார் என்ற எண்ணத்தை எப்படி இவர் உண்டாக்கினாரோ, அதே மாதிரி முகத் தோற்றத்திலும் உண்டாக்குவார்! ஸங்கீதத்தில் எப்படிப் புதிது புதிதாகக் கற்பனைகளைச் செய்கிறாரோ, அதே போலத் தமது முகபாவத்திலும் அடிக்கடி மாறுதல்களைச் செய்து காட்டுவார். ஒரு முறை பேரானந்தத்தில் திளைப்பவருடைய முக விலாசத்தைச் சித்திரிப்பார்; அடுத்த விநாடியே பக்தியும் வினயமும் இவர் முகத்தில் உருவடையும்; அனுதாப உணர்ச்சி மேலிட்டது போன்ற பாவத்தோடு இன்னொரு தட்வை முகபாவத்தைக் கொண்டுவிடுவார். இவை அனைத்தையும் தாண்டிக்கொண்டு இவருடைய களை சொட்டும் முகத்தில், நுட்ப அறிவுக்கான அடையாளங்களைக் காணலாம். காரியக் லட்சணத்துக்கு உண்டான சகல விசேஷங்களும் ஸ்ரீமான் விச்வநாதையரிடம் படிந்திருக்கின்றன. கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும். எப்போதும் உல்லாஸ மன உணர்ச்சியோடு இருப்பார். குறும்பு கலந்த குறு நகை எந் நேரமும் இவரது முகத்தில் தவழ்ந்து கொண்டிருக்கும். ஹாஸ்யமாகப் பேசுவதில் சமர்த்தர். எங்கும் எப்போதும் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில்தான் இவை யெல்லாம் என்பதில்லை. மேடைக் கச்சேரிகள் நடக்கும்போதும் சுபாவத்தில் இவர் அடைந்திருக்கும் இந்த ஹாஸ்யரஸம் இடம் பெறுவது வழக்கம். கச்சேரியில் பக்க வாத்தியக்காரர்களைப் பதம் பார்ப்பதில் இவருக்குப் பரம திருப்தி! ஸ்வர விந்யாஸம் தீர்ந்து விட்டதென்று பக்கவாத்தியக்காரர்களும் ரஸிகர்களும் முடிவு செய்திருப்பார்கள். திடீரென்று விட்ட இடத்தி

லிருந்து மீண்டும் ஸ்வரம் பாட ஆரம்பிப்பார். சபையில் பரபரப்பு ஏற்படும். அதை எல்லோருடனும் சேர்ந்து தாமும் அனுபவிப்பார். ஸங்கீதக் கச்சேரி மேடையில் ஸ்ரீ மகாராஜபுரம் நடத்தும் "தர்பார்" இவை. தர்பார் என்றால் அது தர்பார் தான்! ஏனெனில் ஸ்ரீமான் விச்வநாதையர் தர்பார் ராகத்தைப் பாடுவதற்கு ஒப்பாக வேறு ஒன்றை இணை கூறுவது கடினம். அவ்வளவு அழகாக அதை இவர் பக்குவப் படுத்திக் கொண்டிருக்கிறார். எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு ராகமும் இவரிடம் பிரத்தியேகமாக விளங்கு மென்றாலும் ஆரபி, மோஹனம், ஆபேரி, ஆஹிரி ஹம்ஸாநந்தம், காபி, ஹிந்துஸ்தானி ராகங்கள் இவற்றை இவர் பாடுவது தனிப் பெருமை கொண்டதாகும்.

பாட்டு, தோற்றம், முக்கியமாக முகபாவம் இவற்றில் திறமையோடும், சோபையோடும் விளங்கும் ஸ்ரீமான் விச்வநாதையர் பட உலகத்திலும் தொடர்பு கொண்டார். ஸ்ரீமான் விச்வநாதையரிடமுள்ள விசேஷ அம்சங்களையெல்லாம் கவனித்துச் சுவைத்த ஒரு ஸினிமாப் பட முதலாளி இவரை "நந்தனார்" படத்தில் வேதியராக நடிக்க ஏற்பாடு செய்தார். 'இது சரியா? இல்லையா?' என்ற சர்ச்சை அப்போது சில வட்டாரங்களில் எழுந்தது. ஆனால் ஸினிமாப் படம் திரைக்கு வந்தவுடன் சர்ச்சைகள் மறைந்து விட்டன. ஆயினும் ஸ்ரீ மகாராஜபுரம் அப்படத்தில் வேதியர் வேஷத்தில் "போடா பறையா!" என்று மோகன ராகத்தில் பாடிய பாட்டையும், "நாற்பது வேலி நடவு நட்டாகவில்லை" என்று துவங்கும் விருத்தத்தைக் கேதாரகௌளத்தில் பாடியதையும் ரஸிகர்கள் ஒருகாலும் மறக்கமாட்டார்கள்.

ஸ்ரீமான் விச்வநாதையர் சுமார் 35-வருஷ காலமாகச் சங்கீதக் கலையில் ஈடுபட்டுச் சேவைசெய்து வருகிறார். சில வருஷங்களுக்கு முன் தஞ்சை ஜில்லாப் பிரமுகர்கள் நன்னிலத்தில் ஒரு சபையைக்கூட்டிச்சிதம்பரம் ஸ்ரீ ரங்காச்சாரியார் தலைமையில் ஒரு ஸங்கீத விழாவை நடத்தினார்கள். அப்போதுதான் ஸ்ரீ விச்வநாதையருக்கு "ஸங்கீத பூபதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஸ்ரீமான்

விச்வநாதையரிடம் 'வித்வத்' மிகுந்த ஒவ்வொருவருக்கும் தனியான மதிப்பு உண்டு. 1945-ம் வருஷம் நடந்த சென்னை ஸங்கீத வித்வத் சபை மகாநாட்டுக்கு இவர் தலைமை வகித்தார். அப்போது இவருக்கு "ஸங்கீத கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## மழவராயனேந்தல் ஸ்ரீ சுப்பராம பாகவதர்

ஸங்கீத ஸாஹித்திய ஸம்பன்னர்களின் குடும்பத்தில் 1888-ம் ஆண்டில் பிறந்தவர் ஸ்ரீசுப்பராம ஐயர். சிவகங்கை ஜமீன் கிராமங்களில் ஒன்ருன மழவராயனேந்தல்தான் ஸ்ரீ சுப்பராம பாகவதர் பிறந்த ஊர். தந்தை பிரபல தமிழ் வித்வாஞக விளங்கியவர். தாய் வழிப்பாட்டஞரோ பிரபல அறிவாளி—காலஞ்சென்ற ஸ்ரீமான் சிதம்பர பாரதியார்தான் ஸ்ரீ சுப்பராம பாகவதரின் தாய்வழிப்பாட்டஞர். ஸங்கீதத்தில் தெளிந்த ஞானமுண்டு. தெளிந்த ஸங்கீத ஞானமும், தமிழில் உள்ள ஆற்றலும் ஒன்று சேர்ந்தமையால் இவரது கவனம் ஸாஹித்தியங்கள் செய்வதில் திரும்பிற்று. தனி உருப்படிகளாகவும் சரித்திரக் கீர்த்தனைகளாகவும், இவர் பலவற்றைத் தமிழில் ஸாஹித்தியம் செய்திருக்கிருர். பெரிய புராணத்தைக் கீர்த்தனையாகப் பாடிக் கச்சிதம் செய்துவைத்த பெரியாரும் இவரேதான். பேரின்பக் கீர்த்தனைகளையும் இவர் ஆக்கினர். எனவே ஸ்ரீமான் சுப்பராம பாகவதருக்குப் பிள்ளைப் பிராயத்திலேயே ஸங்கீதத்தில் பிரவேசிப்பதற்கான சாதனங்கள் இயற்கையில் அமைந்துவிட்டன.

ஸ்ரீசுப்பராம பாகவதரின் குடும்பம் சுயமதிப்பும் புகழும் படைத்ததாகும். தாய்வழியாகக் கிடைத்த தமது ஸங்கீதத்தை ஸ்ரீ சுப்பராம பாகவதர், பயன் எண்ணுமல் வழங்கிப் பரிமளிக்கச் செய்தவர். தொழில் நடத்தித்தான் காலக்ஷேபம் நடந்தாகவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லாத நிலைமையைக் கடவுள் இவரது குடும்பத்துக்கு

ஏற்படுத்தியதால், ஸ்ரீபாகவதர் வருவாயைப் பெரிதென்று மதிக்கவில்லை. கலையைக் கலைக்காகவே கற்க வேண்டுமென்ற தூய எண்ணத்தோடுதான் ஸ்ரீ சுப்பராம பாகவதர் கானமார்க்கத்தில் பிரவேசித்தார்.

ஸ்ரீமான் சுப்பராம பாகவதருக்கு இயற்கையில் வசதியான சாரீர செளகரியம் இல்லையென்றாலும், சாஸ்திரீயமான சாதகத்தால் அதை இவர் செப்பனிட்டுச் செம்மைப் படுத்திக்கொண்டார். ஆத்மானந்தத்துக்காகவே இவர் ஸங்கீதம் கற்க முற்பட்டாரேயன்றி, அதன்மூலம் அள்ளிக் கொட்ட வேண்டுமென்ற ஆசை ஆரம்பத்திலும் இருந்ததில்லை; இன்றும் அவ்வெண்ணம் இவருக்குக் கிடையாது. ஆனால் கர்நாடக சங்கீதம் மாசு மறுவில்லாமல் காப்பாற்றப்படவேண்டும் என்ற பெருங் கவலை மட்டும் இவருக்கு நிரம்ப உண்டு. சாஸ்திர சம்மதமான சம்பிரதாயம் மெல்ல மெல்லத் தேய்ந்து நைந்துபோய் விடுமோ என்ற பயம் இவருடைய கவலைக்குக் காரணம். இத்தகைய சிரத்தையோடு கலைக்குக் காப்புக் கட்டவேண்டுமென்ற சித்தமுள்ள ஸ்ரீ சுப்பராமையரின் சங்கீத ஞானத்தில் பிரபல வித்வான்களுக்குப் பெரு மதிப்பு ஏற்பட்டதில் வியப்பேதும் இல்லை. அவ்வப்போது ஸ்ரீ பாகவதரை அணுகி, இவரது பாட்டின் நடைகேட்டுப் பரவசப்பட்ட வித்வான்கள் இன்றும் அநேகர் இருக்கின்றனர். பொறுக்கிய வித்வான்களை ஒன்று கூட்டிப் பிரத்தியேகமாக ஒரு சதஸை ஏற்படுத்தி அங்கு ஸ்ரீபாகவதரைக் கச்சேரிகள் செய்யச்செய்து நுணுக்கமான ஸங்கீத விஷயங்களை உணருவது வழக்கமாக இருந்தது. ராக ஆலாபனையை எடுத்துக்கொண்டால், அதில் ஸ்ரீ சுப்பராம பாகவதர் செய்துகாட்டும் வேலைப்பாடுகள் அதியற்புதமாக இருக்கும். ராகத்தின் ஸர்வ லட்சணங்களும் தெளிவுபட வெளிப்படும் வண்ணம் பாடுவார். கீர்த்தனைகளின் எடுப்பு, நிரவல்செய்து ஸ்வரம் பாடும் முறை, இவை ஸ்ரீசுப்பராம பாகவதரின் ஏகபோக உரிமைகளோ என்று நினைக்கும்படி கூட இருக்கும். பல்லவி பாடுவதிலும், ஸ்வரம் பாடுவதிலும் ஸ்ரீ பாகவதரைப்

பழங்காலப் புலி என்று சொல்வதுதான் பொருத்தம். சம்பிரதாயத்தின் விசேஷத்துக்கு அவை ஓர் எடுத்துக் காட்டு எனலாம்.

ஆழ்ந்த அறிவாளிகளையும், அனுபவஸ்தர்களையும் ஆகர்ஷிக்கும் ஞானமுள்ள பாட்டு ஸ்ரீ சுப்பராமையருடையது. கலைவளர்ச்சியில் தீவிர சிரத்தைகொண்ட மைசூர் மகாராஜா முன்பாகவும், திருவாங்கூர் மகாராஜா முன்பாகவும் ஸ்ரீ சுப்பராம பாகவதர் தமது வித்வத் விசேஷத்தைத் துலங்கச் செய்திருக்கிறார். உண்மையான சிரத்தையோடு ஸங்கீத நுட்பங்களை அறிய ஆவல் கொண்டவர்களுக்குத் தம்மாலான வரையில் விளக்கம் செய்து நல்ல மார்க்கத்தைக் காட்டுவதற்கு ஸ்ரீ சுப்பராம பாகவதர் எப்போதும் தயாராக இருப்பவர்.

1943-ம் வருஷம் சென்னையில் நடந்த ஸங்கீத வித்வத் ஸபையின் 17-வது ஸங்கீத மகாநாட்டுக்கு ஸ்ரீ சுப்பராம பாகவதர் தலைமை தாங்கினார். அச்சந்தர்ப்பத்தில்தான் இவருடன் சம்பாஷிக்கும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. "மழவராயனேந்தல் ஐயர்வாள் பெரும்புலி" என்று ஸங்கீதத் துறையில் உள்ளவர்கள் பயபக்தியோடு அடிக்கடி கூறுவதைக் கேட்டிருந்ததால், இவரைப் பற்றியும், இவரது ஸங்கீதத்தின் பெருமை பற்றியும் தகவல் அறிய ஆர்வம் பிறந்தது. பிரபல வித்வான்கள் இவரைப் பழங் காலத்துப் புலி என்று வர்ணித்தது இவரிடம் சுரங்கம் போல் உள்ளடங்கிக் கிடக்கும் ஸங்கீத ஞானத்தைக் கொண்டுதான். ஸ்ரீ சுப்பராம பாகவதரின் சுபாவம் பசுவைப்போல்தான் என்றாலும், ஸங்கீத விவகாரங்களில் இவர் உண்மையில் புலிபோன்றவர் என்பதும் புலனாயிற்று. ஆடம்பரத்தில் ஆசை இல்லாதவர்; கள்ளங் கவடற்ற உள்ளம்படைத்தவர். தன்னடக்கம் நிரம்பப் பெற்றவர். ஈச்வர வழிபாட்டில் மட்டற்ற ஈடுபாடுள்ளவர். தமிழில் தெளிந்த ஞானம் உள்ளவர். இவரோடு சங்கீதம் பற்றிய சம்பாஷணையில் ஈடுபட்டால் பொழுதுபோவதே தெரியாது; பேச்சிலேயே மேதை புலப்பட்டுவிடும்.

பிரபலமாக விளங்கி மறைந்த கர்நாடக ஸங்கீத வித்வான்களின் பாட்டுக்களைக் கேட்டானந்தித்தவர். "காலஞ்சென்ற புஷ்பவனமும், நானும் சேர்ந்தாற்போல் இருந்தோம். ஸ்ரீ புஷ்பவனத்தின் பாட்டை நான் வெகுவாகக் கேட்டிருக்கிறேன். காயக சிகாமணி முத்தைய பாகவதருக்கு என்னிடம் பிரத்தியேகமாக மதிப்பும் விசுவாசமும் உண்டு. நானும் அவரும் 30-வருஷங்களாகத் தொடர்புகொண்டு ஒரே துறையில் இருந்து வருகிறோம். கர்நாடக ஸங்கீதம் க்ஷிணிக்காமல் வளர்ச்சிபெற்றுப் பெருகிப் பரிமளிக்கவேண்டும் என்பது ஒன்றுதான் என் கவலை. என்னைப் பொறுத்த வரையில் நான் ஸங்கீதம் அப்பியஸித்தது ஆத்மானந்தத்திற்காகவே அன்றி, அதன் மூலம் அள்ளிக்கொட்டவேண்டும் என்ற ஆசை என்றும் இருந்ததில்லை" என்று இவர் கூறியதிலிருந்து இவரது நோக்கத்தின் உயர்வு புலனாயிற்று.

தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் இயற்றப்பட்ட பெரியார்களின் க்ருதிகளைப் போலவே அந்தந்தச் சமயங்களுக்கு ஏற்றவாறு ராகம், பாவம், லயம் முதலிய ஒவ்வொன்றிலும் உயர்ந்து விளங்கும் தமிழ்ப்பாட்டுக்களையும் வித்வான்கள் பாடவேண்டுமென்பது ஸ்ரீ சுப்பராம பாகவதரின் விருப்பம்.

கர்நாடக ஸங்கீதம் வளம்பெறுவதற்கு இவர் கூறும் யோசனை கவனத்திற்கு உரியது; "பிரபல ஸங்கீத வித்வான்கள் மாதம் ஒருமுறை பெரிய நகரங்களில் ஒன்றுகூடவேண்டும். கர்நாடக ஸங்கீதக் கச்சேரிகளைப் பாரம்பரிய முறையில் சம்பிரதாயத்துக்கு முதலிடம் தந்து நடைபெறச் செய்யவேண்டும். இதற்குக் கட்டணம் எதுவும் இருக்கக்கூடாது. எல்லோரும் வந்து ரஸித்து உண்மையான ஸங்கீதத்தின் ஸ்வரூபத்தைக் காண உதவி புரியவேண்டும். அப்போதுதான் இன்றுள்ள நிலைமைக்கும், பிராசீன நிலைமைக்கும் உள்ள வேறுபாடுகள் விசதமாகும். குறைபாடுகள் போக்கி, குணம் மணக்கச்செய்ய இது சிறந்த வழி."

இன்று கர்நாடக சங்கீத வித்வான்களில் தலை சிறந்தவர் என்று ஒருங்கே போற்றப்பெறும் ஸ்ரீ அரியக்குடி ஸ்ரீ சுப்பராம பாக்வதரின் சங்கீத விசேஷத்தைப் பற்றிக் கூறும்போது, "மழவராயனேந்தல் ஸ்ரீ சுப்பராமையர் எனக்குப் பால்ய சிநேகிதர். அவருடைய கச்சேரிகள் பலவற்றை நான் கேட்டுச் சுவைத்திருக்கிறேன். ஸ்ரீ சுப்பராமையர்வாள் ஸ்வரம் பாட ஆரம்பித்துவிட்டால், அடே அப்பா! அதன் அழகைச் சொல்லிமுடியாது. ராகங்களின் முழு லட்சணங்களும் துலங்கும் வண்ணம் பொழிந்துதள்ளி விடுவார். அது மட்டுமா? அபூர்வ ராகங்களை எடுத்துக் கொண்டாலும் அவற்றையும் அவர் அலசித் தள்ளிவிடுவார். இப்படி ஒவ்வொன்றுக்கச் சொல்வதைவிட அவரை 'ஸ்வரப் பிரவாகம்' என்று சொல்வது தகும். மாளவி, கதனகுதூஹலம், ஸரஸ்வதிமனோஹரி, பங்காளா, பூர்ணசந்திரிகா— இவை போன்ற ராகங்களை அவர் பாடிக் கேட்கவேண்டும். அவ்வளவு பிரமாதமாக இருக்கும், அவர் அவற்றை விஸ்தரிக்கும் விதம்! ஸ்ரீபாகவதர் மட்டும் தீவிரமாகக் கச்சேரி செய்வதென்று தொழிலில் ஈடுபட்டிருப்பாராயின், அவருடைய ஞான விசேஷம் எட்டுத் திக்கிலும் எட்டிப் பரவியிருக்கும்!" என்று தெரிவித்தார்.

# சித்தூர் ஸ்ரீ சுப்பிரமண்ய பிள்ளை

தமக்குப் பிறகு தமது பெயரையும் புகழையும் நிலை நாட்டுவதற்குச் சித்தூர் ஸ்ரீமான். சுப்பிரமண்யமே தகுதி உள்ளவர் என்றுதான் காலஞ்சென்ற ஸங்கீத வித்வான் ஸ்ரீமான் நயினா பிள்ளை கருதியிருக்க வேண்டும். அவர் அக்கருத்தைக் கொண்டிருந்தார் என்பதற்கான அடையாளங்கள் பலவற்றை ரஸிகர்கள் இன்று ஸ்ரீ சித்தூர் சுப்பிரமண்ய 'நாயுடு'வின் பாட்டிலும் காண்கிறோம்; பாவனையிலும் தென்படுகின்றன. "நாயுடு" என்றவுடன் பலருக்குச் சந்தேகம் தோன்றக்கூடும். ஆம், சித்தூர் ஸ்ரீமான் சுப்பிரமண்யம்

தெலுங்கு நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்தான். ஆனால் இவர் எப்படி, ஏன் "பிள்ளை" என்ற பட்டத்தைப் பெற்றார்? அது ருசிகரமான விஷயம்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் நயினா பிள்ளை, சென்னை-எழும்பூர் ஜகந்நாத பக்த சபையில் கச்சேரி செய்ய வந்திருந்தபோது சித்தூர் ஸ்ரீமான் சுப்பிரமண்யமும் குருவோடு வந்திருந்தார். சபை நிர்வாகிகள் சிஷ்யரின் கச்சேரியை வைக்க விரும்பி ஸ்ரீமான் நயினாபிள்ளையை அனுமதி கேட்டார்கள். சுவரொட்டிகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் எப்படி ஸ்ரீமான் சுப்பிரமண்யத்தின் பெயரைப் போடுவது என்ற பிரச்னை எழுந்தபோது ஸ்ரீமான் நயினா பிள்ளை, "என் சிஷ்யனுக்கும் என் பெயரையே போடுங்கள். சித்தூர் ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை என்றே பிரசுரியுங்கள்" என்று கூறிவிட்டாராம். அதுமுதல் ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய 'நாயுடு' "பிள்ளை"ப் பட்டம் தாங்கி, குருவின் மனப் போக்கை மதித்து ஸங்கீதத் துறையில் அவருடைய நற்பெயரை நாடெங்கும் மணக்கச் செய்து வருகிறார். ஸ்ரீமான் நயினா பிள்ளையின் நம்பிக்கையை முழுதும் கவர்ந்தவர் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளை.

ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளை 1898-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதி (விளம்பி வருஷம், ஆனிமாதம், 10-ம் தேதி) சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த புங்கனூர் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையான ஸ்ரீமான் பேரனார்யா பிரபல ஸங்கீத வித்வான்; பிடில் வாசிப்பதில் நிபுணராக விளங்கியவர். அதோடு ஹரிகதை செய்வதில் தனித் திறமை கொண்டு விளங்கியவர். ஸம்ஸ்கிருதத்தில் அவருக்கிருந்த பாண்டித்தியம் கொஞ்ச நஞ்சமல்ல. ஸ்ரீமான் சுரமண்ய பிள்ளையைச் சேர்த்து மொத்தம் 4 குமாரர்களும் 3 குமாரிகளும் ஸ்ரீ பேரனார்யாவுக்கிருந்தனர். முதல் புதல்வர் ஸ்ரீமான் பீமய்யா மதனபள்ளியில் டெபுடி தாசில்தார் உத்தியோகம் பார்த்தார். இரண்டாவது குமாரர் ஸ்ரீ

லட்சுமீ நாராயணு சென்னைக் கார்ப்பொரேஷன் வைத்திய இலாகாவில் உத்தியோகம் பார்க்கிருர். மூன்ருவது குமாரர்தான் நமது ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை. நாலாவது குமாரர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி எம், ஏ. கிரிக்கெட் ஆட்டத்தில் ருசி உள்ள ஒவ்வொருவரும் அவரைத் தெரியாமல் இருக்க முடியாது. ஸ்ரீமான் சுப்பிரமண்யண்ய பிள்ளையின் தாயார் ஸ்ரீமதி மொர்குலீச்வரி அம்மாள் ஸங்கிதத்தில் சிறந்த ஞானமுள்ளவர். இவருடைய தாயார் பரம்பரையும் ஸங்கீதத் தொடர்புள்ளதாகும். ஆகவே ஸ்ரீமான் சித்தூர்ச் சுப்பிரமண்ய பிள்ளை தமது வாழ்க்கையை ஸங்கிதத் துறையில் ஈடுபடுத்திஞர்.

ஆரம்ப காலத்திலிருந்து ஸங்கிதத்தில் சுவை கண்ட ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை, சித்தூரில் உள்ள ட்ரெயினிங் ஸ்கூலில் முதல் பாரம் வரையில் படித்தார். 5-வது வய்து முதற்கொண்டே ஸ்ரீ பேரஞர்யா தமது குமாரருக்கு ஸங்கிதம் போதிக்க ஆரம்பித்துவிட்டாரரம். ஸங்கிதத்திலுள்ள பூர்வாங்கமான விவகாரங்களை உணர்ந்துகொள்வதற்குச் சிறந்த சாதனங்களை இயற்கையில் பெற்றிருந்த ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை தமது 7-வது வயதிலேயே கச்சேரிகள் செய்யும் திறமையை அடைந்துவிட்டார்! ஊக்கமும் உள்வலிமையும் ஸ்ரீ பிள்ளையின் ஸங்கிதப் பயிற்சிக்கு உற்ற துணையாக நின்றன.

ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை தமது 16-வது வயதில் காஞ்சீபுரம் ஸங்கீத வித்வான் நயினு பிள்ளை என்று செல்வமாக அழைக்கப்படும் ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளையிடம் குருகுல வாஸம் செய்யப் புகுந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் காஞ்சிபுரம் ஸ்ரீமான் பிள்ளையிடம் ஸ்ரீமான்கள் மேய்ச்சூர்சுந்தர சாஸ்திரியார், சேத்தூர் சுந்தரேச பட்டர், வில்லிவாக்கம் நரஸிம்மாச்சாரியார், திருப்பாற்கடல் ஸ்ரீனிவாஸையங்கார், கஞ்சிரா சிங்காரம் பிள்ளை, திருவீழிமிழலை கல்யாணசுந்தரம் பிள்ளை ஆகி

யோர் ஸங்கீதாப்பியாசம்செய்து வந்தார்கள். இவர்கள் தாம் ஸ்ரீமான் நயினுபிள்ளையிடம் உண்மையில் குருகுலவாஸம் செய்தவர்கள். ஆனால் இன்று அநேகர் தாங்கள் ஸ்ரீ நயினு பிள்ளையின் சிஷ்யர்களெனக் கூறிக்கொள்வதைக் கேட்கிறோம். ஒருகால் அவர்கள் ஸ்ரீமான் நயினு பிள்ளையின் பாட்டைக் கேட்ட மாத்திரத்திலேயே அவரது நடையில் தங்கள் மனத்தை ஈடுபடுத்தியதால் அங்ஙனம் அபிப்பிராயப் படுகிறார்களோ என்னவோ! இது எப்படி இருப்பினும் ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளை, ஸ்ரீமான் நயினுப் பிள்ளையின் 'அசல்' சிஷ்யர். அதில் கொஞ்சம் கூடச் சந்தேகம் வேண்டியதில்லை. ஸ்ரீமான் பிள்ளையின் பாட்டை இன்று கேட்பவர்களும், அன்று ஸ்ரீமான் நயினு பிள்ளையின் பாட்டைக் கேட்டவர்களும் இதை நன்கு உணர்வர்.

ஸ்ரீமான் நயினு பிள்ளையிடம் குருகுலவாஸத்துக்காகச் சென்றபோது ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளை ரொம்ப ஏழைமையான நிலைமையில் இருந்தார். ஸ்ரீமான் நயினுபிள்ளை இவரிடம் பிரத்தியேகமாக அன்பு பாராட்டி உணவுக்கோ, உடைக்கோ கவலை சிறிதும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டு ஸங்கீத போதனையும் செய்து வந்தார். ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளைக்கு அவர் 4-வருஷகாலம்வரையில் தனிப்பாடமாக ஸங்கீத போதனை அளித்தார். தமது குருவின் ஸங்கீத வழியைப் பூர்ணமாகக் கிரகித்துக்கொண்ட ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை, ஸ்ரீமான் நயினு பிள்ளை செல்லும் கச்சேரிகள் ஒவ்வொன்றிற்கும் கூடவே சென்று குருவோடு தாமும் பாடிக்கொண்டு வந்தார்.

ஸ்ரீமான் சித்தூர்ச் சுப்பிரமண்ய பிள்ளையின் ஸங்கீதம் அவருடைய குரு ஸ்ரீமான் நயினு பிள்ளையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதாகும். எனவே, லய விசேஷத்தில் இவருடைய கவனம் அதிகம் திரும்பியிருப்பதில் ஆச்சரியமில்லை. ஸ்ரீமான் நயினு பிள்ளையின் ஸங்கீதத்தில் எந்தெந்த அம்சங்கள் முக்கியமாக விளங்

இனவோ, அவையெல்லாம் ஸம்பூர்ணமாக இடம் பெற்று விளங்கும் ஸங்கீதம் இன்று ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளையினுடையதுதான் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை. ஸ்ரீமான் பிள்ளை ஆரம்ப காலத்தில் வைத்துக்கொண்ட ஆதார சுருதி 3 கட்டை. இன்றும் இவர் சாதாரணமாக இரண்டு கட்டைக் கதிகமான சுருதியிலேயே கச்சேரிகளில் பாடுகிறுர். குழைவாகவும் குளிர்ச்சியாகவும் இருந்து எப்படி வேண்டுமானுலும் இஷ்டப்படி திருப்பி இயக்கக்கூடிய வசதிகள் கொண்ட சாரீரமாயிருக்கவேண்டுமென்ற விதியைக்கொண்டுமட்டும ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளையின் ஸங்கீதத்தை நிதானிக்கக் கூடாது. ஸ்ரீமான் பிள்ளையின் ஸங்கீதம் சாரீரத்தை உத்தேசித்த தல்ல; சரக்கை உத்தேசித்தது தான். சாரீர அம்சத்திலும் ஸ்ரீமான் நயினு பிள்ளையிடம் காணப்பட்ட விசேஷம் ஸ்ரீமான் சித்தூர் பிள்ளையிடம் பொருந்தி யிருப்பது கவனத்திற் குரியது. கனத்தைக் கொடுக்கக் கூடிய வகையிலும், குழைவையும் மென்மையையும் தரக்கூடிய வகையிலும் இணங்கி வரக்கூடிய சாதனம் ஸ்ரீமான் சித்தூர்ப் பிள்ளையின் சரீரத்தில் இடம் பெறவில்லை யானுலும் வேகம், விறுவிறுப்பு, கம்பீரம் முதலிய அம்சங்கள் எல்லாம் கொஞ்சம் கூடக் குறைவில்லாமல், இவர் பாட்டில் பொருந்தியிருப்பதைக் காண்கிறோம்.

தமது குருவைப் போலவே ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை மிகவும் பழையதாய்ப் போன கிர்த்தனைகளையும் அபூர்வமாக் கிர்த்தனைகளையும் தேடிப் பிடித்துக் கச்சேரிகளில் அரங்கேற்றுவார். ஸ்ரீமான் நயினு பிள்ளையிடம் அதிகமாகக் காணப்படாத ஒரு அம்சம், ஸ்ரீமான் சித்தூர்ப் பிள்ளையிடம் நாம் அதிகம் காண முடிகிறது. அதாவது, ஸ்ரீமான் நயினு பிள்ளை கச்சேரிகளில் அதிகமாக ராகங்கள் பாடுவது கிடையாது; இதனுல் அவருக்கு ராகம் பாடத் தெரியாது என்பதில்லை. ஆனுல் இவ் விஷயத்தில் அவர் அதிகம் ஈடுபடுவதில்லை என்பது அனுபவம். ஸ்ரீமான் நயினு பிள்ளை தெள்ளிய ஸ்வர

ஞானஸ்தர் என்பதை நிரூபிக்கும் அளவுக்கு ராகங்களைக் கோடிகாட்டிப் பாடுவதுடன் நிறுத்திக் கொண்டு, கீர்த்தனைகளைக் கன கச்சிதமாக மிடுக்குடன் பாடுவார். ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அம்மாதிரி யில்லாமல் ராகங்களை விரிவாக் விஸ்தரித்து, அவற்றின் சூட்சுமங்களை யெல்லாம், தெற்றெனத் துலங்கச் செய்கிறார். பிறவியிலேயே செழிப்பான ஞானம்; அது மேலும் வளர்ச்சி அடைவதற்குச் சென்ற இடம் ரொம்பப் பெரிது. எனவே ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இன்றைய கர்நாடக ஸங்கீத உலகத்தில் உன்னதமான ஸ்தானத்தை வகித்து வருகிறார்.

ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, தமது சாரீர பலத்தை உணர்ந்தவர்; ஞான பலத்தின் தன்மையையும், அறிந்தவர். எனவே இவருடைய கச்சேரிகளில், ஸங்கீத ஞான விசேஷங்கள் செறிந்த பகுதிகளையே நாம் முக்கியமாகக் கொள்ளவேண்டும். லய விஷயத்தில் இவருக்குள்ள ஆற்றல் ரொம்பப் பிரமாதம். ஷட் காலம் பல்லவி பாடும் திறமை இவருக்கு உண்டு. சுருதி, லயம் இவற்றை ஆதாரமாகக்கொண்டு தமது ஞான விசேஷத்தைப் புலப்படுத்துவதில் திருஷ்டி உள்ளவர். மூன்று காலங்களிலும் இவருக்குப் பாடும் சக்தி உண்டு. இருப்பினும் இவரும் மத்தியம கால உருப்படிகளையே அதிகமாகத் தமது கச்சேரி நிகழ்ச்சிகளில் பிரயோகிப்பார். கீர்த்தனைகளின் ஸ்வரூபம் பெரிதாக இருப்பினும் சரி, சிறியதாக இருப்பினும் சரி, குறைந்தது 4, 5, ஆவர்த்தங்களேனும் இவர் ஸ்வரம் பாடாதிருக்க மாட்டார். கச்சேரி செய்ய ஆரம்பித்த நேரத்தி லிருந்து இறுதி வரையில் கொஞ்சம் கூடத் தளர்ச்சியில்லாமல் பூர்ண உத்ஸாகத்தோடு பாடும் உயர்வான தன்மை ஸ்ரீமான் சித்தூர்ப் பிள்ளையிடத்து நாம் காண்கிறோம். அத்தோடு அபூர்வ ராகங்களிலுள்ள கீர்த்தனைகளை அரங்கேறச் செய்வதில், இவருக்கு அலாதியாக ஓர் ஆர்வம் உண்டு.

ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளை தமது பாரம்பரிய ஞான விசேஷம் காரணமாகவும், ஸங்கீதத்தில் தாம்

தேடிக்கொண்ட அனுபவத்தை அனுசரித்தும் அருமையாகச் சில ஸாஹித்தியங்களைச் செய்திருக்கிறார். அவற்றில் தலை சிறந்து விளங்குவது ஆனந்தபைரவி ராகத்திலுள்ள "மதுரா நகரிலோ" பஜனை உருப்படி ஆகும். இது தவிர மாண்ட் ராகத்தில் "மாவல்லகாதம்மா" உருப்படியும், "தலமு லோனகோல்ல" என்ற ஸிந்துபைரவி கீர்த்தனையும், செஞ்ஜுடி-யில் "அம்மா நீ கோடுகு துடுகு" கீர்த்தனையும், ஸ்ரீமான் சித்தூர்ப் பிள்ளையவர்கள் ஆக்கியவை தாம். அமிர்தவாஹினி-ராகத்தில் "கூவுது பார் குயில்" என்ற தமிழ்ப் பாட்டின் சிருஷ்டிகர்த்தர்வும் இவரேதான்.

பக்க வாத்தியங்களின் சேர்க்கையை அதிகமாக வைத்துக் கொள்வதற்கு ஸ்ரீமான் பிள்ளை அவர்கள், "ஓம்" காரம் மாறி மாறி வாத்தியத்துக்கு வாத்தியம் பரவிப் பரிமளிப்பதற்காகத்தான் என்று காரணம் கூறுகிறார். ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் கச்சேரியில் கலை கட்டுவதற்குப் பக்க வாத்தியங்கள் பெருந்துணையாகவும், பலமாகவும் விளங்குகின்றன. இவ்வளவு திறமையையும் பிறப்பினாலும், குருகுலவாஸ முயற்சியினாலும் சம்பாதித்துக்கொண்ட ஸ்ரீமான் பிள்ளை தமது 7-வது வயதிலேயே கச்சேரிகள் செய்திருக்கிறார் என்றாலும், வித்வான்கள் சாஸ்திர சம்மதமானதென்று ஒப்பும்படியாகப் பகிரங்கமாய்ச் செய்த முதல் க்ச்சேரியாக எட்டையபுரம் ஸ்ரீமான் ராமசந்திர பாகவதரின் வீட்டில் அவரது புதல்விக்கு நடந்த கல்யாணத்தின் போது நடந்த கச்சேரியையே குறிப்பிடவேண்டும். காலஞ் சென்ற ஸ்ரீமான் நயினா பிள்ளையும், எட்டையபுரம் ஸ்ரீமான் ராமசந்திர பாகவதரும் ஸங்கீத சகபாடிகள் என்பதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை தெய்வ பக்தி மிகுந்தவர், ஹிந்துமத ஆசாரங்களில் அமோகமான பற்றுக்கொண்டவர். தமது திறமை, சக்தி இவற்றின் எல்லைகளை அறிந்தவர். தன்னடக்கமும், மரியாதையும் நிரம்பப் பெற்றவர். ஆர்பாட்டங்களிலும், விளம்பரங்

களிலும் ஆசை கொள்ளாதவர். இவற்றையெல்லாம் விட, இவர் பயனெண்ணுமல் பதவிசர்கச் சங்கீதக் கலைக்கு ஆற்றும் தொண்டு அற்புதமானது. குணத்தைக் கிரகித்துக் குற்றத்தை விலக்கி எல்லா விஷங்களிலும் நலம் தரும் அம்சங்களை ஸ்வீகரித்துக் கொள்ளும் இயல்பைப் பிறப்பிலேயே பெற்றிருக்கிறுர். நண்பர்களிடம் தனியாக்ப் பற்றுக்கொண்டு அன்பு செலுத்துபவர். பிற ஸங்கீத நடைகளில் காணப்படும் குணம் குறை, இவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருப்பவர். கச்சேரிக்கு வந்தமர்ந்த நிமிஷத்திலிருந்து கடைசியாகப் பாடும் மங்களம் வரையில் அவகாசத்துக்காகவென்ரு, கூட்டத்தின் அளவுக்காக வென்ரு, கூட்டியோ, குறுக்கியோ எதையும் செய்யும் சுபாவம் இவரிடம் காண முடியாது. லய சம்பந்தமான நுட்பங்கள் நிறைந்த எந்த விஷயமும் ஸ்ரீமான் பிள்ளையவர்களின் குறியிலிருந்து தப்பமுடியாது. அவ் விஷயத்தில் இவருக்கு அவ்வளவு கண்டிப்பும், கவனமும் உண்டு.

ஸ்ரீமான் சித்தூர்ப் பிள்ளை 1925-ம் வருஷம் சென்னையில் நிரந்தரமாக வாசம் செய்ய ஆரம்பித்தார். ஸ்ரீமான் பிள்ளைக்குச் சென்ற 1941-ம் வருஷம் மே மாதம் 27-ந் தேதி யன்று திருநெல்வேலியில் நடைபெற்ற மெய்கண்டான் சாத்திர மகா நாட்டில் 7-வது நாளன்று "இசை மன்னர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளையின் பாட்டு ஒன்றுதான் இன்று காலஞ் சென்ற ஸ்ரீமான் நயிஞ பிள்ளையின் ஸங்கீதச் சுவட்டுக்குச் சிறந்த உதாரணம். லய விசேஷத்தில் ஆர்வமும் அக்கரையும் கொண்டவர்களுக் கெல்லாம் சித்தூர் ஸ்ரீமான் பிள்ளையின் சங்கீத நடையில் யதேஷ்டமான விஷயங்கள் பெற இடமுண்டு. ஸங்கீதத்திற்குத் தந்தை-ஸ்தானத்தை வகிக்கும் 'லய'த்தில் ஸ்ரீமான் பிள்ளை வெகுவான பாண்டித்திய முள்ளவர். எனவே இன்றைய ஸங்கீத உலகில் இவருக்குப் பிரத்தியேகமாக இடம் அளிப்பது அவசியம்.

# செம்மங்குடி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸையர்

கர்நாடக ஸங்கீதத்தின் உள் ஒளியை உபாஸித்து அதைத் தமதாக்கிக் கொண்டவர்களில் தலைசிறந்தவர் "ராஜ்ய ஸேவாநிரத" செம்மங்குடி ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸையர். அந்த உள்ள ஒளிதான் ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீநிவாஸையரின் வாக்கின், அதாவது ஸங்கீத, ஒளியாகப் பரந்து வீசுகிறது. தீவிர உபாஸனையின் மூலம் இவர் அடைந்திருக்கும் அற்புதமான பயன்கள் இரண்டு. ஒன்று நிறைந்த ஞானம்; அதைக் கங்குகரையில்லாத வேகத்தில் மிதந்து பரிமளிக்கச் செய்யும் ஸங்கீதபாவ உணர்ச்சி. பாவமும், சிறந்த மனோதர்மத்துடன் கூடிய கற்பனைகளும், இவர் ஸங்கீத நடைக்கு அரண்கள். சாஸ்திரீயமான இத்தகைய யோக்கியதைகள் நிரம்பிய ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீநிவாஸையர் இன்றைய ஸங்கீத வித்வத் மண்டலத்தில் மிக உன்னதமான ஸ்தானத்தை வகிக்கிறார். அந்த ஸ்தானத்தை இவர் தாங்குவதற்குச் சகல விதத்திலும் பொருத்தம் உண்டு.

கர்நாடக ஸங்கீத மறுமலர்ச்சித் துறையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையர் அடைந்திருக்கும் நிரந்தரமான கௌரவத்துக்குக் காரணம் ஒன்றல்ல, இரண்டல்ல, பல. தெளிந்த, ஆனால் நுட்பமான, ஞான பாவத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; அதை இவர் வளர்ந்து ஓங்கச்செய்ய எடுத்துக்கொண்ட உண்மை உழைப்பை எடுத்துக்கொண்டாலும் சரி, இவர் இன்று அடைந்திருக்கும் நிலைமை பெருமைப் படத்தக்கது என்பதில் சிறிதுகூடச் சந்தேகம் வேண்டியதில்லை. உழைத்தவர்களுக்குத்தான் உண்மை தெரியும்; அதன் பயனும், மதிப்பும் அவர்களுக்குத்தான் அதிகம் தெரியும். எனவே ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையர் கர்நாடக ஸங்கீதத்தைக் கண்போலக் கருதுகிறார். அதைக் கண்டபடியெல்லாம் சிதற விடுவதில் கவலைப் படுபவர் ஸங்கீதக் கலையை மாசுமறுவில்லாமல், பழைய ஆசாரங்

களுக்குக் கேடு விளையாமல் பாதுகாக்க வேண்டுமென்ப தில் இவருக்குள்ள சிரத்தை வெகு தீவிரமானது. இந்த உணர்ச்சி இவருக்கு நாளுக்கு நாள் வலுப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. காரணங்கள் தெளிவு.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் 1908-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ந்தேதி (கீலக வருஷம், ஆடி-மீ 11-ந்தேதி) கும்பகோணத்துக்கு அருகே உள்ள செம்மங்குடி என்ற ஊரில் தோன்றினார். பிரபல பிடில் வித்வான் திருக் கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர் இவருடைய மாமா. அவரது வாசஸ்தலத்தில் பிறந்த பெருமை ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்கு உண்டு. தந்தை ஸ்ரீமான் ராதா கிருஷ்ண ஐயரும் செம்மங்குடியைச் சேர்ந்தவர்தான். தாயார் ஸ்ரீமதி தர்மாம்பாள் திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையரின் கூடப்பிறந்த சகோதரி. பிரபல வித் வத் பரம்பரையில் தோன்றிய ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸைய் ருக்குப் பிள்ளைப் பிராயத்திலேயே ஸங்கீத ஆர்வம் ஏற்பட்டிருந்தது இயற்கை. செம்மங்குடியில் இருந்த பள்ளிக்கூடத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் ஆரம்பப் படிப்பை ஆரம்பித்தார். அப்போது இவருக்கு வயது எட்டு. பிறவியில் ஊறிய ஸங்கீத ஞானம் கேள்வியினால் உரம் பெறத் துவங்கிய பருவமும் அதுவே தான். உஞ்ச விருத்திக்காகத் தெருக்களில் பாடிக்கொண்டு வருபவர் கள் பாட்டுக்களை யெல்லாம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸைய்ர் தீவிரமாகக் கவனித்துக்கொண்டு அப்படியே திரும்பப் பாடிக்காட்டுவதும் வழக்கமாயிருந்தது. இந்த ருசி கொஞ் சம் கொஞ்சமாக வளர்ந்து வரவே, ஊரில் எங்கேயாவது ஸங்கீதக் கச்சேரி என்று ஏற்பட்டு விட்டால், கேட்கவே வேண்டியதில்லை. ஸ்ரீ ஸ்ரீனிவாஸையரை அங்கேதான் காணலாம். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்ற உண்மை - வாக்கில் தீவிர நம்பிக்கை கொண்ட ஸ்ரீமான் ராதா கிருஷ்ணையர் தமது குமாரனின் ருசியை நன்கு தெரிந்து கொண்டார். அந்த ருசியைத் தடை செய்யாமல் பயன்படும் மார்க்கத்தில் திருப்பிவிட வகை யும் செய்தார். பாரம்பர்யத்தை யொட்டிப் பார்த்தாலும்,

ருசியைக் கொண்டு பார்த்தாலும் ஸங்கீதக்கலை அப்பி யாசம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்குப் பொருத்தமா யிருந் திருக்கிறது. எனவே இவரது தந்தை தேர்ந்தெடுத்த மார்க்கம் நேர்மையானது என்பதை ஸ்ரீ. ஸ்ரீனிவாஸைய ரின் வாழ்க்கை மெய்யாக்குகிறது.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரின் பெரிய தாயாரின் குமாரர் காலஞ்சென்ற பிடில் வித்வான் செம்மங்குடி ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயர். இவர் திருக்கோடி காவல் ஸ்ரீ கிருஷ்ணையருக்கு இரண்டு முறைகளில் உற வினர். மருமான் என்பது ஒன்று; மாப்பிள்ளை என்பது இன்னொன்று. ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்குச் சாஸ்திர சம்மதமான முறையில் குருகுல வாஸத்தில் ஈடுபடுவ தற்கு இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் வேறிருந்திருக்க முடியாது. எனவே ஸ்ரீமான் ராதாகிருஷ்ண ஐயர் தமது குமாரனை 9-வது வயதில் விஜய தசமி தினத்தன்று செம்மங்குடி ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயரிடம் ஒப் படைத்து ஸங்கீதாப்பியாசத்துக்கு ஏற்பாடு செய்தார். அப்போது ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயரும் செம்மங் குடியிலேயே தான் இருந்தார். ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையர் குரு குல வாஸம் துவங்கிய ஒரு சில மாதங்களுக்குள் ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயர், தமது குடும்பத்தோடு கும்ப கோணத்துக்குச் சென்று அங்கு வாஸம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டார்.

இந்த ஏற்பாட்டிற்கும் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையரின் குரு குல வாஸத்துக்கும் ஓரளவு வசதிக் குறைவாகப் போயிற்று. கும்பகோணத்துக்குக் குருவோடு சென்று அங்கேயே அப்பியாசத்தை நடத்துவதற்குச் சில அசௌகரியங்கள் ஏற்பட்டதால், ஸ்ரீமான் ராதா கிருஷ்ணையரும் அவரது மூத்த புதல்வர்களான ஸ்ரீமான் கள் எஸ். ஆர். சுப்பிரமணிய ஐயர், எஸ். ஆர். பஞ்சாப கேச ஐயர் ஆகிய இருவரும் தீவிரமாக யோசனையில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் செம்மங்குடி யில் ஒரு பிரபல விவாகம் நடைபெற்றது. அதை

யெர்ட்டி நடைபெற்ற கச்சேரியின் நிமித்தம் கோட்டு வாத்தியம் வித்வான் திருவிடைமருதூர் ஸ்ரீமான் ஸகாராம் ராவ் விஜயம் செய்திருந்தார். அவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவா ஸையர் வாசஸ்தலத்தில் தான் வந்திறங்கி யிருந்தார். ஸ்ரீமான் ஸகாரராம் ராவுக்கும், ஸ்ரீ.ஸ்ரீனிவாஸையர் சகோ தரருக்கும் நெருங்கிய சிநேகமும், பரஸ்பர விச்வாஸமும் உண்டு. அப்போது ஸ்ரீமான் ஸகாரராம் ராவ் விஜயம் செய்தது ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையரின் ஸங்கீத வாழ்க்கைக்கு ரொம்ப முக்கியமான சந்தர்ப்பமாக மாறிற்று. ஸ்ரீ ஸகா ரம் ராவ் வருகையைப் பலன் தரத்தக்க வகையில் பயன் படுத்த எண்ணிய ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையரின் சகோதரர் இவரைப் பாடிக் காட்டச் சொன்னார். மத்திம சுருதி யிலே ஸ்ரீமான். செம்மங்குடி ஸ்ரீனிவாஸையர் உடனே தமக்கு நன்கு அப்பியாஸமாகி யிருந்த கீதங்கள், வர்ணங் கள் முதலியவற்றைப் பாடினார். ஸ்ரீமான் ஸகாரராம் ராவ் மனத்தில் நிறைந்த திருப்தி ஏற்பட்டதால் ஸ்ரீ செம் மங்குடி ஸ்ரீனிவாஸையருக்குத் தாம் பயிற்சி யளிப்பதாகச் சொல்லித் திருவிடைமருதூருக்கு இவரை அனுப்பும்படி கூறிவிட்டார்.

சில தினங்களுக்குப் பின்னர் ஸ்ரீமான் பஞ்சாபகேச ஐயர் தமது சகோதரர் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையரை அழைத் துக்கொண்டு திருவிடைமருதூர் சென்றார். அங்கு ஸப்-மாஜிஸ்திரேட் கோர்ட் காரியாலயத்தில் ஸேவைசெய்து வந்த சித்தன்வாழூர் ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்பவர் ஸ்ரீமான் பஞ்சாபகேச ஐயருக்கு மிகவும் நெருங்கிய நண்பர். முதலில் தமது சகோதரரை அங்கு அழைத் துச் சென்று குருகுல வாஸ நாட்கள் பூர்த்தி அடையும் வரையில் இருப்பிட வசதி, சாப்பாட்டு வசதி முதலிய வற்றிற்கெல்லாம் ஏற்பாடு செய்தார். இவ் வேற்பாடுகளை முடித்துவிட்டு ஸ்ரீமான் ஸ்காராம் ராவிடம் ஸ்ரீ. ஸ்ரீனிவா ஸையரைக் குருகுலவாஸத்தில் ஈடுபடுத்திவிட்டுத் திரும் பச் சென்றார் ஸ்ரீ. பஞ்சாபகேச ஐயர். திருவிடைமருதூரில் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையர் பாடசாலையில் சேர்ந்தும் படித்தார். ஸ்ரீ ஸகாராம் ராவிடம் ஸங்கீதாப்பியாசமும் செய்து

வந்தார். ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரைத் தங்கள் குடும்பத்தில் உள்ளவரைப்போல மதித்து எவ்விதமான கவலையும் இல்லாமல் பார்த்துக் கொண்டு வந்தார்.

கோட்டு வாத்தியம் ஸ்ரீமான் ஸகாராம் ராவிடம் அப்போது நாலுபேர் குருகுலவாஸம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரான காலஞ்சென்ற மருத்துவக்குடி ஸ்ரீ சுந்தரம் ஐயர் பாட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார். திருமாளம் ஸ்ரீமான் ரமணி ஐயர் பிடில் அப்பியஸித்துக்கொண்டிருந்தார். தேவகோட்டை ஸ்ரீ நாராயணையங்கார் வீணை பயின்று வந்தார். ஸ்ரீமான் கணேசையர் என்பவரும் வாய்ப்பாட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். இவர்கள் எல்லோரையும்விட வயதில் இளைஞரா யிருந்தவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர்தான்.

திருக்கோடிகாவல் ஸ்ரீமான் கிருஷ்ணையரின் மருமான் என்ற காரணத்தாலும், பிரபல வித்வத் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதாலும், ஸ்ரீமான் ஸகாராம் ராவுக்கு, ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையரிடத்தில் விசேஷமான சிரத்தையும் பிடித்தமும் ஏற்பட்டிருந்ததில் வியப்பில்லை. தம்முடைய சிஷ்யர்களில் மிக்வும் இளைஞரா யிருந்தமையால் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரை, அவர் 'ஏ சின்னப் பயலே!' என்றுதான் அழைப்பது வழக்கமா யிருந்தது. ஸ்ரீமான் ஸகாராம் ராவின் தர்மபத்தினி ஸ்ரீமதி பவானி அம்மாளும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரைத் தங்கள் குடும்பத்தில் தோன்றிய குழந்தையைப் போலவே பாவித்து நடத்தி வந்தார். ஸ்ரீமான் ஸகாராம் ராவின் குமாரர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ ராவுக்கும், செம்மங்குடி ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்கும் ஏககாலத்தில் அவர் ஸங்கீத போதனையைச் செய்துவந்தார். ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்குப் பிறவியில் இருந்த ஸங்கீத ஞானம் ஸ்ரீமான் ஸகாராம் ராவிடம் குருகுலவாஸம் தொடங்கிய கட்டத்தில் ஞான பாவமாகப் பரிணமித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரைப் போஷித்துவந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஐயர்

வேறு இடத்துக்கு உத்தியோக மாற்றம் பெற்றார். எனவே, ஸ்ரீமான் பசுபதி ஐயர் என்ற தம் சகோதரரின் மற்றொரு நண்பரின் ஆதரவில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் இருந்து வந்தார்.

ஸ்ரீமான் ஸகாராம் ராவிடம் ஸங்கீதாப்பியாசம் நடப்பதில் ஒரு விசேஷம் உண்டு. அதாவது, அவர் தமது சிஷ்யர்களுக்கு ஒரே காலத்தில் பாடங்கள் போதிப்பார். கூட்டு உணர்ச்சியோடு குருகுல வாஸம் செய்யும் சந்தர்ப்பம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்கு வாய்த்தது இவரது மன உல்லாஸத்துக்கு மிக்க உதவிகரமாயிருந்ததென்று கூறவேண்டும். இசைக் கருவியில் மகோன்னதமான பாண்டியத்யத்தைப் படைத்து ஞானச் சிறப்பால் பிரபல வித்வான்களின் மதிப்பைக் கவர்ந்த ஸ்ரீமான் ஸகாராம் ராவின் சிஷ்யராக இருந்த ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையருக்குத் தெளிந்த ஞானஸ்தர்களது ஸங்கிதக் கச்சேரிகளை நிரம்பக் கேட்கும் சந்தர்ப்பங்கள் பல தாமாக முன்வந்து நின்றன. திருவாவடுதுறை ஆதீனம் பண்டார ஸன்னிதி ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண தேசிகர், அந்த நாளில் பிரபல வித்வான்களை வரவழைத்துக் கச்சேரிகள் நடத்துவதுண்டு. மேற்படி ஆதினத்துக்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி கோயில் உத்ஸவங்களையொட்டிப் பிரபல நாகஸ்வர வித்வான்கள் கச்சேரிகள் செய்வர். குருகுல வாஸத்திலிருந்த ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸையருக்கு இவை மிகச் சிறந்த சந்தர்ப்பங்களாக அமைந்தன.

முதல் நாள் நடைபெறும் கச்சேரிகளில் தம் மனத்தைக் கவர்ந்த விஷயங்களையெல்லாம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் அப்படியே பாடிவிடும் இயல்பைப் பெற்றிருந்தார். கேள்வியால் ஞானமும் வளர்ந்தது, திறமையும் ஓங்கியது. கேள்வி ஞானம் பெருகியதற்குத் திருவிடைமருதூர் மற்றொரு அரிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமியின் பக்தரும், சிறந்த அறிவாளியுமான ஸ்ரீமான் ராமஸ்வாமி ஐயர் என்ற பெரி

யார், திருவிடைமருதூரில் பேர்ஸ்ட் மாஸ்டரா்க அந்தக் காலத்தில் உத்தியோகம் வகித்து வந்தார். தாம் அவ் வூரில் பதவியிலிருந்த ஒவ்வொரு வருஷமும் ஸ்கந்த ஷஷ்டியை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது இவரது வழக்கம். அவ் வைபவத்தில் ஸங்கீதமே பிரதான அம்ச மாக விளங்கும். முன்னணியிலுள்ள ஒவ்வொரு பிரபல வித்வானும் இந்த விழாவில் பங்கெடுத்துக் கொள்வ துண்டு. காலஞ்சென்ற கோனேரி ராஜபுரம் ஸ்ரீ வைத்திய நாதையர், மதுரை ஸ்ரீமான் புஷ்பவனம், பிடில் வித்வான் ஸ்ரீ. கோவிந்த ஸ்வாமி பிள்ளை, கும்பகோணம் ஸ்ரீ அழக நம்பி பிள்ளை முதலிய ஞானஸ்தர்கள் எல்லோரும் இதில் ஈடுபடுவார்கள். இத்தகைய அனுபவசாலிகளின் ஸங் கீத நடைகளை உற்றுக் கவனித்துக் கைப்பற்றிக்கொள் ளும் வாய்ப்புகள் பல ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்குக் கிட் டின. திருவிசை நல்லூர், கோவிந்தபுரம் ஆகிய இடங் களில் பாடாத வித்வான் கிடையாது. அக் கச்சேரி கள் அனைத்திலும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் ஆஜராகத் தவறியதே கிடையாது. இவ்வாறு 4 வருஷங்கள் ஸ்ரீமான் ஸகாராம் ராவிடம் நடந்த குருகுல வாஸம் உதவிகரமாக உருண்டோடின.

ஸ்ரீமான் ஸகாராம் ராவுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தேக நிலைமை திருப்திகரமாக வில்லை. தொழில் நடத்து வதற்கு வேண்டிய சக்தியும் சற்றுத் தளர்ந்தது. எனவே அவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரை மனப்பூர்வமாக ஆசீர் வதித்து, மேற்கொண்டு விருத்திக்கு வருவதற்கான மார்க்கத்தையும் காட்டினார். எதிர்காலத்தில், தமது சிஷ்யனைத் தொடர்ந்து இருக்கும் நாளிலேயே, தமக்குக் கியாதியை ஏற்படுத்தித் தரக்கூடும் என்று முன்கூட்டி நிர்ணயித்த ஸ்ரீமான் ஸகாராம் ராவுக்கு, ஸ்ரீமான் ஸ்ரீனி வாஸையரை வேறிடத்துக்கு அனுப்புவதில் ஏற்பட்ட மனத்துயரத்துக்கு அளவே இல்லை. குருவைப்போலவே சிஷ்யருக்கும் அளவிலாத வருத்தம் ஏற்பட்டது. ஒரு வரை யொருவர் பிரியமுடியாத மனத் தளர்வோடு இருந் தனர். என்றாலும், 1920-ம் வருஷத்தில் பிரிவு ஏற்பட்ட

தென்னவோ உண்மை. காங்கிரஸ், சட்டமறுப்பில் ஈடு பட்டு மும்முரமாக இயக்கத்தில் இறங்கிய காலம் அது. ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரின் சகோதரர்கள் இருவரும் தூய தேச பக்தர்கள்; காங்கிரஸ் ஸ்தாபனத்திடம் அவர்கள் வைத்திருந்த பக்தி கொஞ்ச நஞ்சமில்லை. கும்ப கோணத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரின் சகோதரர் காதி வஸ்திராலயம் ஒன்றை அந்தச் சந்தர்ப்பத்தில் நடத்திக் கொண்டிருந்தார். இந்தக் கட்டத்தில்தான் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் ஸ்ரீஸகாராம் ராவிடமிருந்து பிரிந்து கும்ப கோணம் வந்து சேர்ந்தார்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர், எடுத்துக்கொண்ட காரியம் பூர்த்தியாவதில் தீவிர நோக்கத்தோடு இருந்தமையால், இவருடைய நாட்ட மெல்லாம் ஸங்கீதத்திலேயே ஒன்றி யிருந்தது. கும்பகோணத்தில் முன்னதாகவே குடும்பத் தோடு விஜயம் செய்திருந்த தம்முடைய முதல் குரு செம்மங்குடி ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரைப் போய்ப் பார்த்தார். மேற்கொண்டு அடைய விரும்பிய அப்பி யாஸத்துக்கு அச் சந்திப்புப் போதிய பயனைத் தரவில்லை. ஆகவே ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் உமையாள்புரம் வித் வான் ஸ்ரீமான் ஸ்வாமிநாதையரிடம் பாடம் செய்ய ஆரம் பித்தார். கொஞ்ச காலம் வரையில் ஸ்ரீமான் ஸ்வாமிநா தையரிடம் பயிற்சி நடைபெற்றது. அந் நிலையிலே செம்மங் குடி ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர், தமது சகோதர ருக்கு உதவி புரிய முன்வந்து தாமே மேற்கொண்டுபயிற்சி அளிக்க இசைந்தார். ஸ்ரீமான் ஸ்வாமிநாதையருடைய சம்மதியின்பேரில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர், தமது முத் தண்ணாவிடம் குருகுலவாஸத்தை ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்திலும் ஸ்ரீனிவாஸையர் உமையாள்புரம் ஐயரிடம் பாடம் கேட்டுக் கொள்வதுண்டு. ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரிடம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் அடைந்த பயிற்சி மிக முக்கியமாகும். உழைப்பு உச் சத்தை அடைந்த காலமும் அதுவேதான். தம் கையில் பிடிலையும் வில்லையும் ஏந்திய வண்ணம் உட்கார்ந்து கொண்டு எதிரே ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரை அமரச்

செய்து, அவர் அளித்த போதனைக்கு இணையாக வேறு ஒன்றைக் கூறுவது கடினம். ஸாதகம் இல்லாத நாளே கிடையாது. உத்தியோகத்திலிருப்பவர்களுக்குக் குறைந்தபட்ச வேலை நேரம் 8-மணி என்றால், ஸங்கீதத் துறையிலும் அதற்கு இடம் உண்டு என்பதை ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸையர் நிரூபித்துக் காட்டினார். அதாவது தினசரி 8-மணி நேரம் வரையில் இவரை இவருடைய குரு மிகக் கடுமையான அப்பியாசத்துக்கு உட்படுத்தினார். பயிற்சி நாட்களில் மட்டும்தான் இத்தகைய கெடுபிடி யென்றால், ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரோடு அவரது கச்சேரிகளுக்கும் கூடச் செல்லவேண்டிய அவசியமும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்கு ஏற்பட்டிருந்தது. ஞானம் படிந்து, பக்குவமடைவதற்கு இத்தகைய அனுபவங்கள் சிறந்த ஸாதனமாயின. ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயரிடத்தில் இம்மாதிரி 4 வருஷங்களுக்குமேல் குருகுல வாஸம் செய்த ஸ்ரீ. ஸ்ரீனிவாஸையருக்குத் திடீரென்று சரீரம் உடைந்துவிட்டது. அதன் ஸ்வரூபம் அடியோடு உருமாறி, மிக மோசமான நிலைமையை அடைந்துவிட்டது. பக்குவமான பயிற்சியை அடைந்து அதன் பயனை அனுபவிக்கவேண்டிய சமயத்தில், சாரீரம் இடைஞ்சலான நிலைமையை உண்டுபண்ணியது ஒரு சோதனை; அதற்கடுத்தாற்போல் குருகுல வாஸத் தொடர்பிலும், ஓரளவு சுக்க் குறைவு ஏற்பட இடமுண்டாயிற்று. ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையரின் தாய் தந்தையர்களுக்கும், குடும்ப விஷயமாகச் சற்று மனத்தாங்கல் ஏற்பட்ட் கட்டமும் குறுக்கிட்டது, இது ஸ்ரீனிவாஸையருடைய ஸங்கீத வாழ்க்கையைப் பாதிக்காமல் போகவில்லை. அதுவரையில் ஆற்றலோடும் ஆர்வத்தோடும் பாட் போதனையில் ஈடுபட்டிருந்த ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர், ஸ்ரீ ஸ்ரீனிவாஸையரிடம் கொண்டிருந்த சிரத்தையைக் கைவிட்டார். ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் இந்த நிலைமையைச் சமாளித்து மீண்டும் குருகுல வாஸத்தைத் தொடரச் செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

எனினும் ஸ்ரீனிவாஸய்யருடைய தளராத ஊக்கம், இவருக்கு இடையே ஏற்பட்ட அநேகம் சோதனைகளைச் சமாளிக்கத் துணை நின்றிருக்கிறது.

ஸ்ரீமான் பஞ்சாபகேசய்யர் உடனே தமது சகோதரரைச் சங்கீத கலாநிதி, ஸங்கீத பூபதி மகாராஜபுரம் ஸ்ரீ விச்வநாதய்யரிடம் பயிற்சிக்கு அனுப்பிப் பாடபோதனைக்கு ஏற்பாடு செய்தார். மூன்று வருஷகாலம் வரையில் ஸ்ரீமான் மஹாராஜபுரம் விச்வநாதையரிடம் குருகுல வாஸம் செய்தார். சாரீரம் உடைந்த நிலைமையிலும் சாதகத்தின் வேகம் சிறிதுகூடக் குறையவே இல்லை, உழைப்பு வரவரத் தீவிரமாகிக் கொண்டே வந்தது. ஏற்கெனவே ஸ்ரீமான்கள் ஸகாரம் ராவ், உமையாள் புரம் ஸ்ரீமான் ஸ்வாமிநாதயைர், செம்மங்குடி ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி அய்யர் ஆகியோரிடம் பாடம் செய்த வர்ணங்கள் உருப்படிகள் இவை தவிர, ஸ்ரீமான் விச்வநாதையரிடம் புதிய உருப்படிகள் பாடம் செய்யவும் தலைப்பட்டார். குருவோடு வெளியூர்க் கச்சேரிகளுக்குச் செல்வதும், தம்பூரா மீட்டிக்கொண்டு குருவோடுப் பாடிப் பயில்வதும் வழக்கமாயின. கச்சேரிகளில் பாடும் முறை, ஸ்வர விந்நியாசத்தில் கையாள வேண்டிய முறை ஆகியவற்றை அறிந்து கொண்ட சந்தர்ப்பமும் அதுவேயாகும்.

பின்னர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் கும்பகோணம் காமாக்ஷி ஜோஸியர் தெருவில் தனியாக ஒரு அறையைத் தெரிந்தெடுத்தார். உடைந்த சாரீரத்தை உருவாக்கத் தனியாகச் சாதகம் செய்ய ஆரம்பித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ செம்மங்குடி உழைத்ததற்கு நிகராக ஒன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஸங்கீதம் தவிர வேறு எதிலுமே பிரக்ஞையில்லாமல் முனைந்த காலம் அது. எந்த நேரத்திலும், நிமிஷத்திலும் இவர் உள்ளம் ஸங்கீத தேவியை உபாஸித்துக் கொண்டிருக்கும். உமையாள்புரம் மிருதங்க வித்வான் ஸ்ரீமான் கோதண்டராமய்யர், ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையர் நன்னெறியில் அப்பியாஸத்தை நடத்தி வருவதை மேற்பார்வை பார்த்துக் கொண்டு வந்ததையும் குறிப்பிடுவது பொருத்தம்.

1926-ம் வருஷத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருக்கு விவாகம் நடைபெற்றது. இடைவிடா உழைப்பால் ஸ்ரீமான் செம்மங்குடி தமது சாரீரத்தை உருவாக்கி இயங்கச் செய்துவிட்டார். சாரீரம் உதவுபடிகளுடன் நேர் மையாக ஸஞ்சரிக்க ஆரம்பித்த தருணத்திலேதான், இவருடைய முதல் கச்சேரியும் நடைபெற்றது. திருவிசை நல்லூரில் பிராபல்யமாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ ஐயர் வாள் உத்ஸவத்தில் ஸ்ரீ செம்மங்குடி 1926-ம் வருஷத்தில் தமது குரு ஸ்ரீமான் ஸ்வாமிநாதய்யர் முன்பாகக் காலே வேளையில் கச்சேரியைச் செய்தார். உதய சூரியனின் ஒளி பொழுதேற ஏற அதிகப்படுவது போலவே, ஸ்ரீமான் செம்மங்குடியின் ஸங்கீதத்தின் ஒளியும் ஒவ்வொரு வருஷமும் எங்கும் பரந்து வீச ஆரம்பித்தது. 1931-ம் வருஷத்தில் ஸ்ரீமான் செம்மங்குடியின் ஸங்கீதம் முன்ன ணிக்கு வந்துவிட்டது. இவருடைய ஸங்கீதத்தில் ஞான பாவம் ததும்பி நிற்பதோடு, நவ நவமான கற்பனைகள் உணர்ச்சிப் பெருக்கில் ஊறி மிதந்து வரவே, அதில் ஸங்கீத வித்வான்களும் ரஸிகர்களும் ஒரு மின்னொளி போன்ற சக்தியைக் கண்டார்கள்.

ஸ்ரீமான் செம்மங்குடியின் சாரீரம் அசுர சாத கத்தில் வளம் பெற்றது. நினைத்தபடியெல்லாம் வளைந்து கொடுத்துச் சிந்தையில் விரும்பிய கற்பனைகளை வெளி யிடக்கூடிய திறமையை அதற்கு உண்டுபண்ணிக் கொடுத்தார். எனவே, இவர் ராகம் பாடும்போதும், கீர்த்தனைகள் பாடும் போதும், அதி அற்புதமான பிடி களும், ஸங்கதிகளும் மளமள வென்று ஒன்றை ஒன்று விஞ்சும் வேகத்தில் வெளிப்படுகின்றன. ஸ்வரப்பிரஸ் தாரத்திலும் அவ் விசேஷத்தைக் காணமுடியும்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையருடைய நடையில் மிகக் கவர்ச்சிகரமாக விளங்குவது இவர் கைக்கொண்டு இருக்கும், மத்தியம காலமும் துரித காலமுமாகும். இந்த இரண்டு சாதனங்களைக் கொண்டு ஸ்ரீமான் ஸ்ரீனிவா ஸையர் தமது கச்சேரியில் அற்புதமான மாளிகைகளை

எழுப்பி விடுவார். எழுப்பிய மாளிகைகளுக் கெல்லாம் இவரது கற்பனையும் சிறந்த மனோதர்மமும், சித்திர வேலைப்பாடுகளைச் செய்து மெருகு தீட்டும். உணர்ச்சியும், பாவமும் அம்மாளிகைக்குள் பிரவேசிக்க, உற்ற துணைபோல் காத்து நிற்கும். மனோதர்மத்தில் தலை சிறந்த பூர்விகப் பெரியார்கள் முன்னணிக்கு வருவதற்கு எவ்வளவு அவகாசம் பிடித்ததோ, அதைவிட அநேகம் மடங்கு குறுகிய காலத்தில் ஸ்ரீமான் செம்மங்குடியின் மனோதர்மம் நிறைந்த ஸங்கிதம், ரஸிகர் மண்டலத்தைக் கௌவிக்கொண்டு விட்டது. இதற்குக் காரணங்கள் இல்லாமல் போகவில்லை. கோனேரி ராஜபுரம் ஸ்ரீவைத்தியநாதையர், மதுரை ஸ்ரீ புஷ்பவனம் அய்யர் போன்ற பிரபல வித்வான்களுடைய ஸங்கீத நடைகளை ஸ்ரீமான் செம்மங்குடி கூர்ந்து கவனித்துத் தமது ஞானபாவத்துக்குப் பலமாகச் சேர்த்துக்கொண்டார். எனவே மனோதர்மம் என்ற அம்சம் இவரது ஸங்கீதத்தில் ஆரம்ப காலம் முதற்கொண்டு, இயற்கையாகவே இடம் பெற்று விட்டது. முதல்தரமான க்ருதுள்ளவர்,—ஸங்கீதத்தை இவர் ரஸிப்பதே ஒரு அழகு. 'எதை ரஸிக்கவேண்டும்? எதை ரஸிக்கச் செய்யவேண்டும்?' என்பவை யெல்லாம் இவருக்கு நன்கு தெரியும்.

மனோதர்மம், சுக உணர்ச்சி, பாவப்பெருக்கு இவை அனைத்தும் ஒருங்கே பொருந்திய ஸ்ரீமான் செம்மங்குடி 1930-ம் வருஷத் தொடக்கத்தி லிருந்து, தென்னாட்டு ஸங்கித ரஸிகர்களது உள்ளத்தைக் கவர்ந்தார். இவர் பாடிய ராகங்களிலும், உருப்படிகளிலும் புதுமணம் வீசத் தலைப்பட்டது. கர்நாடக ராகங்களில் பல, மறு மலர்ச்சியோடு பிராபல்யமானதற்கு ஸ்ரீமான் செம்மங்குடியின் நடை விசேஷமே காரணம். உதாரணமாக "காஹரப்பிரியா" "ஷண்முகப்பிரியா", "நாதநாமக்கிரியா", "ஜனரஞ்சனி", "மாளவி", "ஸ்ரீரஞ்சனி", "சாமா", "குந்தலவராளி", "ஆரபி" "அடாணு" "உமாபரணம்" ஆகிய ராகங்களை எடுத்துக் கொள்ளலாம். இவை ஒவ்வொன்றும் புராதனமானவை. பிரபல வித்வான்கள் ஆண்டவைதாம்.

இருப்பினும், ஸ்ரீமான் செம்மங்குடி அவற்றை அபி விருத்தியோடும், கற்பனைகளோடும் பாட ஆரம்பிக்கவே, அவை வெகுவாக விஷயம் தெரிந்த ஒவ்வொருவரையும் ஆகர்ஷித்துவிட்டதைக் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. 'பக்கலநிலுபடி,' 'மாருபல்க' கீர்த்தனைகளை, ரஸிகர்கள் மனதைவிட்டு அகலமுடியாமல் செய்தார். "மானஸ ஸஞ்சரரே" (சாமா) 'துங்கதரங்கே,' (குந்தலவராளி) போன்ற உருப்படிகளை ரஸிகர்களது உள்ளக் கஜானாவில் பத்திரப் படுத்திப் பூட்டினார். ஆனந்த பைரவியில் அவர் பாடும் "மரிவேரதி" கீர்த்தனையில் பொங்கும் பாவமும், உணர்ச்சியும் இணையற்றவை என்பது பிரசித்தம்.

"பாட்டில் மின்வெட்டுக்களையும், மிடுக்கான எடுப்புக்களையும், திருப்பல்களையும் பிரயோகித்து சாஸ்திர சம்மதமாகச் சங்கீத நடையை ஜோடித்தவர் ஸ்ரீமான் செம்மங்குடி. சாரீரத்தோடு சங்கீத உணர்வுகொண்ட மூக்கும் ஒன்றுபட ஸங்கீத சுவாஸமாக அவரது கானம் வெளிப்படுவதை இன்றும் நாம் கவனிக்க முடியும். உணர்ச்சியே அவரது ஸங்கீதத்தின் ஜீவன் என்பதை அவர் நிரூபிக்காத கச்சேரி எதுவும் கிடையாது. விந்யாஸத்துக்காக எடுத்துக்கொள்ளும் எந்த ராகமானாலும் சரி, உருப்படியாயினும் சரி, அதில் தமது நடையின் முத்திரையை வைக்கத் தவறமாட்டார். அதற்கு அவரது சாரீர நிலைமைதான் காரணம். தரங்கிணியிலுள்ள ஸ்ரீ தீக்ஷிதர் க்ருதியான "மாயே" என்ற உருப்படியை ஸ்ரீ செம்மங்குடிபாட முற்பட்டவுடன் அது அடைந்த சோபைக்கு நிகரே இல்லாமல் போய்விட்டது. ஒரே கச்சேரியில் 2, 3 தடவைகள்கூட கேட்கத்தயார் என்று ரஸிகர்கள் எண்ணும் முறையில் அதை அவர் ஜோடித்துவிட்டார். இவ்வளவு திறமையையும், பெற்ற ஸ்ரீமான் செம்மங்குடிக்கு கொஞ்சகாலம் வரை சாரீரம் வசதியில்லாமல் சங்கடங்களைக் கொடுத்துவந்தது. பிரபலமாகவிருந்த நாளில் கண்டவேகம், வீச்சு இவையெல்லாம் ஓரளவு நலிந்திருந்தன. ஆனால் ஸங்கீதச் சுவடு மட்டும் கொஞ்சம்கூட மாறவில்லை. 1943-ம் வருஷத்திற்



ஸ்ரீ செம்மங்குடி.

குப் பின்னர் மீண்டும் ஸ்ரீமான் செம்மங்குடியின் பழைய சாரீர நிலைமை ஒத்துழைப்புக்குத் தயாராயிற்று. ஆனால் அதில் முன்புகண்ட துடிப்புக்கள் நீங்கி, துல்லியமான குழைவுகள் புகுந்துகொண்டன. விச்ராந்தி முதலிடம் பெற்றுப் பரிமளித்தது. ஞானம் எப்படி முதிர்ந்திருக் கிறதோ, அதேமாதிரி அவருடைய கானமும் கனிந் திருப்பதை இன்று ரஸிகர்கள் கவனிப்பர். ஆயினும் நினைத்தபடியெல்லாம் ஸங்கீதத்தைக்கொட்டி இறைப் பதில் அவருக்கு விருப்பம் கிடையாது.

ஸ்ரீமான் செம்மங்குடியுடன் அவரது அன்றாட அலு வலைக் கவனித்தவர்களுக்கு அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஸங்கீதமும் கூடவே துணைநின்றுகொண் டிருக்கும் என்பது தெரியும். ஸங்கீதத்தைத் தொழி லாகக் கொண்டவர்களிடம் இது பொதுவாகக் காணப் படும் அம்சமென்றாலும் ஸ்ரீமான் செம்மங்குடியிடம் இதை விசேஷாம்சம் என்றே சொல்லவேண்டும். அவர் தன்னை மறந்து சுவைக்கும் கட்டங்கள் பலவற்றைக் கூறலாம். ஆயினும் ஒன்று இரண்டைமட்டும் அத்தியாவசியமாகக் கூறுவது பொருந்தும். காலை 9–மணிக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போது ஏதேனும் ஒரு ராகத்தை ஆரம்பிப்பார். அந்தராகத்தின் சகல விசேஷங்களும் துலங்கி, தமக்கு மனத்திருப்தி ஏற்பட்டாலன்றி, தாம் செய்ய ஆரம்பித்த காரியம், அதற்கான அவகாசம் முத லிய எதிலுமே அவர் கவனம் திரும்பாது. அதேமாதிரியே சாப்பாட்டு வேளையிலும்!—சாப்பிடும்போதும் அவருக்கு 'சதஸ்' வேண்டும். அதாவது கூட யாராவது உட் கார்ந்தாவது இருக்கவேண்டும். போஜனம் நடக்கையில் ஸங்கீதம் ஆரம்பமாகும். மணி போவதே தெரியாமல் பாடுவார். இலைக்கு முன்னால் உட்கார்ந்திருப்பதை நினைப்பூட்டும் நிலைமைவரையில், அவர் ஆத்மானந்த வேலை தொடர்ந்துகொண்டிருக்கும். கும்பகோணத்தில் இருக்கும்போது, அங்கு பிரபல நாகஸ்வரக்காரர்கள் வாசிக்கிறார்கள் என்றால் உடல் நிலையையோ, அயர்ச்சி யையோ சற்றும் பொருட்படுத்தாமல் சாமான்ய ஜனங்

களின் கூட்டத்தில் தாமும் ஒருவராக நின்றுகொண்டு கண்களை இறுக மூடியவண்ணம் அனுபவிப்பார். நாக ஸ்வரங்களில் புகுந்துவரக்கூடிய விசேஷங்களையெல்லாம் தமது பாட்டின் போக்கில் வெகு பக்குவமாகவும் ஞான பூர்வமாகவும் இடம்பெறச் செய்யும் திறமை அவருக் குண்டு. அற்புதமாக மற்ற பாட்டுக்களை ரஸிப்பார். கிராக்ய சக்தியோ ரொம்பப் பெரிது.

ஸ்ரீமான் செம்மங்குடிக்குள்ள தெய்வபக்தியும், தேச பக்தியும் மிக்க உயர்தரமானது. கதர் உடுப்பதைத் தமது தர்மமாகக் கருபதுவர். தாமே நூல்நூற்றுக் கதர் ஆடை களை அணிந்துகொள்ளும் வழக்கம் ரொம்ப நாள்வரை இருந்து வந்தது. மதபக்தியும், அதிகம். நாட்டின் நிலைமை யையும், சர்வதேச நிலைமையையும் நன்கு அறிந்தவர். தமிழ்ப் பத்திரிகை படிக்காத நாளே கிடையாது. தமிழில் அவருக்குள்ள ஆர்வம் கொஞ்சநஞ்சமில்லை. கவிச் சக்ர வர்த்தி பாரதியாரின் பாட்டுக்களைக் கச்சேரிமேடைகளில் மிகப் பிரமாதமாகப் பரிமளிக்க ஸ்ரீமான் செம்மங்குடி செய்திருக்கும் தொண்டு ஒப்பு உயர்வற்றது. பல அருமையான வர்ணமெட்டுக்களைக் கொடுத்து அவர் பாடிய பாரதி கீதங்கள் பல. "ஆசை முகம் மறந்து போச்சே!", "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" (ராகமாலிகை), "பகைவனுக்கருள்வாய்" (மாண்டு) முதலிய பாடல்கள் வளம்பெற்று ஒவ்வொருவரும் பாடத் தலைப் பட்டது, அவர் செய்த தொண்டின் பயன்தான். இவ் வளவு யோக்யதைகளையும் தேடிக்கொண்ட ஸ்ரீமான் செம் மங்குடி ஸ்ரீனிவாசய்யரின் ஸங்கீதம், திருவாங்கூர் மன்னர் குடும்பத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. எனவே ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யரை 1940-ம் வருஷத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாக நியமித்தார்கள். சிறிதுகாலத்துக்குப் பின்னர் அவருக்குத் தேகநிலைமை சௌகரியமாக இல்லை. இச்செய்தி கேட்டு திருவாங்கூர் மன்னரும், மஹாராணியும ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீனி வாஸய்யரைத் திருவனந்தபுரத்துக்கு வரவழைத்தார் கள். அங்கு அவசியமான சகல சிகிச்சைகளும் அளிக்

கப்பட்டன. குணமும் ஏற்பட்டது. ஏற்கனவே திருவாங்கூரில் மகாராஜா ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளைத் திரட்டி புத்தக ரூபமாக வெளியிடும் வேலையில் ஈடுபட்டிருந்தார், காலஞ்சென்ற காயக சிகாமணி ஸ்ரீ எல். முத்தையா பாகவதர். இத்தொண்டில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யரும் ஈடுபட்டார். இன்றும் இவ்வேலையில் அவர் தீவிர சிரத்தை கொண்டிருக்கிறார். அக்கீர்த்தனைகள் பலவற்றை மெருகு தீட்டி கச்சேரிகளில் பாடவும் பாடுகிறார். சாருகேசி ராகத்தில் அவர் பாடும் "கிருபயா பாலய," பூர்வ கல்யாணியில் "தேவ தேவ", தோடியில் 'ஸரஸிஜ நாபமுராரே' இவை அனைத்தும் அடைந்திருக்கும் செல்வாக்குக்கு ஸ்ரீமான் செம்மங்குடி புரிந்திருக்கும் உதவி சாமான்யமல்ல. அதுபோலவே அவர் ஸ்ரீ ஸதாசிவப் பிரும்மேந்திரரின், பக்திரஸக் கீர்த்தனைகளுக்கும் மிக்க உயர்வான மெட்டுக்களை அமைத்திருக்கிறார். ஸங்கீதத்துக்கு உருவான தொண்டு செய்பவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யர்.

தன்னடக்கமும், விசுவாசமும் உள்ள சுபாவம். குருவிடம் மட்டற்ற பக்தி. ஆர்ப்பாட்டங்களிலும், பகட்டிலும் நாட்டம் கொள்ளாதவர். மரியாதையாகப் பழகுவதில் தேர்ந்தவர். தமது சிஷ்யர்களை தம் கண்போல பாவித்து மிக்க அன்புடன் நடத்துவார். இது இவரிடம் தனியான அம்சம். அவர்கள் வசதியில் நிறைந்த சிரத்தை கொண்டவர். தமது சிஷ்யர்களின் க்ஷேம லாபத்தில் இவர் காட்டும் சிரத்தை அபாரம். பெரியோர்களிடத்தில் நிறைந்த பக்தியும், பணிவும் கொண்டு நடப்பவர். சம்பாஷணையில் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கும். பத்திரிகை படிப்பதனால் உள்ள பயனை நன்கு உணர்ந்தவர். ராஜ்ய நிர்வாகத்தில் கலைக்கும் முக்கிய இடமுண்டல்லவா? எனவே ராஜ சேவையில் ஈடுபட்ட ஸ்ரீமான் செம்மங்குடிக்குச் சென்ற 1945-ம் வருஷப் பிற்பகுதியில் "ராஜ்ய ஸேவா நிரதர்" என்ற பட்டம் திருவாங்கூர் தர்பாரில் வழங்கப்பட்டது. 1944—45 முதல் இவர் மகாராஜா ஸ்ரீ ஸ்வாதித்

திருநாள் சங்கீத வித்வத் சபையின் பிரின்ஸ்பாலாக விருக்கிருர். மனப்பூர்வமாக உழைத்து உழைத்து, சொந்த முயற்சியில் தேடிக்கொண்ட சொத்து ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யர் ஸங்கீதம். எனவே அதன் மணம் எங்கும் வீசிப் பரிமளிப்பது இயற்கை. அம்மணம் குன்ருமல் சிரஞ்சீவியா யிருக்கவேண்டுமென்பதுதான் கலாபிமானிகளின் விருப்பம்.

# முசிரி ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர்

வித்வான் முசிரி......என்று சொல்லவேண்டியதுதான் தாமதம். பெயரைப் பூர்ணமாக முடிக்கும் முன்பாக, "விரித்த செஞ்சடையாட" ஆனந்தத் தாண்டவம் புரிந்த சிவபெருமானின் திவ்வியத் தோற்றமும் அவனதுபொற் பாதக் கமலங்களில் "திருவடி சரணம் என்று நம்பிவந்து" வணங்கும் பக்தர்களின் கோஷ்டியும் தாமாக மனக்கண் முன் உருவடைந்துவிடும்! ஆம். முசிரி ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயரின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே "விரித்த செஞ்சடையாட" என்ற விருத்த ராகமாலிகையையும், காம்போஜியில் அவர் பாடிய "திருவடி சரணம்" கீர்த்தனையையும் உதடுகள் தாமாக உச்சரிக்கின்றன. உள்ளம் உருகி உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும் வண்ணம் பாவத்தைப் பொழிந்து, அவர் பாடும்முறை ரஸிகர்களைப் பித்தர்களாகவே ஆக்கிவிட்டதென்ருல் மிகையில்லை. இசைத்தட்டில் கேட்டவர்கள் நேரில் அவரது கச்சேரியைச் சுவைக்கப் பேராவக் கொண்டார்கள்.

ஸ்ரீமான் முசிரி சுப்பிரமண்ய ஐயர் சங்கீதத்தில் எவ்வளவு உணர்ச்சியும், உருக்கமும் குடிகொண்டிருக்கின்றனவோ, அதேபோல அவரது தோற்றத்தில் பக்தியும், பதவிசான தன்மையும் மேலெழுந்து நிற்கின்றன. கலைப்பண்புள்ள மனத்தை உடையவர் என்பதும், சுய மதிப்பும், தன்னடக்கமும் நிறைந்தவர் என்பதும், அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே மனம் முடிவு கட்டிவிடும். உருவத்திலும், பாட்டில் உள்ள உணர்ச்சி

விசேஷத்தாலும் கௌரவமான ஒரு ஸ்தானத்தைப் பொதுவாழ்வில் ஏற்படுத்திக்கொண்ட இந்த முசிரி யார்? அவரது பூர்வோத்திரம் என்ன? முதலிய தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த முசிரி என்ற ஊரில் 1899-ம் வருஷம் ஏப்ரல் 9-ந் தேதியன்று பிறந்தார். சங்கீதத்தில் நல்ல ஞானமும் ருசியும் கொண்டவர் இவரது தந்தை ஸ்ரீமான் சங்கர சாஸ்திரியார். சமஸ்கிருதத்தில் மகா பண்டிதர்.

ஸ்ரீமான் முசிரி பிறந்த முதல் வருஷத்திலேயே, அவருடைய தாயார் காலமாகி விட்டார். இவருக்கு ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் இருந்தனர். சகோதரி 1908-ம் வருஷத்திலும், சகோதரர் 1929-ம் வருஷத்திலும் காலமாயினர். ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயரைப் போலவே சங்கீதத்தில் பற்றுக்கொண்டிருந்த இவரது சகோதரர் உத்தியோகத்தில் இருந்தார்.

ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயர் திருச்சியில் படித்தவர். காலேஜ் படிப்பும் அவ்விடமேதான். பள்ளிக்கூடம், காலேஜ் இவற்றில் சேர்ந்து 17-வயதுக்குள் படிப்பை முடித்துவிட்டார். ஸங்கீதத்திலிருந்த ஆர்வம் காரணமாக ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயர் சாஸ்திரீயமான பயிற்சியில் ஈடுபட விரும்பினார். புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் பிரின்ஸ்பாலாகவிருந்த ஸ்ரீமான் எஸ். ராதா கிருஷ்ணய்யரின் சகோதரர் ஸ்ரீமான் எஸ். நாராயண ஸ்வாமி ஐயரிடம் தான் முதன் முதலில் முறைப்படி அப்பியாஸம் செய்தார். காலேஜ் படிப்பை முடித்துக்கொண்டவுடன் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் புதுக்கோட்டைக்குச் சென்றிருந்தார். அங்கு ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயருடைய தந்தையின் நண்பர் இருந்து வந்தார். ஸ்ரீ முசிரிக்குள்ள ஸங்கீத ஆவலை அறிந்த அவர், ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரிடம் அழைத்துச்சென்று பயிற்சிக்கு ஏற்பாடுசெய்தார். ஸங்கீத உலகத்தில் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர் அனைவருக்கும் தெரிந்தவர். அவரிடம் ஸ்ரீமான்

சுப்பிரமணிய ஐயர் சுமார் 3 வருஷம் அப்பியாஸம் செய்தார். அதற்குப்பின் பிரபல பிடில் வித்வான் கரூர் ஸ்ரீமான் சின்னஸ்வாமி ஐயரிடம் குருகுல வாஸம் செய்யச் சேர்ந்தார். ஆனால் இது சில மாதங்கள் வரைதான் நடைபெற்றது. 1920-ம் வருஷத்தில் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் வித்வான் ஸ்ரீ ஸபேச ஐயரிடத்தில் சென்னையில் குருகுல வாஸம் செய்யச் சேர்ந்தார்.

5 வருஷகாலம் வரை அவரிடம் பயின்று ஸங்கீதத்தில் சிறந்த ஞானத்தையும், கச்சேரி செய்வதற்கான திறமையையும் பெற்றார். ஸ்ரீமான் முசிரி சுப்பிரமண்ய ஐயர், 1917-ம் வருஷத்தில் திருச்சியில் நடைபெற்ற ஒரு பொது வைபவத்தில் முதல் கச்சேரியைச் செய்தார். இந்தக் கச்சேரியின் முடிவில் திருச்சியில் செல்வாக்கு நிறைந்திருந்த ஸ்ரீமான் எப். ஜி. நடேச ஐயர் ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயரின் திறமையை மெச்சி ஓர் பதக்கத்தைப் பரிசாக வழங்கினார். ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் குருகுல வாஸம் தீர்ந்த பின்னர் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார். சென்னையில் அவர்முதன் முதலாக 1920-ம் வருஷத்தில் திருவல்லிக்கேணியில் நடைபெற்று வந்த ஸபையில் கச்சேரி செய்தார். 1922-ம் வருஷம் முதற்கொண்டு, தொழிலில் தீவிரமாக ஈடுபட்டு கச்சேரிகளைச் செய்யத் துவக்கினார்.

ஸ்ரீமான் முசிரி தமது ஆரம்ப நாட்களில் 5 கட்டை சுருதியில் பாடுவதுண்டு. ஆதார சுருதியை அதிகமாக வைத்துக்கொண்டு பக்க வாத்தியக்காரர்களின் வேலை சுலபமாக நிறைவேறுவதற்குச் சாதகமான நிலைமையை உண்டுபண்ணியவர்களில், ஸ்ரீமான் முசிரியை முக்கியமாகச் சொல்லவேண்டும்.

ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயருடைய பாட்டை சோபை பெறச்செய்யும் பல்வேறு அம்சங்களில் இவரது சாரீரமும் ஒன்று. பயிற்சியினால் அதை அவர் பக்குவமாக்கிக் கவர்ச்சிகரமாக உபயோகிப்பது வழக்கம். ஸர்வசாதாரணமாக மேலெழுந்து பேசக்கூடிய வசதிகளெல்லாம் அவருடைய சாரீரத்தில் உண்டு. குழைவாகவும்,

குளிர்ச்சியாகவும், பாவங்களுக்குப் பொருத்தமாகப் பேசக்கூடியவகையில் அவர் அதற்கு பயிற்சி கொடுத்தார். தாரஸ்தாயி ஸஞ்சார காலங்களில் கரகரப்போ, பிசிருகளோ இல்லாமல் சுக பாவத்தோடு தெளிவாகப் இயங்கக்கூடிய தன்மை அவருடைய சாரீரத்தில் விசேஷமாகக் குடிகொண்டிருந்தது. கவர்ச்சிக்குப் போதிய காத்திரத்துடன் கணீர் என்று சுருதியை அணைந்த வண்ணம் ஸங்கதிகளேயோ, பிடிகளேயோ தாங்கிப் பேசக்கூடிய மாதிரியில் அவர் தமது சாரீரத்தைச் செப்பனிட்டார். ஸ்ரீமான் முசிரியின் ஸங்கீதம் பிராபல்யமாகி அதில் மோக சக்தி பிறந்ததற்கு அவருடைய ஞான பாவமும், பழுத்த பகுத்தறிவுமேதான் காரணங்கள். ஸாஹித்தியங்களின் அர்த்த பாவத்துக்கு அவர் அளிக்கும் முக்கிய ஸ்தானத்தைப் போல வேறு யாரேனும் செயலில் செய்திருக்கிறார்களா என்று ஆராய்ந்தால் தொகை மிக மிகச் சொற்பமாகவேதான் இருக்கும். அவர் பாடும் கீர்த்தனை எந்த பாஷையில் இருந்த போதிலும், உள்ளத்து உணர்ச்சியைப் போய் தொட்டு உலுக்குவதற்குக் காரணம், அர்த்த பாவத்தை அறிந்து ஸங்கீத பாவத்தைப் பிரயோகிப்பதே ஆகும். கனமாகவும, மெல்லியதாயும் அவரது சாரீரம் பிரயோகமாகும்பொழுது, அவர் அனுஷ்டிக்கும் கட்டுப்பாட்டின் விசேஷம் எவ்வளவு கணிசமாகப் பயன் படுகிறது என்பதும் தெளிவாகும். ஸ்திரீகளுடைய சாரீரத்தில் சாதாரணமாகக் காணப்படும் சுக விசேஷங்கள் ஸ்ரீமான் முசிரியின் சாரீர அமைப்பில் இடம் பெற்றிருப்பதை அவரது கச்சேரிகளைக் கேட்டானந்தித்தவர்கள் கவனித்திருப்பர். இத்தகைய சுக நய அம்சங்கள் நிரம்பப் பெற்ற ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயருடைய ஸங்கீதம் ஞானபாவமும் கூடச் சேர்ந்து ரஸிகர்களிடையே செழித்து, கொழித்து வளர்ந்தது இயற்கைதான். இந்தக் கவர்ச்சி குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துடன் நிற்கவில்லை. இந்தியா பூராவும், ஏன் கடல் கடந்தும்கூட வியாபித்துத்தானிருந்தது. அத்தகைய கவர்ச்சிகரமான நடை அமைந்த ஸங்கீத வாழ்க்கை ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயருடையது. எனவே

ஸ்ரீமான் முசிரி 1932-ம் ஆண்டில் கர்நாடக ஸங்கீதப் பிரியர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அகில இந்திய ஸங்கீதசுற்றுப் பிரயாணத்தை ஏற்றுக்கொண்டார். கடல்கடந்து சென்றிருந்த இந்தியர்களுடைய கான தாபத்தைப் பூர்த்திசெய்யும் சந்தர்ப்பமும் ஸ்ரீமான் முசிரியின் ஸங்கீத வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிறது. அதாவது 1935-ம் வருஷத்தில் கோலாலம்பூரிலும், (எப். எம். எஸ்.) மற்ற பகுதிகளிலும் தொடர்ச்சியாக அநேகம் கச்சேரிகளைச் செய்தார். இலங்கை சென்றும் கச்சேரிகள் செய்தார். 1938-ம் வருஷத்தில் ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் தென்னுப்பிரிக்காவுக்குச் செல்லவேண்டிய ஓர் சந்தர்ப்பம் வந்தது. அங்குள்ள தென்னிந்தியர்கள் ஸ்ரீமான் முசிரியை டர்பன்-என்ற விடத்தில் கச்சேரி செய்யவேண்டுமென்று கடிதப் போக்கு வரத்து நடத்தினுர்கள். ஆனுல் அச் சந்தர்ப்பத்தை ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் பயன் படுத்திக்கொள்ளவில்லை. அது சாத்தியப்படவுமில்லை.

ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் ஸங்கீதம் விளம்ப காலத்தில் விசேஷமான கவர்ச்சியைப் பெறுவது கண்கூடு. பாடும் காலம், பாட்டின் கருத்து, அதற்கு அநுசரணையாக உருக்கமுள்ள பாவம் இவ்வளவும் சேருவதால் ரஸிகர்களை ஆகர்ஷிக்கும் சக்தி அவருடைய பாட்டில் மேலோங்கி நிற்கிறது. அவர் பின் பற்றும் நடை ரஞ்சகமானது. சாஸ்திரத்தை யொட்டிய தூய்மையும் அவரது பாட்டில் உயர்வானது. சில கீர்த்தனைகளை அவர் தெரிந்தெடுத்துப் பாடும்போது அவை ஸ்ரீமான் முசிரிக்காக வென்று ஏற்பட்டவை தானே என்று சந்தேகிக்கும் வண்ணம் இருக்கும். அத்தகையை அற்புதமான ஸ்வரூபத்தை அவர் அக்கீர்த்தனைகளுக்கு அளித்திருக்கிருர். பிராசீனமான க்ருதிகளைப் பொறுக்கி அதைப் பிராபல்யமாக்குவதற்கு வேண்டிய வேலைப்பாடுகளை யெல்லாம் செய்து மினுமினுப்போடும், சுவையோடும் பாடி வளப்படுத்தியவர்களுடைய கோஷ்டியில் ஸ்ரீமான் முசிரிக்கு முக்கியமான இடம் உண்டு. ஸ்ரீ தீக்ஷிதர் கீர்த்தனைகளைப்

பாடுவதில் அவருக்குப் பிரத்யேகமான ஆற்றல். "பாலிம்சுகாமாக்ஷி" "கஞ்சதளாய தாக்ஷி" ஆகிய கீர்த்தனை களை அவர் பாடும் முறை ஒப்பற்றது. சவுக்கக் காலத்தில் அவர் அக் கீர்த்தனைகளைப் பாடுவதிலுள்ள விசேஷம், தனிமையானது என்பதில் சந்தேகம் இல்லை. பாவம் செறிந்த கார்வைகள் கொடுத்து, கமகங்கள் நலிவில்லாமல், முழு மூச்சுடன் அனுபவித்துப் பாடும் இயல்பும் அவருடைய சாரீரத்தில் அமையப் பெற்றிருக்கிறது. மத்தியமகால உருப்படிகளையும் அவர் கவர்ச்சிகரமாக ஆளுவார். பாடுவது எதுவாயினும் மனோதர்மம், மெருகு, சுகபாவம், இவற்றோடு குழைவு, உருக்கம் ஆகிய அவ்வள வையும் ஒருங்கே சேர்த்து தமது நடையின் சுவட்டை நிர்ணயித்துக் கொண்ட வித்வான் ஸ்ரீமான் முசிரி சுப்பிர மணிய ஐயர். உதாரணமாக 1932-ம் வருஷத்தில் ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் இசைத் தட்டுக்களில் பதிவு செய்துகொள்ள சில பாட்டுக்களைப் பாடினார். அவற்றில் அவரது மேடைக் கச்சேரிகளில் பிரதானமாக விளங்கிய ஆபேரி ராகக் கீர்த்தனை 'நகு மோமு'வும் ஒன்றாகும். இதை எத்தனை தடவை வேண்டுமானாலும் கேட்டானந்திக்கத் தயார் என்று ரஸிகர்கள் ஒரு முகமாயிருப்பதை ஸ்ரீமான் முசிரி அறிவார்; அதை இசைத் தட்டுப் பதிவு செய்தவர்களும் அறிந்தனர். இருவரும் ஒன்றுபட்ட அபி ப்பிராயத்தோடு முனையவே "நகு மோமு" இசைத் தட்டு வெளி வந்தது. அப் பாட்டு அடைந்த பிராபல்யத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. அக்கிருதியை ஸ்ரீமான் முசிரி பாடும்போது அதிலுள்ள சுகபாவ வழியைத் தான் மனம் நாடுமேயன்றி, அவர் அக் கீர்த்தனையை சோபிக்கச் செய்த ஸங்கீத சாஸ்திர வேலைப்பாட்டில் நாட் டம் செல்லாது. கச்சேரியில் பாடுவதைப் போலவே இசைத் தட்டிலும் இவரது பாட்டு அற்புதமாகப் பதி வானதற்கும் இவருடைய துல்லியமான சாரீரம்தான் கார ணம். "மைக்"குக்கு அவருடையதைப் போல பொருத்த மாக்வுள்ள பாடகர் சாரீரம் வேறு ஒன்று கிடையா தென்றே சொல்லிவிடலாம். வடிகட்டின சுகநாதமாக இவரது சாரீரம் 'மைக்' கிலிருந்து வெளிப்படுவதால்

இசைத் தட்டின் அமைப்பு விசேஷம் பூர்ணமாகப் பூர்த்தி யடைகிறது. பாவப் பெருக்கோடு, பக்தியும் பெருகும் வண்ணம் அநேக உருப்படிகளை ஸ்ரீமான் முசிரி பாடு வார். இத்தகைய இரு அம்சங்களும் ஒருங்கு பொருந்திய வரை பக்தி பூர்வமாகவுள்ள ஒரு ஸினிமாப் படத்தில் நடிக்கச்செய்தால் என்ன என்ற உணர்ச்சி கோயம்பத் தூர் ஸெண்டிரல் ஸ்டுடியோக்காரர்களுக்கு உதித்தது போலும்! எனவே 1937-ம் வருஷத்தில் ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயரை "துகாராம்" என்ற தமிழ்ப் படத்தில் நடிக்க ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீமான் முசிரி "துகாராம்" வேஷத்தில் அப்படத்தில் தோன்றினர். மேடைக் கச்சேரி களில் ஈடற்ற நன்மதிப்பைத் தேடிக்கொண்ட ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் தோன்றிய அப்படத்தின் தரம் எப் படியிருந்ததென்று விமர்சனம் செய்வதைக் காட்டிலும் படத்தொழிலில் ஈடுபட்ட கர்நாடக வித்வான்களில் ஸ்ரீமான் முசிரியும் ஒருவர் என்று சொன்னால் போதும். தோடி, காம்போஜி ஆகிய ராகங்களில் ஸ்ரீமான் முசிரிக் குச் சுவை அதிகமாயினும், அபூர்வ ராகங்களில் அவருக்கு ருசி குறைவில்லை. ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் 1939-ம் வருஷத்தில் நடைபெற்ற சென்னை ஸங்கீத வித்வத் ஸபை மகாநாட்டுக்குத் தலைமை வகித்ததால் 'ஸங்கீதகலா நிதி' யானர். அவரது அக்கிராஸனப் பிர சங்கத்தில் ஸங்கீதக் கலை வளர்ச்சிக்கான அரிய விஷயங் கள் அடங்கியிருந்தன. ஸங்கீத சாஸ்திர சம்பந்தமாக அவ்வப்போது எழும் பிரச்னைகளில் தீவிரமாகக் கலந்து கொண்டு நேரிய பாதையை நிர்ணயிப்பதில் நிறைந்த சிரத்தை கொண்டவர். 1940-ல் திருவாங்கூர் ஆஸ்தான வித்வானாக நியமனம் பெற்றார்.

திருவையாற்றில் ஸ்ரீ தியாகப் பிரம்ம மகோற்ச வத்தைச் சிறப்பாகவும், ஒருமைப்பாட்டோடும் நடை பெறச் செய்வதற்கு ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சாமான்யமல்ல. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் உற்சவத்தை கட்சி கட்சி யாகப் பிரிந்து நின்று கொண்டாடுவதைவிட எல்லா

வித்வான்களும் ஒன்ருகவிருந்து நடத்துவது ரொம்ப விசேஷம் என்ற உணர்வு மேலிடச் செய்தவர்களில் ஸ்ரீமான் முசிரி மிகமிக முக்கியமானவர். 1940-ம் வருஷத்தில் இந்த உற்சவத்தை விமரிசையாக நடத்துவதற்கு ஓர் கமிட்டியை ஏற்படுத்தினார்கள். இதிலிருந்தவர்கள் ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயரைக் காரியதரிசியாகவும் பொக்கிஷதாரராகவும் இருக்கவேண்டுமென்று விரும்பவே ஸ்ரீமான் முசிரி உடன்பட்டார். திருவையாற்றில் காலஞ்சென்ற பிடில் வித்வான் கோவிந்த ஸ்வாமிப் பிள்ளை, ஸ்ரீமான்கள் ஸஞ்சீவி ராவ், அரியக்குடி ராமானுஜையங்கார் ஆகியவர்கள் ஒரு கட்சியாகவும், பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் கோஷ்டி இன்னொரு கட்சியாகவுமிருந்து விழாவை நடத்திவருவதை ஒன்று படுத்தும் முயற்சி 1937-ம் வருஷத்திலிருந்து ஆரம்பமாயிற்று. 1939-ம் வருஷத்தில் தான் எல்லாருக்கும் பொதுவாக ஒரு ஏற்பாட்டை வகுத்து வைபவத்தை நடத்தும் யோசனை உருக்கொண்டது. அமுலுக்கும் வந்தது.

இத்தகைய பொறுப்பை ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் இன்றுவரை தாங்கிவருகிருர். அடக்கம், விவேகத்தோடு காரியகரமாகப் பேசக்கூடிய சக்தி, சமய சந்தர்ப்பத்துக்கு அனுசரணையாகச் செய்யும் காரியங்களை அமைத்துக்கொள்ளும் நேர்மை முதலிய அனைத்தும் அவரிடம் எல்லோரும் அன்புகொள்ளச் செய்யத் தூண்டும் அரிய அம்சங்களாக விருக்கின்றன. விஷயங்களைத் திட்டமாகவும், தெளிவாகவும் கிரஹித்துக்கொண்டு, ஆழ்ந்து யோசித்த பிறகே பதில் சொல்வார். பதட்டமாக, அவசரப்பட்டு எதையும் செய்வது அவரது பழக்கமல்ல. பணிவும், பக்தியும் அவரிடம் தெளிவாகக் காணக்கூடியவை. நண்பர்களிடம் பக்தியும் விசுவாஸமும் உண்டு. ஸங்கீதத்தாலும், கவர்ச்சிகரமான பழக்க வழக்கத்தாலும் ஸ்ரீமான் முசிரி சுப்பிரமணிய ஐயர் எல்லோருடைய நன்மதிப்புக்கும் பாத்திரமாக விளங்குகிருர். தேக நலம் திருப்திகரமாக இல்லாததால், அவர் தீவிரமாகக் கச்சேரி


களில் ஈடுபட இயலாமல் இருக்கிறது. இது தற்காலிக மானதாகவே யிருக்கும். மீண்டும் அவர் எல்லா ரஸிகர்களையும் திருப்தி செய்யும் நிலைமையைப் பெற வேண்டுமென்பதே விருப்பம். அவ்விருப்பம் நிறை வேறும் என்பதற்கு இன்று ஸ்ரீமான் மஹாராஜபுரம் விச்வநாதையர் சிறந்த உதாரணம். எதிர்காலத்தில் நம் பிக்கை கொள்வதற்கு அவ்வுதாரணம் பெருந்துணை செய்வதும் கண்கூடு.

# ஸ்ரீ. ஜி. என். பாலசுப்பிரமணியன்

ஓய்வு நேரத்தில் மன உல்லாஸத்துக்காகச் செய்யும் காரியத்துக்கு "ஹாபி" என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். செய்துதான் தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தமோ, கடமையோ இதில் கிடையாது. பிரதிப் பிரயோசனத்தை உத்தேசித்துச் செய்யும் வேலை யும் இது வல்ல. சிலருக்குப் புகைப்படம் எடுப்பது "ஹாபி". சித்திரமெழுதுவதும், தோட்ட வேலையில் ஈடு படுவதும், இன்னும் சிலருக்கு ஓய்வுநேர உல்லாஸ வேலை யாக விருக்கலாம். அந்த மாதிரி ஸ்ரீமான் ஜி. என். பால சுப்பிரமணியன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஸங்கீதத்தைத் தமது 'ஹாபி'யாகத் தெரிந்தெடுத்துக்கொண்டார். அதை ஏன் 'ஹாபி'யாக அவர் பொறுக்கி எடுத்துக்கொண்டார் என்றால், ஸங்கீதம் அவரது மனதுக்கு ரொம்பப் பிடித்த மாக விருந்தது முதல் காரணம். தந்தை வழியாகவும், தாய் வழியாகவும் அக்கலை உணர்ச்சி அவரது பிறப்பி லேயே ஒன்றியிருந்தது என்பது இரண்டாவது காரணம்.

ஆனால் ஓய்வு நேர உல்லாஸ வேலையாக அமைந்த ஸங்கீதமே அவருடைய வாழ்க்கைத் தொழிலாக மாறி யதுதான் ஆச்சர்யம்! அவர் ஆரம்ப காலத்தில் எண்ணிய வாழ்க்கைக்கும் இன்று அவருடைய அனுபவ வாழ்க்கைக்கும் சம்பந்தம் காண முடியாதுதான். ஆனால் இதிலும் ஒரு தொடர்பு இருக்கத்தான் இருக்கிறது. ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கைக்கொள்ள விரும்பியது சட்டத் தொழில். அதாவது 'அல்பாகர் கோட்', 'ஆர்

கண்டி'—துணியில் அமைந்த அழகான 'டர்பன்' 'அட்வ கேட்' என்பதற்கு அடையாளமான ஸன்னது. இவற்றோடு 'கச்சேரி'களுக்குச் சென்று நிதம் நிதம் ஒவ்வொரு பிரபல வழக்கிலும் காலை 11-முதல் மாலை 3 அல்லது 4-மணி வரையில் வாதாடி அன்றாட அவகாசத்தைப் பயன்படுத்த எண்ணியிருந்தார். அவர் உத்தேசித்த வாழ்க்கைக்கும் இன்று அவர் ஈடுபட்டுள்ள வாழ்க்கைக்கும் இடம், காலம் இரண்டிலும்தான் வேற்றுமை! 'அட்வகேட்' ஸ்ரீ பாலசுப்பிரமணியமாக விருந்திருந்தால், தாம் ஆஜராக வேண்டிய நாட்களில் காலை 11-மணிக்கு 'கச்சேரி' களுக்கு, அதாவது கோர்ட்டுகளுக்கு ஆரம்பத்தில் குறிப்பிட்ட உடுப்புகளோடு போய்வரவேண்டி யிருந்திருக்கும். ஆனால் இன்று அவர் கைப்பற்றியிருக்கும் தொழிலுக்கு அத்தகைய உடுப்புக்கள் தேவையில்லை; காலை 11-மணிக்குப் பதிலாக மாலை 4-மணிக்கு "கச்சேரி" களில் ஆஜரானால் போதும்! எனவே ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் அடையவிரும்பிய 'அட்வகேட்' பதவிக்கும் அவர் இன்று அடைந்திருக்கும் ஸங்கீத 'அட்வகேட்' பதவிக்கும் வித்தியாசங்கள் அதிகமில்லை. ஆனால் ஒரு முக்கிய வித்யாசம் மட்டும் உண்டு. நீதிஸ்தலங்களில் ஆஜராகும் அட்வகேட்டாக அவர் இருந்திருப்பாரானால், அவர் வழக்காடும் ஒரு நீதிபதிக்கோ அல்லது 2, 3 நீதிபதிகளுக்கோ திருப்தி ஏற்படும்படி வாதாடினால் போதும். ஸங்கீத ஸபைகளில் நடைபெறும் "கச்சேரி"களில் ஆஜராகும் அட்வகேட் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் ஸபையிலுள்ள அவ்வளவு நீதிபதிகளையும் திருப்தி செய்யவேண்டும்! இதுதான் அந்த வித்தியாசம்! அட்வகேட்டுகளின் தொகை பெருகிவருவது போலவே நீதிபதிகளின் தொகையும் நாளுக்குநாள் பெருகிவருகிறது. எனவே நீதிபதிகளுக்கு நியாயமான கட்சியை எடுத்துரைத்து, அவர்கள் நேர்மையான முடிவுக்குவரும்படி செய்ய வேண்டியது அட்வகேட்டுகளின் பொறுப்பு. அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர் ஸ்ரீமான் ஜி. என். பாலசுப்பிரமணியம். அவர் யார்?



ஸ்ரீ ஜி. என். பி.

சென்னைத் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் ஹெட்மாஸ்டராக இருந்த ஸ்ரீமான் ஜி. வி. நாராயண ஸ்வாமி ஐயரைத் தெரியாதவர்கள் வெகு சொற்பம். பள்ளிக்கூட நிர்வாகத்தில் மட்டுமின்றி, பொது வாழ்வில் பெருமையைத் தேடித்தரக்கூடிய பல்வேறு குணாதிசயங்களும் அவரிடம் அமையப் பெற்றிருந்தன. கீதம் பற்றியெழுப்பது போன்ற சக்தி கொண்ட சங்கீதஞான விசேஷமும் அவரிடம் குடிகொண்டிருந்தது. ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர். ஆரம்பப் படிப்பைக் கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய இடங்களில் பூர்த்திசெய்து பி. ஏ. பட்டம் பெற்றவர். பின்னர் எல். டி. பரீட்சையில் தேறித் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் ஆசிரியராகப் பதவி வகித்து அதன் ஹெட்மாஸ்டராகவும ஸ்தானம் தாங்கினார். அவருடைய சீமந்தப் புதல்வராக ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் குற்றாலத்துக்குத் தெற்கே இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள கூடலூர் என்ற கிராமத்தில் 1910-ம் ஹு ஜனவரி மாதம் 6-ந்தேதியன்று பிறந்தார். இவருக்கு 5 சகோதரிகளும், ஒரு சகோதரரும் இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு ஸங்கீத ருசி பிறப்பிலேயே ஏற்பட்டதாகும். தந்தைக்கு ஸங்கீதத்திலிருந்த ஆற்றல் ஒருபுறமிருக்க, இவரது தாயார் அழகாகப் பாடும் சக்தி கொண்டவர். எனவே ஸ்ரீமான் பால சுப்பிரமணியம் 2-வயதுக் குழந்தையாக இருக்கும் போதே ஸங்கீதத்திலுள்ள ஆர்வ உணர்ச்சியைக் காட்ட ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

சிறு பிராயம் முதற்கொண்டே ஸங்கீதம் என்றால் அதில் தனியாக ஒரு சிரத்தை. இது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களும் குடும்பத்தில் அதிகரித்து வந்தன. முக்கியமாக ஸ்ரீ பாலசுப்பிரமணியத்தின் தந்தை ஸங்கீதாப்பியாசத்தில் ஈடுபட்டார். பிடில்

பயிற்சியில் அவர் நாட்டம் செலுத்தலானார். ஸ்ரீ கரூர் சின்னஸ்வாமி ஐயரிடம் ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயருக்குப் பயிற்சி. தற்போது அடையாற்றிலிருக்கும் மதுரை ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயரும் அப்போது ஸ்ரீமான் சின்ன ஸ்வாமி ஐயரிடம் அப்பியாசம் செய்து வந்தார். தந்தையின் பயிற்சி தனயனின் ஆர்வத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தது. மதுரை ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரோடு நெருங்கி அண்மையிலேயே இருந்தவர். ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு ஸங்கீதத்திலுள்ள ருசியை சாஸ்திரியமான முறையில் திருப்பியவர் இவரது தந்தையேயாகும். தந்தையே ஸங்கீதத்துக்கு முதல் குருவாக இருந்தார். பூர்வாங்கமாக அடையவேண்டிய ஸங்கீத விஷயங்களெல்லாம் தந்தையிடம் அடைந்தார். அதோடு பிரபல வித்வான்களான சரப சாஸ்திரிகள், திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர், திருமருகல் நடேசன், புஷ்பவனம், வைத்தியநாதையர், பூச்சி ஐயங்கார், போன்ற சிறந்த அறிவாளிகளுக்கும் ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயருக்கும் தொடர்பிருந்தது. ஸ்ரீமான் பால சுப்பிரமண்யத்துக்கு இது பேருதவியாக ஆயிற்று. பிடில் ஸ்ரீமான் கோவிந்தஸ்வாமிப் பிள்ளையின் வாசிப்பை நன்கு கேட்டு அதன் விசேஷங்களை உணர்ந்தவர் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர். அதோடு காலஞ் சென்ற ஸ்ரீமான் புஷ்பவனம் ஐயரின் பாட்டை நுணுக்கமாகக் கவனித்துச் சுவைத்திருக்கிறார். எனவே ஸ்ரீமான் நாராயண ஸ்வாமி ஐயர் மேலே சொன்னது போன்ற பிரபல வித்வான்களுடைய நடையின் முறையை விவரித்துத் தமது குமாரனுக்கு அவ்வப்பொது எடுத்துச் சொல்வது வழக்கம். தந்தைக்குப் பிரபல வித்வான்களிடம் இருந்த நெருங்கிய பரிசயம் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தின் ஞான வளர்ச்சிக்குப் பலத்தைக் கொடுத்தது. அத்தகைய பெரியோர்களின் ஸங்கீத அம்சங்களைத் தந்தை மூலமாகத் தெரிந்துகொண்டு முயற்சியில் ஈடுபட இது பயன்பட்டது.

முதலில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் தமது தந்தையின் சகாவான ஸ்ரீமான் மதுரை சுப்பிரமணிய ஐயரிடம் உருப்படிகள் பாடம் செய்தார். பள்ளிக்கூடப் படிப்பும் கூடவே நடந்துவந்தது. ஆனால் பள்ளிக்கூடப் பாடங்கள் இரண்டாம் பட்சமாகவே இருந்தன. திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் முதல் பாரத்தில்தான் போய்ச் சேர்ந்தார். அப்போது திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்த ஸாரதிஸ்வாமி சபை மிகத்தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் சென்னையிலிருந்து வந்த பல்லடம் ஸஞ்சீவிராவ் தமது வர்சஸ்தலத்தில் வேணுகானம் செய்துகொண்டேயிருப்பார். ஸ்ரீமான் ஜி.என்.பி. அங்கு போய் உட்கார்ந்துகொண்டு வேய்ங்குழலிலிருந்து வெளிப்படும் ராகங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு ஸ்வரபூர்வமாகப் பாடிப் பழகுவது வழக்கமாயிருந்தது. ராகங்களையும் ஸங்கதிகளையும் ஸ்வரபூர்வமாகக் கிரகித்துக்கொண்டு திரும்பப் பாடிப் பார்ப்பது இவருடைய அப்போதைய இயல்பு. பள்ளிக்கூட வாழ்க்கையிலும் ஸங்கீத அம்சங்கள் உள்ள இனங்களில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு இடமில்லாமல் இருந்ததே கிடையாது. நாடகங்கள், இலக்கிய சங்க ஸங்கீத நிகழ்ச்சிகள் இவைகளில் இவர் தமது 10–வது வயது முதற்கொண்டே ஈடுபட்டு வந்திருக்கிறார். சபைக் கூச்சம் நீங்கி மனோதிடம் வலுப்பட இந் நிகழ்ச்சிகள் அவருக்கு உதவி செய்தன. ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் தமது 10-வது வயதில் பள்ளிக்கூடத்தில் நடத்திய "துருவ" நாடகத்தில் துருவனாகத் தோன்றினாராம். பாடங்கள் பள்ளிக்கூடத்தோடு நின்றன; ஆனால் பாட்டு வீட்டோடும் நிற்கவில்லை. சென்ற இடங்களிலெல்லாம் விடாப்பிடியாகத்தான் நின்றது. இயற்கையில் அமைந்துள்ள சாரீரம், ஸங்கீதத்திலுள்ள மட்டற்ற உத்ஸாகம் இவை வளர்ந்து வருவதைக் கண்ட இவரது தந்தை, பட்டணம் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயரின் நேர் சிஷ்யரான ஸ்ரீமான் குருஸ்வாமி பாகவதரிடம் தமது குமாரனுக்குப் பாடம் போதிக்க ஏற்பாடு செய்தார். அப்போது ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு 30, 40

உருப்படிகள் பாடம் உண்டு. கீர்த்தனைகள் பாடம் செய்து கொண்டிருந்ததோடு கேள்வியும் அதிகரித்தது. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி சபையில் நடைபெற்ற கச்சேரிகள் ஒவ்வொன்றிற்கும் ஸ்ரீமான் ஜி. என். பி. விஜயம் செய்யத் தவறியதில்லை. 1920-ம் ௵ முதல் 1925-ம் ௵ வரையில், அதாவது 15-ம் வயது வரையில் ஹிந்து ஹைஸ்கூலில் படித்தார். 15-ம் வயதில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறியவுடன் சென்னை வெஸ்லி காலேஜில் மேல் படிப்புக்காகச் சேர்ந்தார். 1927-ம் வருஷம் வரை அங்கு படித்துக் கொண்டிருந்தார். 1926-ம் வருஷத்தில் அரியக்குடி ஸ்ரீமான் ராமானுஜையங்கார் திருவல்லிக்கேணிச் சபைக் கச்சேரிக்கு வந்திருந்தபோது அவரிடம் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் பாடிக்காட்டினார். அந்த வருஷத்திலிருந்து ஸ்ரீ ராமானுஜையங்காருடைய சங்கீத நடை ஸ்ரீ ஜி. என். பி. யைக் கவர்ந்தது. 1928-ம் வருஷத்தில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் 'ஆனர்ஸ்' வகுப்பில் சேர்ந்தார். 1928-29-ல் சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் வித்வான் ஸபேசய்யர், சங்கீதப் பிரின்ஸிபல் பதவி தாங்கியிருந்தார். அவர் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தைச் சிதம்பரத்துக்கு வரவழைத்து, மேற்கொண்டு படிக்கவேண்டிய 'ஆனர்ஸ்' பிரிவு, ஸங்கீதம் இரண்டையும் ஒன்று பிணைத்து உருவாக்க ஏற்பாடு செய்தார். ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் அவ்வேற்பாட்டுக்கு உடன்பட்டாராயினும் சிதம்பரத்தில் அவர் 1-மாதத்துக்கு மேல் இருக்கக்கூட வில்லை. சிதம்பரத்திலுள்ள சீதோஷ்ண நிலைமை அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே சென்னை திரும்பிவிட்டார். அந்த வருஷமே தமது படிப்பை முடித்துப் பட்டத்தையும் பெற்றார். உடனே சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முயற்சிகள் செய்தார். ஆனால் அது கைகூட வில்லை. ஆகவே அவர் தமது முழுக் கவனத்தையும் சங்கீதத்தில் திருப்பி விட்டார். 1928-ம் வருஷத்தில் மயிலைக் கபாலீச்வரர் ஆலயத்தில் வித்வான் முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் கச்சேரி நடப்பதாக ஏற்பாடாகி யிருந்தது. ஏதோ சில அசந்தர்ப்பத்தால் அவர் வர இயலாமல் போகவே, அவருக்குப்

பதிலாக ஸ்ரீமான் பாலசுப்பிரமண்யம் கச்சேரி செய்தார். பகவத் ஸன்னிதானத்தில் நடைபெற்ற இக்கச்சேரியே ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தின் முதல் கச்சேரி.

ஸ்ரீமான் பாலசுப்பிரமண்யத்துக்கு இயற்கையில் தெளிந்த ஓட்டமுள்ள சாரீரம், 3 ஸ்தாயிகளிலும், 3 காலங்களிலும் தானம் பாடுவதற்குச் சாதகமான தோரணையில் இவர் அவ்வசதியைப் பெற்றிருக்கிறார். ஆரம்ப காலத்தில் இவருடைய சாரீரம் மட்டற்ற வேகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. பிர்க்காக்களின் போக்கும் கட்டுப்பாடுகளை யெல்லாம் உதறியடித்துக்கொண்டு தான் பீரிட்டெழும். இதற்குக் காரணங்கள் எவை யென்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியமில்லை. ஆனால் இவ்வளவு வேகத்தையும் பரபரப்பையும் இயற்கைச் சக்திகளாகக் கொண்டிருந்த இவருடைய சாரீரம் இன்று கட்டுப்பாடான மாதிரியில் உருவடைந்திருக்கிறது-உருப்படுத்தியிருக்கிறார் என்று சொல்வது பொருந்தும். முதலில் ஸ்ரீமான் ஜி. என். பி. அதிகமான சுருதியில் அதாவது $4\frac{1}{2}$ 5, 6, கட்டை சுருதியில் பாடுவது வழக்கமாகவிருந்தது. நாளா வட்டத்தில் இது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து திட்டமான ஒரு அளவுக்குவந்து கனமடைந்து சேர்ந்தது. ராக ஆலாபனை காலங்களில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தின் சாரீரம் அடையும் நிலை தெளிவு. முக்கியமாக மேல் ஸ்தாயி ஸஞ்சாரத்தின் பொழுது மின்னல் வேகத்தில் இவர் சாரீரம் இயங்கத் தொடங்கும். "அ"காரங்கள் தெளிவு கொண்டவை. அவற்றின் வேகம் பிரமை தட்டச்செய்யும் சக்தி கொண்டது. இந்த வேகம் துடிப்பு இவை காரணமாக சாரீரம் ஓரளவு சுருதியைக்கூடச் சில சந்தர்ப்பங்களில் லட்சியம் செய்யாமல் போய் விடுவதுண்டு. ஆயினும் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் தமது நுண்ணிய பொது அறிவோடு பிரயோகிக்கும் நவீனமான பிடிகள், திருப்பங்கள் முதலியவை மிக்க ரஞ்சகமானவை என்பதைப் பலர் ஏற்றுக்கொள்வார்கள். சுக உணர்ச்சி தமது ஸங்கீத நடையில் முக்கியாம்சமாக இருக்கவேண்டு

மென்ற சிரத்தை இவருக்கு எப்போதும் உண்டு. அதற்கு அனுசரணையாகவே இவர் ராகம் பாடும் முறை, கீர்த்தனைகளைப் பாடும் வகை, பிடிப்பும் பிருவும் நிறைந்த ஸ்வரப் பிரஸ்தாரம் ஆகியவற்றை யெல்லாம் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறார். புதிய விஷயங்களைத் திரட்டி அவற்றைப் பக்குவமாகவும் நாகரிகமாகவும் தமது ஸங்கீத நடையில் பிரயோகிப்பதில் இவருக்குப் பிரத்யேகமாக ஒரு ருசி. ஹிந்துஸ்தானி ஸங்கீத நடையிலுள்ள விசேஷங்களைக் கிரகித்துக் கொள்வதிலும், விசேஷமாக ஹிந்துஸ்தானி ஸங்கீத வித்வான்கள் சாரீரத்தைப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் முறைகளை ஆழ்ந்து கவனிப்பதிலும், ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு ஆரம்ப நாட்களிலிருந்தே அலாதியான ஆசை. சரக்கைச் சரிவரப் பயன் படுத்துவதற்கு அடிப்படை சாரீரம். என்வே அதைக் குறைபாடுகளின்றிச் சாதகப் படுத்தி வைத்திருப்பது அத்தியாவசியம் என்ற நோக்கம் கொண்டவர்களில் ஸ்ரீமான் ஜி. என். பி. யும் ஒருவர்.

ராகங்களிலும் கீர்த்தனைகளிலும் அவற்றின் முக்கியாம்சங்களை மட்டும் விவரிப்பதுடன் நில்லாமல், அந்தந்த ராகங்களுக்குள்ள விசேஷங்கள் பூராவையும் வெளிப் படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உண்டு. உதாரணமாகக் கல்யாணி ராகத்திலுள்ள "ஏதா வுனரா" என்ற ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கீர்த்தனையை எடுத்துக்கொண்டால், அந்தக் கீர்த்தனைக்கு எவ்வளவு சங்கதிகள் பொருந்துமோ அவ்வளவையும் சேர்த்து விடுவார். கல்யாணி ராகத்தின் பல்வேறு பாவ அம்சங்களும் அக் கீர்த்தனையில் இடம் பெற்றுவிட வேண்டுமென்பது இவரது கருத்து. அக்கருத்து வலுவடைந்திருப்பதற்குக் காரணம் இவரது சாரீரத்திலுள்ள 'பேச்சு'.

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் 1928-ம் வருஷ முடிவிலிருந்து கச்சேரிகள் பல செய்திருக்கிறார். ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜையங்கார் கச்சேரிகள் பலவற்றை

இவர் தொடர்ந்து சுவைத்தவர். கச்சேரிகளுக்குப் பொருத்தமாகத் தமது பாட்டு அமைந்ததற்கு ஸ்ரீ. அரியக்குடியை லட்சியமாகக் கொண்டதே காரணம் என்பதும் இவருடைய முடிவு. உல்லாஸ வேலையாக எடுத்துக் கொண்ட ஸங்கீதம் முக்கியமான தொழிலாக உருவடைந்து விட்டதால், முயற்சியும் பொறுப்பும் ஸ்ரீ ஜி. என். பி. க்கு வலுத்து விட்டது. அம் முயற்சி நடந்துகொண்டிருந்த நாட்களில் தான் இவரது வாழ்க்கை ஸினிமாப்பட உலகில் திரும்பியது. கர்நாடக ஸங்கீதத்தைச் சாஸ்திர பூர்வமாக அறிந்தும் வித்வத் விசேஷங்கள் பொருந்தியும் உள்ள ஒருவர் ஸினிமாப் படத்தில் நடிக்க முற்படுவது என்பது 1931–32-ம் வருஷத்தில் எண்ணவும் இடமின்றி யிருந்தது. ஆனால் நாம் எண்ணாமல் இருப்பது நிகழ்வதும் எண்ணுவது நடவாமல் போவதும் இயற்கையல்லவா? எனவே 1932-ம் வருஷத்தில் ஸ்ரீமான் ஜி. என். பாலசுப்ரமணியம் "பாமா விஜயம்" என்ற தமிழ் ஸினிமாப் படத்தில் "நாரத"ராகத் தோன்றினர். பின்னர் 1936-ம் ஆண்டில் "ஸதி அனஸூயா" என்ற படத்திலும் "நாரதர்" வேடத்தில்தான் தோன்றினர். அசல் நாரதரின் கானவிசேஷம் பற்றிப் புராணம் கூறுகிறது. ஆனால் படத்தில் தோன்றும் நாரதர்களுக்கு, ஒன்று படிப்பில்லாமல் இருக்கும்; அல்லது ஸங்கீதத்தில் விசேஷமாக விஷயஞானம் இல்லாமல் இருக்கும். வேஷப் பொருத்தத்துக்கு வேண்டிய தோற்றம் மட்டும் சில நாரதர்களுக்கு அமைந்திருக்கும். ஆனல் "பாமா விஜயம்" "ஸதி அனுஸூயா" ஆகிய இரண்டு படங்களிலும் தோன்றிய நாரதர் ஆங்கிலம் படித்தவர்! பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றவர்! ஸங்கீதத்தில் தெளிந்த ஞானமுள்ளவர்! இவற்றுடன் தோற்றத்திலும் ஸினிமாவின் தேவையைப் பூர்த்தி செய்தவர்! ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் 1936-ம் வருஷத்தில் 'சகுந்தலை'ப் படத்தில் துஷ்யந்தனாகத் தோன்றினர். ஆயினும் இவருடைய செல்வாக்கும், திறமையும் ஓங்குவதற்குக் காரணமாயிருந்தவை மேடைக் கச்சேரிகள்தாம். குடும்பத்தின் தேவைகளின் நிமித்தம்

இவர் தமது தேர்ற்றத்தையும் ஞானத்தையும் திரைப்பட உலகில் திருப்பவேண்டியிருந்தது. இன்றும் இவரது சேவை பட உலகுக்குப் பயன்பட்டுக்கொண்டு வருகிறது.

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்கு அன்று முதல் இன்று வரை தாம் செல்லும் எந்தக் கச்சேரியாக விருப்பினும், அங்கு ஆரம்பம் முதல் முடிவு வரையில் உட்கார்ந்து கேட்பதென்பது வழக்கம். பிறருடைய சங்கீத நடையிலுள்ள புதுமைகளை உணர்ந்து தமது சாரீர நிலைமைக்கு உகந்த வண்ணம் அவற்றை அபி விருத்தி செய்து, மேலும் புதுமையாகப் பிரயோகிக்க வேண்டும் என்பது இவருடைய விருப்பம். ஆனால் பிறர் பாடும் கீர்த்தனைகளையே திருப்பிப் பாடும் முறையைக் கூடியவரை கட்டுப் படுத்திக் கொள்ளவேண்டுமென்ற நோக்கமும் கொண்டவர். நல்ல பேரைச் சம்பாதித்துக் கொண்ட இந்நாளில் கூட ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம், சாரீரம் சரியான நிலையில் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு ஸாதகம் செய்வது வழக்கமாகவிருக்கிறது. ஆராய்ச்சியும் விவேகத்துடன் கூடிய உழைப்பும் இவரிடம் எப்போதும் உண்டு. அத்தகைய இடைவிடாத உழைப்புக் காரணமாக ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் மேல்ஸ்தாயியில் சிரம மில்லாமல் ஸஞ்சாரம் செய்ய வசதி காண்கிறார். தனியாகச் ஸாதகம் செய்யும் காலத்தில் மேல் 'நி', 'ஸ' ஸ்வரங்களைப் போய்த் தொட்டுவிடக் கூடும் என்று அனுபவத்தில் அறிந்த இவர், மேடைக் கச்சேரிகளில் அநேகம் சமயங்களில் 'தைவதம்' வரை எட்டிப் பிடிப்பதை ரஸிகர்கள் கவனித்திருப்பர்.

ஸ்ரீமான் பால சுப்பிரமணியத்தின் பாட்டு விளம்ப காலத்தைவிட மத்திம காலத்தில் விசேஷ கவர்ச்சியை அளிக்கிறது. பழைய உருப்படிகள் பல இவருக்குப் பாடம். ஸ்ரீ தியாகராஜஸ்வாமி, ஸ்ரீ தீட்சிதர் இவர்கள் இயற்றிய ஸாஹித்தியங்கள் பலவற்றை இவர் பாடம் செய்து கச்சிதப்படுத்தியிருக்கிறார். சிட்டையாகவும் சிறப்பாகவும் அவை விளங்குவது தெளிவு. அத்தோடு கீர்த்

தனைகள் பாடம் செய்வதில் இவருக்குப் பிரத்தியேகமாக ஒரு வசதி இயற்கையில் அமைந்திருக்கிறது. "கமலாம்பா பஜரே"- என்ற கீர்த்தனையையும், இன்னும் சில உருப்படிகளையும் இவர் பிரபல வித்வான்களின் கச்சேரிகளில் கேட்டுக் கேட்டே பாடம் செய்து விட்டாராம்! இருப்பினும் இதர உருப்படிகள் விஷயத்திலும் இவருக்குச் சிரத்தை அதிகமாகவே இருந்திருக்கிறது.

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தின் மனசுக்கு ரொம்பப் பிடித்தமான கன ராகங்கள் கல்யாணி, காம்போஜி தோடி ஆகியவையாகும். ஆனால் அபூர்வ ராகங்களிலும் கீர்த்தனைகளிலும் சாதாரணமாக இவருக்குப் பற்று அதிகம். அவற்றைப் பிரபலமாக்கி ரஸிக்கச்செய்ய வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களில் ஸ்ரீமான் பால சுப்பிரமணியமும் முக்கியமானவர். வஸந்த பைரவி, ரஸாளி, ஜோதிஸ்வரூபிணி முதலிய ராகங்களிலுள்ள கீர்த்தனைகளை இவர் அடிக்கடி பாடுவதே இதற்குச் சான்று.

ஸ்ரீமான் பால சுப்பிரமணியத்தின் கச்சேரியின் போக்கு இன்று அநேகம் இளம் பாடகர்களையும், பாடகிகளையும் கவர்ந்திருக்கிறது. இவர் பாடும் உருப்படிகள், கனராகம் இவற்றையெல்லாம் அப்படியே வைத்துக் கொண்டு ஆரம்ப தசையிலுள்ள சிலர் பாட ஈடுபட்டிருப்பதிலிருந்தும், ஸ்ரீ பால சுப்பிரமண்யத்தின் மேடைக் கச்சேரி முறையில் கவர்ச்சி நிறைந்திருக்கிறது என்பது புலப்படும். ரஸிகர்களின் கவனத்தைக் கவர்வதற்குச் சாதகமான அம்சங்களை இவர் கச்சேரியில் பிரயோகிப்பார். ஆனால் அவற்றில் நாகரிகமான அம்சம்தான் முதன்மைபெற்று விளங்கும். அதற்கு ஏற்றுப்போலுள்ள ராகங்கள், கீர்த்தனைகள் இவற்றைத்தான் இவர் பொறுக்கி யெடுத்துக்கொள்வார். முக விகாரங்கள் ஏதுமில்லாமல், கஷ்டப்படாமல் சுலபமாகப் பாடுவது போன்ற உணர்ச்சியைச் சபையினரிடையே உண்டு பண்ணும் திறமையும் இவருக்குண்டு. பக்க வாத்தியக்காரர்களிடத்தில் பக்குவமாகப் பழகுவதில் தேர்ச்சி உடையவர். பாடகருக்கும் பக்க வாத்தியக்காரர்களுக்கும் பரஸ்பரம்

நல்லுணர்ச்சியும், ஒருமைப்பாடும் இருக்கவேண்டியது அவசியம். கச்சேரிகளின் வெற்றிக்குப் பக்க வாத்தியங்களின் ஒத்துழைப்பு எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்த ஸ்ரீமான் பால சுப்பிரமணியம் அதற்கு அனுசரணையாக நடந்துகொள்வது இயற்கை.

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்தின் வாழ்க்கை பொறுப்பு வாய்ந்தது என்பதை முக்கியமாகக் கூற வேண்டும். இவர் ஆரம்பத்தில் பட்டத்தைப் பெறும் லட்சியத்தோடு பாடசாலை, கலாசாலை இவைகளில்படிக்க வேண்டியிருந்தது. அதோடு ஸங்கீதத்திலும் போதிய அப்பியாஸத்தை நடத்திக் கொண்டுவந்தார். கலாசாலைப் பரீட்சைக்கு ஒரு எல்லை உண்டு. அந்த எல்லையை இவர் எய்தி விட்டார்—ஸங்கீதப் பரீட்சை அத்தகையதல்ல. ஒவ்வொரு கச்சேரியும் இவருக்கு ஒரு பரீட்சை தான். ஒவ்வொன்றிலும் தேறவேண்டிய பொறுப்பு இவருக்கிருக்கிறது. இது ஸ்ரீ ஜி. என். பால சுப்பிரமணியத்துக்கு மட்டும் பிரத்யேகம் என்பதில்லை. ஸங்கீதத்தைத் தொழிலாக்கக்கொண்ட ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். அப் பரீட்சைகளில் தேறுவதற்கான யோக்யதாம்சம் வலுப்படுவதிலேயேதான் வெற்றி அடங்கியிருக்கிறது. பரீட்சை என்று கூறும்போது ஒரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும். 1943-44-ம் வருஷங்களில் ஸ்ரீமான் ஜி. என். பால சுப்பிரமணியம் ஸங்கீத வித்வான்களுக்கும், ரஸிகர்களுக்கும் ஒரு பரீட்சையை வைத்துவிட்டார்! அதாவது பல்லவிக்காக எடுத்துக் கொண்டு பாடும் கனராகங்களில் "சுருதி பேதம்" செய்ய ஆரம்பித்தார். இதன் விளைவாக எடுத்துக் கொண்ட ராகத்தின் உருவம் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வேறு களையை அடையும். 'இந்த மாதிரியான பரீட்சைகளுக்கு ராகங்களை உட்படுத்துவது சரியா?' என்ற சர்ச்சை வித்வான்களிடையேயும், ரஸிகர்களிடையேயும் வளர்ந்தது. இதனல் சாஸ்திர ஆராய்ச்சிக்கும், அனுபவ ஆராய்ச்சிக்கும் விசேஷமாக இடம் ஏற்பட்டது. 1944-ம் வருஷம் நடைபெற்ற சென்னை ஸங்கீத வித்வத்

சபை மகாநாட்டில் நிபுணர் - கமிட்டி இப்பிரச்னையை விவாதித்தது. நிறைந்த அனுபவம் பெற்றவர்களால் 'சுருதி பேதம்' செய்யலாம் என்றும், சாஸ்திரத்தில் அதற்கு இடமிருப்பதாகவும் ஒரு முடிவு செய்யப்பட்டது. புத்தி பூர்வமாக ஓர் ஆராய்ச்சியைச் செய்வதற்கு ஸ்ரீமான் ஜி. என். பால சுப்பிரமணியம் கிளப்பிய பரீட்சை காரணமாக விருந்தது.

நிறைந்த படிப்புக் காரணமாக ஸ்ரீமான் பாலசுப்பிரமண்யம் தமது நோக்கத்தையும், மனோபாவத்தையும் விசாலப்படுத்திக் கொண்டவர். அத்தோடு விவேகமாக இடம், பொருளை உணர்ந்து நடந்து கொள்ளுபவர். மரியாதைக் கிரமங்கள் நன்கு தெரிந்தவர். சம்பாஷணையில் சமர்த்தர். சங்கீதமும் ஹாஸ்யமும் ஒன்றையொன்று அனுசரித்திருக்கிறது என்பது ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்திடமும் காண முடியும். நண்பர்களிடமும் இவருக்குப் பக்தி அதிகம். அவர்களது யோசனைகள் எதுவாயிருப்பினும் சீர்தூக்கிப் பார்த்துப் பயனுள்ளதாயிருப்பின் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து அமுல் நடத்துவார். விருந்தினர்களை உபசரிப்பதில் பரம திருப்தி. சிரித்த முகத்தோடு உல்லாஸ மனோநிலையுடன் கவர்ச்சிகரமாகப் பேசுவார். பேச்சின் உட்பொருளை உணர்ந்து பேசுவார்; பேச்சிலும் ஒரு அளவும் க்கட்டுப்பாடும் உண்டு.

ஸ்ரீமான் பால சுப்பிரமண்யத்தின் ஸங்கீதம் தற்கால ருசிக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருப்பது காரணமாக, வாலிப சமூகத்தில் இவரது பாட்டு முக்கியமாகப் பரிமளிக்கிறது. சகல பிரிவினரும் ஸங்கீதத்தில் திருப்தி அடைய வேண்டும் என்ற எண்ணமே இவர் தொழில் விஷயத்தில் திட்டமாக ஒரு கொள்கையையும் பின்பற்றாமல் நடுநிலை வகிப்பதற்குக் காரணமாக இருக்கவேண்டும். ஸங்கீத சாஸ்திர சர்ச்சைகளில் கலந்துகொண்டு அவற்றை உற்றுக்கவனித்துத் தமது அபிப்பிராயத்தையும், காரணங்களையும் எடுத்துரைப்பதில் இவர் பின்வாங்குவது கிடையாது.

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் 1939-ம் வருஷத்தில் திருவாங்கூர் சர்க்காரின் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டார். 1941-ம் வருஷம் எட்டையபுரம் சமஸ்தானத்துக்கும் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டார். காலஞ்சென்ற காயக சிகாமணி ஸ்ரீ எல். முத்தையா பாகவதரிடம் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியத்துக்குத் தொடர்பிருந்தது. அதன் பயனாக இவர் திருவாங்கூர் மன்னர் குடும்பத்தில் கச்சேரி செய்திருக்கிறார்.

இன்று ஸ்ரீமான் பால சுப்பிரமணியத்துக்கு வயது 36 பூர்த்தியாகி 37-நடக்கிறது. பூர்ண ஸங்கீதத்துக்கு வேண்டிய முக்கிய அம்சங்கள் படிந்து, அது இன்னும் சீரிய முறையில் நன்குகனிந்து இனிப்பதற்கான சந்தர்ப்பங்கள் எதிர் காலத்தில் நிரம்ப உண்டு. அப்பயன் ரஸிகர்களுக்கும் கிட்ட வேண்டுமென்பதே பிரார்த்தனை.

## மதுரை ஸ்ரீ. மணி ஐயர்

**"ஸ, ரி, க, ம, ப, த, நி,"**—என்ற இந்த ஸப்த ஸ்வரங்களின் அஸ்தி வாரத்தில் அமைந்தது தான் ஸங்கீத கலாமண்டலம். இம் மண்டலத்தில் எழுப்பப் பெற்றிருக்கும் அற்புதமாளிகைகள் அனந்தம். அவற்றில் சிறியதும் உண்டு; பெரிதும் உண்டு. உருவில் வேற்றுமை கண்டாலும் உறுதியான அஸ்திவாரத்தின் விசேஷத்தை அவை ஒவ்வொன்றிலும் நாம் காணமுடியும். இத்தகைய அற்புத சிருஷ்டிகள் தாம் பிரபல வாக்கேயகாரர்கள் ஆக்கிவைத்துப் போயிருக்கும் கீர்த்தனைகள். ஏழு ஸ்வரங்களில் எழுந்த இம் மாளிகைகளில் வித்வான்கள் நடமாடும் போதுதான் எண்ணற்ற உள்ளங்கள் மெய்ம் மறந்துபோகின்றன! சுருதி வசப்பட்டு ஸ்வரங்களின் ஸ்வரூபம் சித்திரிக்கப்படுகையில் விவரிக்க இயலாத சுக உணர்வு பொங்கித் ததும்புகிறது. ரஸிகர்களிடையே இத்தகைய ரஸானுபவம் ஏற்படவேண்டுமானால் கச்சேரி செய்யும் வித்வான்கள் இவ் விஷயத்தில் கையாள வேண்டிய முறை தெளிவு. ஏழு ஸ்வரங்களுக்கும் அவற்றிற்கு ஏற்றாற்போல் பாடகர்கொடுக்கும் நாதம் சுருதியோடு

வெளிப்படும் போதுதான் ரஸிகர்கள் மனம் கவரப் படுகிறது. அத்தகைய கவர்ச்சி-மார்க்கத்தில் சென்று கொண்டிருக்கும் இன்றைய பாடகர்களில் 'கான கலாதர' மதுரை ஸ்ரீமான் மணி ஐயரையும் குறிப்பிடவேண்டும். நாதத்தின் நய விசேஷங்களை ஆழ்ந்த அனுபவத்தின் மூலம் நிதானித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் மணி ஐயரின் வாழ்க்கை ஸங்கீதத் துறையில் திரும்பிய போது அவருக்கு வயது 9.

ஸ்ரீமான் மணி ஐயர் 1912-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ந் தேதி மதுரையில் பிறந்தார். ஸங்கித சாஸ்திரத்தின் நுணுக்கங்களை அறிந்து, விசேஷமான ஞானம் உள்ளவராக விளங்கிய ஸ்ரீமான் ராமஸ்வாமி ஐயரின் ஏக புத்திரர் ஸ்ரீ. மணி ஐயர். இவருக்குச் சகோதரிகள் மூவர். தாயருக்கு ஸங்கீதத்தில் ஞானம் உண்டு. ஸ்ரீமான் மணி ஐயரின் தந்தை ஸப் கோர்ட்டில் உத்தியோகம் பார்த்து வந்தவர். பிரபல ஸங்கீத வித்வான் மதுரை ஸ்ரீமான் புஷ்பவனம் ஐயர் இவருடைய சகோதரராவார். ஆகவே இதர பிரபல வித்வான்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருப்பது போன்ற இயற்கை வசதிகள் ஸ்ரீமான் மணி ஐயரின் ஸங்கீத வாழ்க்கைக்கும் துணை நின்றிருக்கின்றன. பிள்ளைப் பிராயத்தில் பிறந்த ருசியைத் தம்மோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் பிறருக்கும் பிரயோஜனப்படும் வகையில் செலவிடப் பிரயத்தனம் செய்திருக்கும் முதிய வித்வான்களைப் போலவே மதுரை ஸ்ரீமான் மணி ஐயர், ஆரம்ப காலத்திலேயே ஸங்கிதக் கலை விஷயத்தில் அதிக அக்கறை கொண்டார். முதலில் ஸ்ரீமான் மணி, மதுரையில் உள்ள ஒரு பிரிவுப் பள்ளிக்கூடத்தில் முதல் பாரம் வரையில் படித்தார். கூடவே ஸங்கிதத்தில் அப்பியாஸமும் நடந்துகொண்டு வந்தது. மழவராய நேந்தல் ஸ்ரீமான் சுப்பராமய்யர் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீமான் ராஜம்பாகவதர் என்பவரிடம் தான் ஸ்ரீமான் மணி ஐயர் குரு குல வாஸம் செய்தார். ஸ்ரீமான் ராஜம் பாகவதர் ஸ்வரம் பாடுவதில் சமர்த்தர். அதில் அவருக்



'கர்னகலீத்ரர்'

குப் பிரத்தியேகமான திறமை உண்டு. அவரிடம் ஸ்ரீமான் மணி ஐயர் இரண்டு வருஷ காலம் வரையில் ஸங்கீதப் பயிற்சி பெற்றார். ஸங்கீத சாஸ்திர சம்பந்தமாக உள்ள கட்டுப்பாடுகள், விதிகள், லட்சணங்கள், ராக விசேஷங்கள் இவை அனைத்தையும் தமது தந்தையிடம் அறிந்துகொண்டார். பெற்ற ஞானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும், பெருக்கிக்கொண்ட ஞானத்தை வியாபகப்படுத்துவதற்கும் குருகுல வாஸம் எந்தவகைய உதவிகரமான சாதனம் என்பது தெளிவு. எனவே ஸ்ரீமான் மணி ஐயர் பரம்பரைத் தர்மத்துக்கு விலக்கில்லாமல் முதலில் ஸ்ரீமான் ராஜம் பாகவதரிடமும், அதன் பின்னர் காலஞ்சென்ற காயகசிகாமணி ஸ்ரீமான் எல். முத்தையா பாகவதரிடமும் பயிற்சிபெற்றார். பயிற்சி செய்துகொண்டிருந்த காலத்திலேதான் ஸ்ரீமான் முத்தையா பாகவதர் மதுரையில் "தியாகராஜ வித்தியாலயம்" என்ற பெயரில் ஒரு ஸங்கீதப் பாடசாலையை ஆரம்பித்தார். அதன் ஆரம்ப தினத்தன்றே சிஷ்யராகச் சேர்ந்து பயிற்சியில் இறங்கியவர் ஸ்ரீமான் மணி ஐயர். பாடசாலைப் பயிற்சி தவிர, ஸ்ரீ. ராஜம் பாகவதரிடம் ஒரு நாளும், ஸ்ரீமான் முத்தையா பாகவதரிடம் ஒருநாளுமாகப் பாடம் கேட்டுவந்தார். சாதாரணப் படிப்புக்கும், ஸங்கீத அப்பியாசத்துக்கும் வேற்றுமையிருப்பதைக் கண்ட ஸ்ரீமான் மணி ஐயர், தமது முழுக்கவனத்தையும் ஸங்கீதத்துறையில் திருப்பும் பொருட்டு இரண்டொரு வருஷங்களுக்குள் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திவிட்டார். காலஞ்சென்ற ஸ்ரீமான் புஷ்பவனம் ஐயருக்குச் சங்கீத சாஸ்திர விவகாரங்களைப் போதித்த ஸ்ரீமான் ராமஸ்வாமி ஐயர் அந்த விஷயஞானத்தைத் தமது ஏகபுத்திரருக்குப் புகட்டாமலா இருப்பார்? ஆகவே ஸ்ரீமான் மணி ஐயருக்குச் செழிப்பான ஞான பாவம் ஏற்பட்டது நியாயமானதுதான். பூர்வாங்கமாகப் பெற்றிருக்கவேண்டிய ஞானம், சாஸ்திரோக்தமான குருகுலவாஸப் பயிற்சி இவை முடிந்த சொற்ப காலத்துக்குள்ளாகவே ஸ்ரீமான் மதுரை மணி ஐயர் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துவிட்டார். இன்று நம்மிடையே இளம் பாடகர்கள் என்று ஒரு பாகு

பாட்டைச் சிருஷ்டித்துக் கொண்டு அக்கோஷ்டியில் சிலரைக் கொஞ்ச காலத்துக்கேனும் ஒதுக்கிவைக்கிறோமல்லவா? ஆனால் மதுரை ஸ்ரீமான் மணி ஐயரின் ஸங்கீத வாழ்க்கையில் அத்தகைய நிலைமையொன்று ஏற்பட்டதெனச் சொல்வதற்கில்லை. ஸ்ரீமான் மணி கச்சேரி செய்யத் துவங்கிய காலத்திலேயே இவர் பெற்ற பரம்பரை ஞானத்தின் சிறப்பு தெள்ளெனத் துலங்கிவிட்டதென்று கூற வேண்டும். ஞான வளத்தில் சிறந்த கௌரவத்தைத் தேடிக்கொண்ட ஸ்ரீமான் மணி ஐயர் முதன் முதலாக 1924-ம் வருஷத்தில், அதாவது இவருடைய 12-வது வயதில் கச்சேரிசெய்ய ஆரம்பித்தார்.

சிவகங்கையில் ஸ்ரீமான் மணி ஐயரின் தந்தையின் பள்ளித்தோழர்கள் பலர் இருந்தனர். 1924-ம் வருஷத்தில் ஸ்ரீமான் மணி ஐயர் அங்கு செல்ல நேர்ந்தது. தந்தையின் நண்பர்களின் வீடுகளில் இவருடைய பாட்டு பரிமளித்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அலவாக்கோட்டையில் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்த வைபவத்தில் தான் ஸ்ரீமான் மணி ஐயர் தமது முதல் கச்சேரியைச் செய்தார். அதன் பிறகு தொடர்ச்சியாக அநேகம் இடங்களில் கச்சேரிகள் நடைபெற்றன.

இன்று ஸ்ரீமான் மணி ஐயருடைய சங்கீத நடையில் ஜீவனைத் திகழ்வது இவர் ஸ்வரம் பாடும் முறை. அடுக்கடுக்காக இவர் சேர்த்துத் தொடுக்கும் ஸ்வரங்களின் கோவையிலேயே அநேகம் ரஸிக உள்ளங்கள் லயித்துப் போயிருக்கின்றன. சாரீரத்தில் சுத்தமான 'அ' காரங்கள் பேசவேண்டுமென்றும், 'அதில்லாமல் 'ஏ' 'யா' 'உய்' போன்ற சப்தங்கள் வரக்கூடாதென்றும் அடிப்படையான கோட்பாடுகளை மனதில் வைத்துக்கொண்டுமட்டும் ஸ்ரீ. மணி ஐயருடைய ஸங்கீத நடையை நிதர்னிப்பதற்கில்லை. எப்படி யிருந்தபோதிலும் சுருதியோடு ஒன்றி நாதத்தை வெளியிடவேண்டும் என்ற தீவிர சித்தம் கொண்ட வித்வான்களில் ஸ்ரீ. மணி ஐயர் விசேஷமான ஸ்தானத்தை வகிக்கிறார். தம்முடைய சாரீரத்தெம்புக்கு அனுசரணையாக ஞானத்தின் சிறப்பை எங்ஙனமேனும் காட்டி

விடவேண்டும் என்ற தூய எண்ணங்கொண்ட ஸ்ரீமான் மணி ஐயர், மூன்று ஸ்தாயிகளிலும் பாடும் சக்திகொண்டவர். சுருதியைவிட்டுக் கொஞ்சம்கூடப் பிறழாத நிலைமையில்தான் ரஸிகர்களைக் கவரமுடியும் என்ற திடமான நம்பிக்கை கொண்டவராதலின், ஸ்ரீமான் மணி ஐயர் இவ் விஷயத்தில் அதிகமாகச் சிரத்தை எடுத்துக்கொள்கிறார். ரஸிகர்களது கவர்ச்சிக்குப் பாத்திரமாக விருப்பது சுருதியில் ஒன்றிய நாத பாவம். இந்த நாத விசேஷத்தோடு செய்யப்படும் வேலைப்பாடுகளைச் செவியுறும்போது தான் ஆனந்தம் ஏற்படுகிறது. ஸங்கீதத்திலுள்ள பெரிய பெரிய விஷயங்களைச் சுலபமாகப் புரிந்துகொண்டு அனுபவிக்கக்கூடிய முறையில் பாடுவதுதான் பக்குவமான ஸங்கீதம் என்பது ஸ்ரீமான் மணி ஐயர் தமது அனுபவத்தில் அறிந்த உண்மை. அந்தச் சுவட்டிலேயேதான் செல்லவேண்டுமென்ற நம்பிக்கையும் இவருக்கு உண்டு. ஸங்கீதத்தில் செய்யக்கூடிய கற்பனைகளையும், சிரம சாத்தியமான சாதனைகளையும் வெளியிடும்போது பாடகர்கள் கொஞ்சம்கூடச் சிரமமில்லாமல் அவற்றை முன் நிறுத்துகிறார்கள் என்ற அளவிலேதான் ரஸிகர்களுக்கு விஷயத் தெளிவும், சுகஉணர்ச்சியும் ஏற்படுகின்றன. இதைக்கூடிய வரையில் தமது சக்திக்கேற்றபடி சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் செய்துகாட்டும் ஆற்றல் ஸ்ரீமான் மணி ஐயருக்குஉண்டு. எந்த நிலைமையிலும் சுருதியோடுசேர்ந்த நாதமே எதிர்பார்க்கும் பயனைத்தரும் என்ற எண்ணம் இவரிடம் நிரம்பி நிற்கும். கீர்த்தனைகளுடைய அமைப்பு விசேஷத்துக்கு விரோதமில்லாமலும், அதன் உருவுக்குச் சற்றும் பங்கம் விளையாமலும் எவ்வளவு சங்கதிகளைப் பாடினால் போதுமோ அந்த அளவு பாடினால் போதும் என்பதும், அதிகப்படியான குழப்பங்களை உண்டுபண்ணி அயர்ச்சி தட்டச்செய்வது அழகுக்கு ஹானி உண்டாக்குவது போலாகும் என்பதும், அவருடைய கருத்து. இது இவருடைய மிதமான மனோபாவத்தை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். தேகாரோக்கியம் மட்டில் திருப்திகரமாக இவருக்கிருந்திருக்குமானால், அதனால் இவரது ஸங்கீதம் அடைந்திருக்கக்கூடிய நிலைமையே அடியோடு வேறாக இருந்திருக்கும்.

ஸ்ரீமான் மணி ஐயருடைய சாரீரம் மூன்று ஸ்தாயிகளிலும் இயங்கும் தன்மைகொண்டதாயினும் அதை அவர் ஓர் கட்டுப்பாட்டிற்குள் நிலைபெறச்செய்து எந்தெந்த சந்தர்ப்பத்தில் எந்தெந்த முறை பயன்படுமோ, தற்கேற்பக் கையாளுவார். இனிமை தோய்ந்த நாதம்; திருப்திகரமான கமக விசேஷம்; இவற்றை 'மணி'யாகச் செய்யக்கூடிய மனோதர்மம் நிறைந்த, விறுவிறுப்பான ஸ்வரப் பிரயோகம், அழகான ஸங்கதிகள் முதலிய அம்சங்கள் எல்லாம் ஸ்ரீமான் மணி ஐயரின் பாட்டை 'மணி'யாக்கி யிருக்கின்றன. லய சுத்தத்திலும், உணர்ச்சி பாவத்திலும் ஸ்ரீமான் மணி ஐயரின்பாட்டு உயர்வானதுதான். ஸ்ரீமான் மணி ஐயர் பெரும்பாலும் மத்தியமகால உருப்படிகளையே தமது கச்சேரியில் ஆளுவார். கீர்த்தனைகள் லளிதமாக நகர்ந்து ஓடுவதற்கு ஒத்தாற்போல் அவற்றிற்குச் சங்கதிகளை அமைத்து கனம்கொடுக்கவேண்டிய இடங்களுக்கு மட்டும் கனம் தந்து, சுக உணர்ச்சிக்கு முதல் ஸ்தானம் தருவது அவருடைய வழக்கத்தில் காணப்படும் பிரதான அம்சம். கீர்த்தனையை அடுத்தாற்போல் நிரவல், ஸ்வரம் பாடுவதில் ஸ்ரீமான் மணி ஐயரிடம் காணப்படும் முறை பிரத்யேகமானது. ராகக் கோட்பாட்டின்படி ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்துக்கும் எந்த அளவு ஒலி உண்டோ அதில் ஓரளவுகூட பிசகுவாக்கூடாதென்ற உணர்ச்சி அவருக்கு. ஸ்தானங்களைவிட்டு 'இம்மி'கூட பிறழாமல் இருந்தால்தான் அவருடைய கற்பனையும், மனோதர்மத்தின் வேகமும் தடையில்லாமல் மேற்கொண்டு முன்னேறும். ஸ்வர ஸ்தானங்கள் திட்டமாக சுருதியோடு இணைந்து நிற்கிறதா என்று அவர் அடிக்கடி தம்புராவோடு ஒத்திகை பார்ப்பதிலுள்ள சூக்ஷமம் இதுதான். அவருடைய பாட்டு துண்டு துண்டாக விருப்பினும், ஒவ்வொரு துண்டிலும் ஒளி வீசுவதற்குக் மேலே சொன்ன விஷயமே காரணமாக விருக்கவேண்டும். நிம்மதியாக சாரீர நிலையும் இருந்து நிச்சயமாக ஸ்வர ஸ்தானங்களிலும் நகராமல் நிற்கும் சந்தர்ப்பங்களில் ஸ்ரீமான் மணிஐயருடையபாட்டு

தங்குதடையின்றி ஒரே தொடர்ச்சியாகப் புரண்டு ஓடுவதை நாம் அநேகம் கச்சேரிகளில் கண்டு, கேட்டுச் சுவைத்திருக்கிறோம். ராக ஆலாபனை, கீர்த்தனைகளைப் பாடும் முறை, ஸ்வரப்பிரஸ்தாரம் இவை ஒவ்வொன்றிலும் ஸ்ரீமான் மணி ஐயர் தமக்கென்று ஆக்கிவைத்துக் கொண்டிருக்கும் தெளிவான அடையாளங்களை வைக்கத் தவறுவதில்லை. அவரது மனோதர்மத்தின் செழுமையையும் ஆங்காங்கே நாம் காண முடியும்.

அபூர்வ ராகங்களை ஒவ்வொன்றாகத் தெரிந்தெடுத்து விசேஷமான களையோடு, கவர்ச்சிகரமாகவும், சுலபமாகவும் பாடும் திறமை ஸ்ரீமான் மணி ஐயருக்கு ஆரம்ப காலத்திலிருந்தே அமைந்த சக்தி. முன் பின் கேட்டிராத ராகங்களையெல்லாம் சுவை தட்டும் வண்ணம் பாடுவதோடு, ஏற்கெனவேயே அந்தராகம் வெகுவாக அனுஷ்டானத்தில் இருந்தது போன்ற உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய ஆற்றலும் அவரிடம் நிறைந்திருக்கிறது. ரஞ்சனி, ஜனரஞ்சனி, வாசஸ்பதி, லதாங்கி, போன்ற ராகங்களையெல்லாம் பெரிய உருக்கொடுத்து பிரபல்யமாக்கி, சுலபமாக்கிக் காட்டிய பெருமை ஸ்ரீமான் மணி ஐயரைச் சார்ந்ததாகும். அபூர்வ ராகங்கள்தாம் என்றாலும் அவற்றில் பல்லவிகள் பாடுவதும், சாமான்யமான கன ராகங்களில் அமைந்த பல்லவிகளுக்குப் பாடப்படும் ஸ்வர ஆவர்த்தனங்களைப் போல ஸரளமாக ஸ்வரம்பாடுவதும் கஷ்டமானதல்லவென்பதை நிரூபித்துக் காட்டியவர்களில் ஸ்ரீமான் மணி ஐயருக்கு முக்கியமான பாகம் உண்டு. இவரது ஞானச்சிறப்புக்கு இவையும் உதாரணம்.

அனுஷ்டானத்தில் இன்று இருந்துவரும் ராகங்கள் அனைத்திலும் ஸ்ரீமான் மணி ஐயருக்கு பக்தியும் சுவையும் உண்டு. ஆயினும் அவர் மனது தெவிட்டாத இன்பத்தைப் பருகி லயித்துப் போயிருக்கும் இரண்டு ராகங்களைக் குறிப்பிடுவது அவசியம். காம்போஜி, தோடி ஆகிய ராகங்களே அவை. எத்தனையோ தடவைகள் அவற்றை அவர் பாடியிருக்கிறார்; பாடி வருகிறார்;

இனியும் பாடப்போகிறார்; ஆனாலும் அந்த இரண்டு ராகங்களின் பெயரை உச்சரித்த மாத்திரத்திலேயே ஸ்ரீமான் மணி ஐயரின் ஆத்மானந்தத்தின் எல்லை அவரது முகத்தில் தெள்ளெனத் தெரிந்துவிடும். அவர் உள்ளம் உருகிச் சுவைத்த ராகமான காம்போஜியை அவர் எப்படி சுவைக்கிறாரோ அதேமாதிரி ரஸிகர்களையும் சுவைக்கத்தான் வைக்கிறார். காம்போஜியில் "காணக் கண் கோடி வேண்டும்." என்ற கீர்த்தனையை அவர் ஸர்வமாகப் பாடும் பத்ததியும், அதில் அவர் காம்போஜியின் ஸர்வலட்சணங்களையும் துலங்கச்செய்து நிரவி, ஸ்வரம்பாடும் முறையும் தெவிட்டாத விருந்தென்றால் மிகையில்லை. கோடிக்கணக்கான சந்தர்ப்பங்களில் அதை அவர் பாடினாலும் திரும்பத் திரும்பக் கேட்க வேண்டுமென்ற விருப்பமே மேலோங்கும். மட்டற்ற மகிழ்ச்சியோடு அவர் அனுபவித்துப்பாடும் அப்பாட்டு தனிப்பெருமையோடு மிளிருவது இயற்கை.

ஸ்ரீமான் மணி ஐயர் சாதாரணமாக இப்போதெல்லாம் ஆதார சுருதியாக 1 அல்லது $1\frac{1}{4}$ கட்டையில் தான் பாடுகிறார். ஆரம்பத்தில் அதிக சுருதியில் நின்றுபாடிய அநேக சாரீரங்கள் அனுபவத்தில் மெருகு ஏறிப்படிந்து ஒரு திட்டமான அளவை அடைந்து ஒரே சீராகப் பண்பட்டிருப்பதுபோல ஸ்ரீமான் மணி ஐயர் சாரீரமும் மாறியிருக்கிறது. ராகபாவங்களின் நுணுக்கங்களைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவதோடு கவர்ச்சியையும் ஸ்ரீமான் மணி ஐயர் உண்டு பண்ணுவார்.

இத்தகைய திறமையைப் பிறப்பினாலும், உழைப்பின் மூலமும் தேடிக்கொண்ட ஸ்ரீமான் மணி ஐயருக்கு 1943-ம் வருஷம் தஞ்சையில் "கான கலாதரர்" என்ற பட்டத்தை அளித்தார்கள். ஸங்கீதத்தின் உண்மை மதிப்பை உணர்ந்த ஸ்ரீமான் மணி ஐயர் தன்னடக்கம் நிரம்பப் பெற்றவர்; தமிழிடம் தூயபக்தி கொண்டவர். அரசியல் வாழ்வில் உள்ள விவகாரங்களை அவ்வப்போது

கவனித்துக்கொள்பவர்; சர்வதேசப் பிரச்னைகளின் தன்மையையும், போக்கையும் தெரிந்து கொண்டுவரு பவர். பத்திரிகை படிப்பதென்பது அவருக்கு ரொம்ப காலப்பழக்கம். சட்ட சபை நடவடிக்கைகளையெல்லாம் திட்டமாகத் தெரிந்துகொண்டு நாட்டின் நடப்பைக் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்ற அக்கரை உள்ளவர். கதர் கட்டுவதைக் கடமையாகக் கருதுபவராயினும் கச்சேரிகளுக்குச் செல்லும் காலத்தில் சேலம் ஜரிகை துப்பட்டாவை அழகாக மடித்து போட்டுக் கொள்வதில் அலாதியான ஒரு ஆசை உண்டு! சம்பாஷணை செய்வதில் சமர்த்தர். அடக்கமும், மரியாதையும் எந்த நிலைமையிலும் முன்னெழுந்து தெரியக் கூடிய முறையில் நடந்துகொள்ளும் இயல்பு அவரிடம் தனியான அம்சம். பேச்சில் பதட்டமின்றி பணிவான தோரணையில் சொல்ல வேண்டிய, சொல்ல விரும்பும் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவார். ஸங்கீதத் தொழிலில் உள்ள ஒவ்வொருவருக்கும் லௌகிகமுறை நன்குதெரியுமென்றாலும் மதுரை ஸ்ரீமான் மணி ஐயர் சம்பந்தப்பட்டவரை இவ்வம்சம் ஒருபடி அதிகமென்று சொன்னால் தகும். பாடும் முறை எப்படியிருக்கவேண்டும், அது இன்று எப்படி இருக்கிறது என்ற நிலைமையை நன்கு நிதானித்துத் தெரிந்துகொண்டவர்களில் ஸ்ரீமான்மணி ஐயரை முக்கியமாகக் கூறவேண்டும். பக்க வாத்தியக்காரர்களை அனுசரணையாக வைத்துக்கொண்டு சந்தர்ப்பங்களுக்கேற்ற மாதிரியில் சரக்கை வழங்கத் தெரிந்த அனுபவமும் அவருக்கு உண்டு.

தன்னுடைய குமாரனின் பெயர் ஸங்கீத உலகில் பிராபல்யத்துக்கு வந்து, கியாதி கிட்டியதை நேரில் காணும் பாக்கியத்தை ஸ்ரீமான் மணியின் தந்தை பெற்றிருந்தார். ஸ்ரீமான் மணியின் (1928) 16-வது வயதில் அவரது தந்தை காலமானார். இப்போது இவருடைய தாயார் ஜீவதசையில் இவரோடு மாயவரத்தில் இருக்கிறார்.


1944-ம் வருஷத்தில் ஸ்ரீமான் மதுரை மணி ஐயர் மிகவும் கவலைக்கிடமான நிலைமையில் நோய் வாய்ப்பட்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் சென்னை மாகாண மெங்கும் பரவிய விபரீத வதந்திகளைப் பொய்யாக்கி ஸ்ரீமான் மணி ஐயரின் மதுர கீதம் நெடுங்காலம் ஜீவிக்க ஆண்டவன் துணை செய்தார். ரஸிகர்கள் அன்று கோரியதும், இன்று கோருவதும் அதுவே.

# பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர்

மிருதங்க வித்வான் பாலக்காடு ஸ்ரீமான் டி. எஸ். மணி ஐயரை வித்வான்கள் அனைவரும் பாடகராகவே கருதி "மணி ஐயர்வாள் மிருதங்கம் வாசிக்கவில்லை; மிருதங்கத்தைப் பாடச்செய்கிறார்!" என்று கூறுகின்றனர். அவர்கள் கூறும் முடிவில் துளிக்கூட மாறுதலுக்கே இடமில்லாதபடி அவருடைய வாசிப்பும் ரஸிகர்களது செவியில் பாட்டாகத்தான் ஒலிக்கிறது! இப்படி வித்வான்களும் ரஸிகர்களும் ஒருமுகமாக மிருதங்கம் ஸ்ரீமான் மணிஐயரைப் பாடுவதாகக் கருதும்போது அவரை இசைக்கருவி வித்வான்கள் தொகுதியில் இடம் பெறச் செய்வதைவிட பாடகர்கள் வரிசையில் சேர்ப்பது தானே நேர்மை? பாடகர் வரிசையில் சேர்ப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. வித்வான் ஸ்ரீமணி ஐயருக்குப் பாடவும் தெரியும். இந்த இரண்டு முக்கியமான காரணங்களை முன்னிட்டு, நானும் அவரது வாழ்க்கையைப் பாடகர்களோடு சேர்த்துக் குறிப்பிடுவதே பொருந்தும் என்று முடிவு செய்தேன். மிருதங்க வித்வானயினும் பாடகர் வரிசையில் ஸ்தானத்தை அடையும் வகையில் அவருக்குத் திறமை கிட்டவேண்டுமென்பது கடவுளின் ஆக்ஞை. எனவே பாட்டின் ஒலியும் அவரது வாசிப்பின் நாதமும் ஒன்றிப்போய்விட்டன. இந்த இணையற்ற நிலைமையை எய்தியிருக்கும் ஸ்ரீமான் மணி ஐயர் பிரபலமான வித்வத் பரம்பரையில் தோன்றியவர்.

ஸங்கீத ஞானம் அவருடைய பிறப்புரிமை. ஆகவே இவருடைய ஜீவிய சரிதையை இவ் வெளியீட்டிலுள்ள வித்வான்கள் தொகுப்பில் கடைசியாகக் கொடுத்து 'தீர்மானம்' வைப்பது பொருத்தமல்லவா?

பாலக்காடு ஸ்ரீமான் டி. ஆர். சேஷ பாகவதர் பிரபல ஸங்கீத வித்வான். அவருடைய சிமந்தப் புதல்வர்தான் ஸ்ரீமான் டி. எஸ். மணி ஐயர். இவருக்கு ஒரு சகோதரர்; சகோதரியார் இருவர். பாட்டனாரான ஸ்ரீமான் ராம ஸ்வாமி பாகவதரும் ஸங்கீதத்தில் விசேஷ தேர்ச்சி பெற்று வித்வானாக விளங்கியவர். ஸ்ரீமான் மணிஐயரின் தாயாருக்கும் ஸங்கீத ஞானம் உண்டு. 5—வது வயது பிறந்தவுடன் ஸ்ரீமான் டி. எஸ். மணி ஐயரை அவரது தந்தை சாஸ்திர முறைப்படி பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே ஸ்ரீமான் மணி ஐயருக்குத் தாள வாத்தியங்களில் ருசி பிறந்துவிட்டது. வீட்டில் தகப்பனார் பாடிக்கொண்டிருக்கையில் ஸ்ரீமான் மணி ஐயர் அதற்கு இசைந்தாற்போல தாளங்கள் போடுவதும், லய விசேஷங்களில் நாட்டம் செலுத்துவதும் இயல்பாக விருந்தன. இந்த ருசியை உணர்ந்தார் அவர் தந்தை. அவர் உணர்ந்ததோடுமட்டும் நிற்கவில்லை. இயற்கையில் தன் குமாரனிடம் காணப்பட்ட ருசியை வளர்த்து அதை உருவாக்கவும் ஏற்பாடு செய்தார். உள்ள ருசியை உணர்வதும், அதை உருப்படுத்த உதவுவதும் எவ்வளவு முக்கியம் என்பதை பலன்களிலிருந்து நாம் நன்கு காணமுடியும். அத்தகைய் பயனை நாம் இன்று பாலக்காடு ஸ்ரீமான் மணி ஐயர் அடைந்துள்ள உன்னதநிலையிலிருந்தும் உணர்ந்துகொள்ளமுடியும். ஸ்ரீமான் சேஷபாகவதர் பிரபல வித்வான். தம்மைப் போலவே தமது குமாரனையும் வாய்ப்பாட்டில் திருப்பியிருக்கலாமல்லவா? ஏன் அவ்வாறு அவர் செய்யவில்லையென்றால் அதற்குக் காரணம் உண்டு. குமாரனிடம் கண்ட ருசிக் கேற்றபடி அவருடைய பிற்கால வாழ்க்கையை வளரவிடுவதுதான் விவேகம் என்பதை முற்கூட்டி



ஸ்ரீ பாலக்காடு மணி ஐயர்.

அவர் நிர்ணயித்து விட்டார். இந்தச் சுலபமான மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு எதிர்கால வாழ்க்கையை நிதானித்து வழிகாட்டியவர்கள் கோஷ்டியில் ஸ்ரீமான் மணி ஐயரின் தந்தையையும் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

பள்ளிக்கூடத்தில் படித்த நாட்களிலேயே தாள வாத்தியங்களில் ருசி இருப்பதை நிரூபித்த ஸ்ரீமான் மணி ஐயர் 3, 4 வருஷங்கள் வரைதான் பாடசாலையில் படித்தார். பாடசாலையில் இருந்த போதிலும் அவரது ருசிக்கு இசைந்த மிருதங்க போதனையும் துவங்கி விட்டது. சுமார் 9-வது வயதில் ஸ்ரீமான் சேஷபாகவதர் தமது குமாரனை பாலக்காடு மிருதங்க வித்வான் ஸ்ரீமான் சுப்பய்யரிடம் அழைத்துச் சென்றார். குரு தட்சிணை கொடுத்து கிரமப்படி ஸ்ரீமான் மணி ஐயருக்கு மிருதங்கத்தில் பயிற்சி அளிக்கும்படி ஏற்பாடு செய்தார். ஸ்ரீமான் சுப்பய்யர் குரு ஸ்தானத்தில் இருந்து, ஸ்ரீமான் மணி ஐயருக்கு முதன் முதலில் சாஸ்த்திர முறைப்படி பயிற்சி அளிக்க ஆரம்பித்து மிருதங்கபோதனையில் முதல் பாடமான " ததி-தோம்-னம் "—சொல்லிக் கொடுத்தார்.

இயற்கையில் தாம்கொண்ட ருசிக்கு அனுசரணையாக மிருதங்கப் பயிற்சிக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவே ஸ்ரீமணி ஐயரின் முழுக்கவனமும் மிருதங்க அப்பியாஸத்தில் திரும்பிவிட்டது. பாடசாலையிலுள்ள பற்று கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. மிருதங்கம் வாசிப்பதிலுள்ள ருசி மென்மேலும் வளர்ந்து பெருகியது. பள்ளிக்கூடமும், மிருதங்க அப்பியாசமும் ஏக காலத்தில் நடைபெற்ற காலம் ஸ்ரீ மணி அய்யர் வாழ்க்கையில் குறைவு என்றேதான் சொல்லவேண்டும். ருசிகண்ட காரியத்தில் பூர்ணமாக மனம் ஒன்றுவது சகஜமல்லவா? அவருடைய பெற்றோர்கள் ஸ்ரீமான் மணி ஐயரைப் பாடசாலைக்குப் போகும்படி தூண்டிய முயற்சியெல்லாம் வெற்றிபெறவில்லை. 5-வது வகுப்பில் அப்போது படித்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் மணி ஐயர் மிருதங்கப் பயிற்சி துவங்கிய 2, 3 மாதங்களுக்குள் பாடசாலையை அடியோடு

விட்டு விட்டார். ஸ்ரீமான் சுப்பய்யரிடம் குருகுல வாஸம் செய்துவந்த காலத்தில் ஸ்ரீமான் மணி ஐயர் செய்த ஸாதகம் ஒப்பற்றதாகும். இரவல்ல; பகல் அல்ல; எந்த நேரத்திலும் மிருதங்கத்தோடுதான் அவரைப் பார்க்கமுடியும். கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் மிருதங்கம் வாசிப்பதில் செலவிட்டுவந்தார். ஓய்வு ஒழிவில்லாமல் இவ்விஷயத்தில் முனைந்திருப்பதைக் கண்ட கிராமத்தவர்கள் புகார் செய்யும்படிகூட நேரிட்டதென்றால் அவருடைய உழைப்பு எவ்வளவு உச்சத்தை அடைந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். ஸ்ரீமான் சுப்பய்யரிடம் பாடபோதனை நடந்துகொண்டிருந்த காலத்திலேயே, மற்றொரு உதவிகரமான சந்தர்ப்பம் ஸ்ரீமான் மணி ஐயருக்கு ஏற்பட்டது.

வக்கீல் குடும்பத்தைச் சேர்ந்த ஆலப்புழை ஸ்ரீமான் எல். **எஸ்.** விச்வநாதையர் பி. ஏ., என்பவர் ஸ்ரீமான் மணி ஐயரின் தந்தைக்கு நெருங்கிய நண்பராயிருந்தார். மிருதங்கம் வாசிப்பதில் அவருக்குத் தேர்ச்சி அதிகம். இதை அவர் மனோ உல்லாஸ வேலையாகக் கொண்டிருந்தவர். அவரிடம் ஸ்ரீமான் மணி ஐயருக்குத் தொடர்பு ஏற்பட்டது இயற்கை. ஸ்ரீமான் விச்வநாதையர் மிருதங்கம் வாசிப்பது குறித்து விசேஷாம்சங்களையெல்லாம் ஸ்ரீமான் மணி ஐயருக்கு எடுத்துச் சொல்வதோடு வாசித்தும் காட்டுவார். ஸ்ரீமான் மணி ஐயரை வாசிக்கவும் செய்வார்; அபிவிருத்திகளையெல்லாம் குறிப்பிட்டும் கூறுவார். ஒரே சமயத்தில் இத்தகைய உதவிகள் கிட்டவே ஸ்ரீமான் மணி ஐயரின் ருசியும், ஊக்கமும் பன்மடங்கு ஓங்கின. பயிற்சி வேலைகள் தவிர வீட்டில் தந்தை அடிக்கடி பாடிக்கொண்டிருப்பார். ஸ்ரீமான் மணி ஐயர் தந்தை முன்பு வாத்தியத்தோடு வீற்றிருந்து கூடவே வாசிப்பார். இம்மாதிரியே நடந்த பயிற்சி, 1 வருஷகாலத்துக்குள் உருவடைந்துவிட்டது. தந்தை கச்சேரிகளில் தனயன் பக்கவாத்தியம் வாசிக்கும் பாக்கியமும் வாய்த்தது. வெளியூர் கச்சேரிகளுக்கும் போக ஆரம்பித்துவிட்டார். அப்

போது ஸ்ரீமான் மணி ஐயருக்கு சுமார் 9, 10 வயதுதான் இருக்கும். பாலக்காட்டுக்கு அருகேயுள்ள பலவிடங்களில் ஸ்ரீமான் மணி ஐயர் பக்கவாத்தியம் வாசித்திருக்கிறார். இம்மாதிரி நடந்து வந்தகாலத்தில் ஒரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது. ருசிகரமான சம்பவம். குரு—சிஷ்யத் தொடர்பு எப்படியிருந்திருக்கிறது என்பதற்கும் அச்சம்பவம் ஒர் உதாரணம்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் சிவராமகிருஷ்ண பாகவதர் பாலக்காட்டில் கணபதி கோயிலில் ஒரு ஹரிகதை செய்தார். அன்றைய ஹரிகதையில் ஸ்ரீமான் விசுவநாதையர் மிருதங்கம் வாசித்தார். ஸ்ரீமான் மணி ஐயர் இந்த ஹரி கதையைக் கேட்பதற்காக அகஸ்மாத்தாகச் சென்றிருந்தார். ஸ்ரீமான் மணி ஐயர் வருகையைக் கவனித்த ஸ்ரீமான் விச்வநாதையர் உடனே தம்மிருப்பிடத்தை விட்டெழுந்து ஸ்ரீமான் மணி ஐயரை அந்த ஹரிகதையில் வாசிக்கும்படி கூறி தன்னுடைய மிருதங்கத்தையும் அவரிடம் கொடுத்தார். குருவாக வரித்து பக்தி சிரத்தையோடு நடந்துகொண்ட ஸ்ரீமான் மணி ஐயர், அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய ஹரி கதையில் வாசித்தார். அப்போது அவருக்கு 10 அல்லது 11 வயதுதான் ஆகியிருந்தது. இதையே ஸ்ரீமான் மணி ஐயருடைய முதல் கச்சேரியாகச் சொல்லிவிடலாம். இம்மாதிரியே ஹரிகதைகளுக்கும் தகப்பனாரின் சங்கீத கச்சேரிகளுக்கும் வாசித்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் மணி ஐயரின் திறமை வியாபகமாவதற்கு அதிக காலம் ஆகவில்லை. மிருதங்கத்தில் எவ்வளவு துரிதமாக அவர் திறமையையும், வித்வத்தையும் தேடிக்கொண்டாரோ அதை விடத் துரிதமாக அவருக்குப் பெயரும் புகழும் ஒன்றை யொன்று முந்திக்கொண்டு சந்தர்ப்பங்களாக முன்வந்து நின்றன.

செம்பை ஸ்ரீமான் வைத்தியநாத பாகவதர் முதன் முதலில் ஸ்ரீமான் மணி ஐயரைத் தமது கச்சேரிக்கு வாசிக்க ஏற்பாடு செய்தார். பாலக்காட்டுக்கு 10 மைலுக்

கப்பாலுள்ள ஒரு அக்ரஹாரத்தில் அவருடைய க்ச்சேரி நடப்பதாயிருந்தது. அன்று ஸ்ரீமான் செம்பை வைத்திய நாதையருக்குப் பக்க வாத்தியம் வாசிப்பதாக விருந்த மிருதங்க வித்வான் வருவதற்கு ஏதோ கொஞ்சம் தடங்கல் ஏற்படும்போல் இருந்தமையால் ஸ்ரீமான் மணிஐயரை வாசிக்க வரவேண்டுமென்று ஸ்ரீமான் வைத்தியநாதையர் முன் ஏற்பாடு செய்திருந்தார். அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டார் ஸ்ரீமான் மணி ஐயர். க்ச்சேரிக்குப் போகு முன் முதலில் யார் வாசிப்பதாக ஏற்பாடாகி யிருந்ததோ அந்த வித்வான் மிருதங்கத்தோடு வந்துவிடவே ஸ்ரீமான் மணி ஐயர், பூர்வாங்கமாகப் போட்டிருந்த வித்வானையே மிருதங்கம் வாசிப்பது பொருத்தமென்று எண்ணி தாம் நின்றுவிட்டார். இந்த சம்பவம் அவரது 12-வது வயதில் நடந்ததாகும். அதற்குப் பின்னர் ஸ்ரீ செம்பை பாலக்காட்டிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் நடைபெற்ற க்ச்சேரிகளில் தமக்குப் பக்கவாத்தியமாக ஸ்ரீமான் மணி ஐயரை அழைத்துக்கொள்ளத் துவங்கினார். இதைத் தவிர வெளியிடங்களில் அவ்வப்போது நிகழ்ந்த க்ச்சேரிகளுக்கெல்லாம் ஸ்ரீமான் மணி ஐயர் வாசிக்க போய்க்கொண்டு வந்தார்.

ஸ்ரீமான் மணி ஐயருக்குச் சுமார் 13-வது வயது நடந்து கொண்டிருக்கையில் அவருடைய தந்தை சோழ தேசங்களில் க்ச்சேரிகளையொட்டி ஓர் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார். பக்கவாத்தியம் ஸ்ரீமான் மணி ஐயர் என்று சொல்லத் தேவையில்லை. இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் தஞ்சைக்கு வரவேண்டிய சந்தர்ப்பமும் வாய்த்தது. மிருதங்க வித்வான் தஞ்சை ஸ்ரீமான் வைத்தியநாதையருக்கும், ஸ்ரீமான் சேஷபாகவதருக்கும் வித்வான்கள் என்ற ஹோதாவில் தொடர்பிருந்தது. அதற்கு முன்னதாகவே ஸ்ரீமான் மணி ஐயரின் மிருதங்க வாசிப்பு பற்றி ஸ்ரீமான் வைத்தியநாதையருக்குத் தக்வல் எட்டியிருந்தது. மேலேசொன்ன சமயத்தில் தந்தையும், தனயனும் தஞ்சையில் இரவில் போய்க்கொண்டிருந்த போது ஸ்ரீமான் வைத்தியநாதையரை தற்செயலாக

வழியில் சந்திக்க நேர்ந்தது. ஸ்ரீமான் வைத்தியநாதையர் ஸ்ரீமான் சேஷபாகவதரையும், அவரது குமாரனையும், தமது வாசஸ்தலத்துக்கு வரவேண்டுமென்று அழைத்துச் சென்றார். ஸ்ரீமான் மணி ஐயர் தமது தந்தையாருடன் அங்கு சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் விரும்பியதன்பேரில் ஸ்ரீமான் மணி ஐயர், அங்கு மிருதங்கமும் வாசித்தார். வாசிப்பைப் பொறுத்த சம்பிரதாய விசேஷங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, இருந்த குறைபாடுகளையும் சுட்டி காட்டி, திருத்தி வாசிப்பது எப்படி என்பதையும் தாமே மிருதங்கத்தில் விளக்கிச் சொல்லி விஷயங்களை உணர்த்தினார் ஸ்ரீமான் வைத்தியநாதையர். இச்சம்பவத்துக்குப் பின்னர் ஸ்ரீமான் மணி ஐயர் தஞ்சைக்குச் செல்ல நேரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஸ்ரீமான் வைத்தியநாதையருடைய வாசஸ்தலத்துக்கு விஜயம் செய்யத் தவறியதில்லை. அங்கு ஓரிருநாட்கள் தங்குவதுண்டு. தஞ்சையில் இருக்க நேரும்காலங்களில் மிருதங்கம் வாசிப்பதைத் தவிர வேறு ஜோலியேதும் கிடையாது. ஸ்ரீ வைத்தியநாதையரும் வாத்தியத்தோடு ஆஜராவார். எதிரே ஸ்ரீமான் மணி ஐயர் தமது வாத்தியத்தை இயங்கச் செய்வார். இவ்விதமான தொடர்பு அனுபவத்துக்குச் சிறந்த ஆக்கத்தை அளித்தது.

ஆரம்பகாலத்தில் முதல் ஓரிரண்டு வருஷங்களிலே நிறைந்த திறமையைச் ஸாதக பூர்வமாகத் தேடிக்கொண்ட ஸ்ரீமான் மணி ஐயரின் வாசிப்பு வெகு சீக்கிரத்தில் எல்லா இடங்களிலும் வியாபகமடைய ஆரம்பித்து விட்டது. இவருடைய திறமை மாகாணத் தலைநகரான சென்னைக்கு எட்டவே, எழும்பூர் ஜகந்நாத பக்த சபையார் தங்கள் சபையில் ஸ்ரீமான் மணி ஐயரின் வாசிப்பை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர். சென்னையில் ஸ்ரீமான் மணி ஐயர் முதன் முதலில் செய்த கச்சேரி இதுவேதான். இளம் பிராயத்தில் இருந்த ஸ்ரீமான் மணி ஐயரைக் கச்சேரிக்கு அமர்த்திய எழும்பூர் ஜகந்நாத பக்த சபையார் ஓரளவு சந்தேகத்துடன் சென்னை மிரு

தங்க வித்வான் ஸ்ரீமான் சங்கரமேனனையும் அக் கச்சேரிக்கு அழைத்திருந்தனர். அன்றைய கச்சேரி ஸ்ரீமான் செம்பை வைத்தியநாதையருடையது. ஸ்ரீமான் மணி ஐயரும், ஸ்ரீமான் சங்கரமேனனும் இரண்டு மிருதங்கங்களுடன் அக் கச்சேரியில் வாசித்தனர். ஸ்ரீமான் மணி ஐயருடைய வாசிப்பில் நிறைந்த விசேஷங்கள் பொதிந்து பொங்கியதைக் கண்ட சபையர்களும், ரஸிகர்களும் ஒருங்கே ஆனந்தபரவசமடைந்தனர். இதற்கு அறிகுறியாகக் காலஞ்சென்ற ஜலதரங்க வித்வான் ஸ்ரீ ரமணய்ய செட்டியார் ஸ்ரீமான் மணி ஐயருடைய ஞானத்தைப் பாராட்டி ஓர் பதக்கத்தைப் பரிசாக அளித்தார். இவ் வைபவத்துக்கப்புறம் ஸ்ரீமான் மணி ஐயர் சென்னையில் நடைபெற்ற அநேகம் கச்சேரிகளில் வாசித்தார்.

சென்னை ஸங்கீத வித்வத் சபை மகாநாடு 1926-ம் வருஷம் சென்னையில் நடைபெற்றது. அதை அடுத்துப் பிரபல வித்வான்களின் கச்சேரிகளும் நடைபெற்றன. இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் மணி ஐயருடைய மிருதங்கத்தின் திறமை வித்வத் மண்டலத்தில், பிரமுகர்கள் முன்பாக அரங்கேறிற்று. ஸ்ரீமான் செம்பை வைத்தியநாதையர் ஸ்ரீமான் மணி ஐயரின் திறமையைப் பற்றி பிரஸ்தாபித்து சிபார்சு செய்யவே வித்வத் சபை நிர்வாகிகள் அவர் பக்கவாத்தியம் வாசிக்க இடம் ஏற்படுத்தி கொடுத்தார்கள். வித்வான்கள் நிறைந்த சமாஜத்தில் ஸ்ரீமான் மணி ஐயருடைய வாசிப்பின் மேன்மை திட்டமாகச் சோபித்தது. ருசி கண்டவர்கள் சும்மா இருப்பார்களா? சென்னையில் ஒரு கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசிக்கவந்த ஸ்ரீமான் மணி ஐயருக்கு அவர் வாசித்த தன்மை காரணமாக மேற்கொண்டு 2 கச்சேரிகளுக்குத் தொடர்ந்து வாசிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அப்போது ஸ்ரீமான் பிடாரம் கிருஷ்ணப்பாவின் கச்சேரிக்கும், கோட்டுவாத்தியம் ஸ்ரீமான் நாராயணய்யங்கார் கச்சேரிக்கும் பக்க வாத்தியம் வாசித்து மீண்டும் தமது திறமையை உறுதியோடு நிரூபித்தார் ஸ்ரீமான் மணி.

ஸ்ரீமான் பாலக்காடு மணி ஐயருடைய வாசிப்பின் விசேஷத்தை எழுத்தில் அடக்க முற்படுவது சாத்திய மில்லை. மிகப் பிரமாதமான ஸங்கீத ஞானம் உள்ள அவர், மிருதங்கத்தை இயக்கும் முறை மெய் சிலிர்க்கச் செய்யும் சக்திவாய்ந்தது.

ஸ்ரீமான் மணி ஐயர் தமது மிருதங்கத்திலிருந்து எழுப்பும் துல்லியமான நாதத்தில் திளைக்காத ரஸிகர்கள் உள்ளம் கிடையவே கிடையாது. அவருடைய வாசிப்பைக் கேட்டானந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "நாத உபாஸனை என்கிறார்களே. அதுதான் ஸ்ரீமான் மணி ஐயர் வாசிப்பில் மிதந்துவரும் இன்ப நாதம்" என்றுதான் ஒவ்வொருவரது உள்ளமும் முடிவு கட்டும்.

ஸ்ரீமான் மணி ஐயருடைய வாசிப்பின் பிரதான அம்சம் நாதம்; அதில் உள்ள தெளிவு, விவரம், பாவம் இவைகளும் விசேஷமே. கீர்த்தனைகளை அனுசரித்து அவர் வாசிக்கும் போது பாட்டுக்கும், வாசிப்புக்கும் வேற்றுமையில்லாமல் இரண்டும் ஒன்றேபோல் ஒலிப்பதேன்? சர்க்கரை ஏன் இனிக்கிறது என்று கேட்டால் அதற்குப் பதில் சொல்வது எவ்வளவு சிரமமோ அத்தகையது தான் இந்த அம்சத்தை விளக்க முற்படுவதும். இது அவருக்கு பகவத் அனுக்ரஹத்தால் ஏற்பட்ட விசேஷம். ஆயினும் ஓரளவு இதற்கான காரணத்தை நிதானிக்கவும் இடம் உண்டு. பாடகர் ஒரு கீர்த்தனையைப் பாடும்போது ஒவ்வொன்றாகச் ஸங்கதிகளைப் பிரயோகிக்கிறார் என்றால் அந்த ஸங்கதிகளிலுள்ள நாத பாவம் ஸ்ரீமான் மணி ஐயருடைய சிந்தையில் மின் வெட்டுப் போன்று எட்டி விடுகிறது. உடனே அவருடைய மனம் ஸங்கதிகளில் அடங்கிய நாத விசேஷத்தையும், நயத்தையும் கூர்ந்து கிரஹித்து விரலுக்குத் தந்தி போல் தகவல் அனுப்புகிறது. அதற்கு அனுசரணையாக அவருடைய விரல்கள் மிருதங்கத்தில் கீர்த்தனையில் புகுந்த ஸங்கதிகளின் பாவத்தை அப்படியே சித்தரித்து

விடுகின்றன. கீர்த்தனையில் கொடுக்கப்படும் ஸங்கதிகளை முதலில் கிரஹித்துக்கொண்டு, அடுத்த கணமே அதன் நாத அமைப்புக்களை நிர்ணயித்து சப்தங்களை எழுப்புவது என்ற அம்சம் இன்று ஸ்ரீமான் மணி அய்யரின் வாசிப்பில் தான் நன்கு புலனாகிறது. ஸங்கதிகளைப் பாடகர் பிரயோகித்த மாதிரியே மிருதங்க வாசிப்பில் இடம் பெறச் செய்வதுசாத்தியம். ஆனால் அதிலடங்கிய சப்த ஸ்வரூபத் தோடு இடம்பெறச் செய்வதில்தான் ஸ்ரீமான் மணி ஐயர் நிபுணத்வத்தை அடைந்து விளங்குகிறார். பாவத்துடன் வாசிப்பு ஒன்று படுவதாலேயே ரஸிகர்களிடையே சுக உணர்ச்சியை எழுப்ப முடியும் என்பது ஸ்ரீமான் மணி ஐயர் அனுபவத்தில் கண்ட உண்மை. அந்த அனுபவத்தின் முதிர்ச்சியே அவருடைய வாசிப்பின் சிகரம். பாடகர் கொடுக்கும் கற்பனைக்கும் முந்திக்கொண்டு அவர் அப்படியே அதை வாசிப்பதிலுள்ள திறமைக்கு இணைகூறுவது கடினம். அவருடைய தெள்ளிய ஞானமும், நுட்பமான அறிவுமே இதற்குக் காரணம். ரஸிகர்களுடைய மனப் பண்பாட்டை உணர்ந்து, சமய சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு சரக்கை விநியோகிப்பதிலும் அவருடைய சாமர்த்தியம் அபாரம், சபையில் உள்ளவர்களுடைய கவனம் பூராவையும் கச்சேரி மேடை மீது இழுத்துக்கொண்டு மனங்கவர்ந்த நிலைமையில் மனம் குளிரும் வகையில் வாசிப்பின் நடையை நிர்மாணிப்பதில் நிகரில்லாத சக்தியைக் கொண்டவர். எந்த சந்தர்ப்பத்தில் எதைச் செய்தால் ரஸ உணர்ச்சிக்குப் பொருத்தமாயிருக்கும் என்பதை அறியும் ஆற்றலும் அவருக்கு உண்டு. எந்த நிலைமையிலும் கச்சேரியில் சோர்வோ, சுணக்கமோ தட்ட இடம் கொடுக்கக்கூடாது என்று சபையின் நாடியை அவ்வப்போது பார்த்துக் கொண்டு செவிகளில் இன்ப நாதத்தை நிரப்பும் திறமை கொண்ட ஸ்ரீமான் மணி ஐயரின் வாசிப்பைச் சுருக்கமாக வர்ணிக்கவேண்டுமானால் அதற்கு பிரபல ஐ. ஸி. எஸ். அதிகாரியும், ஸங்கீதத்தில் சிறந்த ஞானமுள்ளவருமான ஒருவர் குறிப்பிட்ட கருத்தைத்தான் நான் சொல்ல வேண்டும். அவர் சொன்னார் :—" பிரும்மா என்றைய தினத்

தில் மிருதங்க வாத்தியத்தைச் சிருஷ்டித்தாரோ அதே தினத்தில் மிருதங்கத்தை வாசிப்பதற்கென்று ஸ்ரீமான் மணி ஐயரையும் சிருஷ்டித்திருக்க வேண்டும்.'' ஆம், ஸ்ரீமான் மணி ஐயர் இன்றைய சங்கீத உலகத்தில் ஒரு அற்புத சிருஷ்டிதான். அவரது மிருதங்கம் பக்க வாத்திய மாக அமையும்போது கச்சேரி செய்யும் வித்வான்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது; ஸ்ரீமான் மணி ஐயரின் மிருதங்கச் சேர்க்கையில் பாட்டுக்கள் சோபை பெருகின்றன. இந்த இரண்டு விசேஷங்களும் ஒன்று சேருகையில் ரஸிகர்களுடை ரஸானுபவ உணர்ச்சியோ உச்சத்தை அடைகிறது.கச்சேரிகளில் சாதாரணமாகக் கண்கூடாகக் காணும் ஒரு விஷயத்தையும் குறிப்பிடலாம். பல்லவிக்கு முன்ன தாகவோ, அல்லது அதை அடுத்தோ மிருதங்க வித்வான்களுக்குத் தனி ஆவர்த்த சந்தர்ப்பம் கொடுக்கப் படுகிறது. அத்தகைய நிலைமையில் ஸினிமாக் காட்சிகளில் இடைவேளை விடும்போது எழுந்து வெளிப்படுவது போல அநேகம் கச்சேரிகளில் ரஸிகர்கள் இருப்பிடத்தைவிட்டுக் கிளம்பி சபைக்கு வெளியே காற்றோட்டமாக உலவ முற்படுவதைக் காண்கிறோமல்லவா? இது ஸ்ரீ மணி ஐயர் தனி ஆவர்த்தம் வாசிக்க நேரும் சந்தர்ப்பங்களில் நேருவதில்லை. ஆனால் தனி ஆவர்த்தத்திற்கு முன்னால் வெளியே இருந்தவர்களெல்லாம் கூட ஸ்ரீமான் மணி ஐயர் 'தனி' வாசிக்கிறார் என்ற விநாடியில் சரிசாரியாகச் சபைக்குள் பிரவேசிக்கின்றனர். இது ஏன்? ஆரம்பத்தில் சொன்ன ஒரே காரணம் தான்.

அவரது மிருதங்கத்திலிருந்து எழும் இன்ப ஒலி ரஸிகர்களது கவனத்தையும், கருத்தையும் காந்தம்போல் பற்றி இழுப்பதற்கு இதைத்தவிர அதிகமாக ஒன்றையும் குறிப்பிடத் தேவையில்லை. ஸ்ரீ. மணி ஐயரின் தனி மிருதங்கக் கச்சேரி நடக்குமென்று ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தினால் அதை ரஸிக்கக் கூடுபவர்களின் தொகை மிகப்பெரிதாக விருக்கும் என்று திண்ணமாகச் சொல்லிவிட முடியும். இத்தகைய "நாத மணி"யைத் திருவாங்கூர் சமஸ்

தானம் 1940-ம் வருஷத்தில் தங்களுடைய கலாமண்டபத்திற்கு அழகு செய்ய ஈடுபடுத்திக் கொண்டது அதற்கு சிறந்த கௌரவம்; அதிருஷ்டம்.

சிறந்த படிப்பாளிகளிடம் கூட நாகரிகப் பண்பாட்டைக் காண முடியாமல் இருக்க நேருவதுண்டு. ஆனால் ஸ்ரீமான் மணி ஐயருடைய பழக்க வழக்கங்களிலிருந்து அவர் சிறந்த கலாசாரத்தைப் பின்பற்றுபவர் என்பதை எடுத்த எடுப்பிலேயே கண்டு கொள்ளலாம். இதுவும் அவருடைய பிறவியில் அமைந்த குணவிசேஷம். ஆழ்ந்த கருத்துடையவர் என்பதை அறிவுறுத்தும் குறு குறுத்த பார்வை; வாசிப்பிலுள்ள விவரம், தெளிவு இவற்றை போலவே பேச்சு; வருபவர்களுடைய நோக்கத்தைக் கணப் பொழுதில் உணர்ந்து கொண்டு அதற்குத் தம்மை தயார் படுத்திக்கொள்வதிலுள்ள திறமை; பெரிய பெரிய சிக்கலான விஷயங்களையும், பிரச்னைகளையும சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல்; தன்னடக்கம்; சுயமதிப்பு, ஊக்கத்தையும், சுவையையும் தரும் வண்ணம் சம்பாஷணை; இவ்வளவு குண விசேஷங்களும் ஸ்ரீமான் மணிஐயருடைய உயர்வை மணம் பெறச் செய்கின்றன. இவை அனைத்துக்கும் சிகரம் வைப்பது போன்று விளங்குவது அவருடைய தேசீய உணர்ச்சி. கதர் உடுத்துவதைக் கடமையாக மதிப்பவர். பத்திரிகை படிப்பது அவருடைய நித்யானுஷ்டங்களில் ஒன்று. ஆர்பாட்டங்களிலோ, ஆடம்பரங்களிலோ மனதைச் சிதற விடாமல் இடம், பொருள் இவற்றிற்கு ஏற்றுப்போல் குறித்த காலத்தில் குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்றும் இயல்பு கொண்டவர்.

ஸ்ரீமான் மணி ஐயரின் வாழ்க்கையை "மணி"யாகச் செய்வதற்கு இன்னும் ஏதேனும் வேண்டுமா? வாசிப்பிலே இன்ப ஒலியும், வாழ்க்கையிலே தூய ஒளியும் கொண்ட ஸ்ரீமான் மணி ஐயர் கர்நாடக ஸங்கீத உலகத்தின் "திலகம்" போல் விளங்க வேண்டுமென்பது தான் ஒவ்வொருவருடைய விருப்பமும்.

Printed at The Indian Express Branch Press, Madras.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| | ஜனநாயகப் பிரச்னைகள் | ... | 0 | 8 |
| 27. | என் தந்தையார் | ... | 0 | 8 |
| 28. | புரட்சி முரசு | ... | 0 | 8 |
| 29. | இன்றைய தமிழ் வசன நடை | (பிரதிகள் கைவசமில்லை) ... | 1 | 0 |
| 30. | கோயிற் பூனைகள் | ... | 0 | 8 |
| 31. | ஹாஸ்யக் காட்சிகள் | ... | 0 | 8 |
| 32. | கன்னியர் வீரம் | ... | 0 | 8 |
| 33. | பெண்களுக்கு | (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 6 |
| 34. | நிர்மாணத் திட்டம் | ... | 0 | 6 |
| 35. | ஜெய் ஹிந்த் டயரி | ( „ ) | 1 | 8 |
| 36. | அழகை வெறுத்த அழகி | ... | 0 | 8 |
| 37. | இறைமாட்சி அல்லது அரசியல் | ... | 1 | 4 |
| 38. | உணவின் ரக்ஷியம் | ... | 0 | 8 |
| 39. | ஸங்கீத நவமணிகள் | ... | 1 | 0 |
| 40. | கலையும், ரஸிகனும் | ... | 0 | 12 |

**(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)**

**எல்லாத் தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏஜெண்டுகளிடமும்; மதுரை, கோயம்புத்தூர், சேலம், பெங்களூர், திருவனந்தபுரம் கிளைக்காரியாலயங்களிலும்; எக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ஸ்டால்களிலும் கிடைக்கும்.**

விலை குறைந்தவை

★

தினமணி வெளியீடுதான்

ஆனல்

விஷயம் நிறைந்தவை

பத்திரிகைகளும் புஸ்தகப் பிரியர்களும்
ஒருங்கே புகழும் வெளியீடுகள்

கருத்தைக் கவரும்
பொருள்வளம்

★

கண்ணைக் கவரும்
கட்டடம்

ஒவ்வொரு வீட்டிலும் ஓர் அழகான புஸ்தகாலயம்
அமைத்துக்கொள்ள இது தருணம்.